

# வத்துகாமம்

## அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்

255.32
வத்து
SLIPR

## மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

06-06-2008

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான முகப்புத் தோற்றம்



2004 இல் முத்துமாரியம்மன் முதலாவது சித்திரத்தேர் பவனி





வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்க உறுப்பினர்களுடன் மாரிமுத்துச் செட்டியார் (தலைவர் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை)



2000ஆம் ஆண்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியீட்டு விழா



1928முதல் 2004 வரை கதிரேஷன் ஆலய முகப்புத் தோற்றம்



பால்குட பவனி

உ

சிவமயம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## வத்துகாமம் சைவமுன்னேற்றச் சங்கம்

## பிரச்சாரப் பிரிவின் வெளியீடு



## வத்துகாமம்

## அருள்மிகு

## ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய

# கும்பாபிஷேக சிறப்புமலர்

## 06.06.2008

உ

சிவமயம்

# சைவமுன்னேற்றச் சங்க நூல் வெளியீடுகள்

- 1991ம் ஆண்டு - சிவராத்திரி மகிமை
- 1992ம் ஆண்டு - திருமுறைத் தோத்திரம்
- 1993ம் ஆண்டு - விநாயகர் அகவல்
- 1995ம் ஆண்டு - இந்து நாதம்
- 1996ம் ஆண்டு - திருவெம்பாவை
- 1996ம் ஆண்டு - திருப்பள்ளியெழுச்சி
- 1997ம் ஆண்டு - விநாயகர் அகவல் (இரண்டாம் பாகம்)
- 1997ம் ஆண்டு - கந்தசஷ்டி கவசங்கள் ஆறு
- 1999ம் ஆண்டு - இந்து வழிபாடு
- 2000ம் ஆண்டு - வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகச் சிறப்புமலர்
- 2002ம் ஆண்டு - திருவருட்பயன் (வினாவிடை)
- 2002ம் ஆண்டு - சபரி தரிசனம்
- 2002ம் ஆண்டு - நாயன்மார் வரலாறு
- 2003ம் ஆண்டு - அமுத சுரபி அறிவொளி காலாண்டு மலர்கள்
- 2004ம் ஆண்டு - அமுத சுரபி அறிவொளி காலாண்டு மலர்கள்
- 2005ம் ஆண்டு - அமுத சுரபி அறிவொளி காலாண்டு மலர்கள்
- 2006ம் ஆண்டு - சைவ சமய வினாவிடை
- 2007ம் ஆண்டு - சிவ மகிமை
- 2008ம் ஆண்டு - வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய கும்பாபிஷேகச் சிறப்புமலர்

உ
சிவமயம்

# நுழைவாயிலில் . . . . .

## ஆசிச் செய்திகள்


❋ இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி v

❋ ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களின் ஆசிச்செய்தி vi

❋ பிரதிஷ்டா குருக்களின் ஆசிச்செய்தி vii

❋ ஆலய பிரதமகுருவின் ஆசிச்செய்தி viii


## வாழ்த்துச் செய்திகள்
(அமைச்சர், பிரதியமைச்சர்கள்)


❋ கௌரவ. ஆறுமுகன் தொண்டமான் ix

❋ கௌரவ. புத்திரசிகாமணி xi

❋ கௌரவ. சச்சிதானந்தன் xii

❋ கௌரவ. பொ. இராதாகிருஷ்ணன் xiii

❋ கௌரவ. மதியுகராஜா xiv

❋ இந்து சமய கலாசார அமைச்சின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனின் வாழ்த்துச்செய்தி xv

❋ கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களின் வாழ்த்துச்செய்தி xvi

❋ தினக்குரல் S. P. சாமி அவர்களின் வாழ்த்துச்செய்தி xviii

❋ கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி xix

❋ கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி xx

❋ ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத் தலைவரும் சைவாபிமானிகள் சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி xxi

❋ வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கப் பொதுச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி xxiii

❋ வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கப் பொருளாளரின் வாழ்த்துச்செய்தி xxiv

❋ ஸ்ரீ கதிரேசன் ஆலயப் பஞ்சாயத்தாரும் சைவமுன்னேற்றச் சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி xxv

* வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கப் பொதுச் செயளாளரின் வாழ்த்துச்செய்தி xxvii
* சைவ முன்னேற்றச் சங்கப் பிரச்சாரப் பிரிவு உத்தியோகத்தரின் வாழ்த்துச்செய்தி xxix
* சித்தாயுள் வேத வைத்தியர், ஜோதிட விற்பன்னரின் வாழ்த்துச்செய்தி xxx
* முன்னாள் சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் டாக்டர் வி. கனகரெத்தினம் அவர்களின் வாழ்த்துச்செய்தி xxxii
* முன்னாள் சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் கணேசமூர்த்தி அவர்களின் வாழ்த்துச்செய்தி xxxiii
* இதழாசிரியரின் இதயத்திலிருந்து சில துளிகள் ....... xxxiv

* திருத்தல வரலாறு - *மகேஸ்வரி ராமதாஸ்* 01
* ஸ்ரீ கதிரேசன் திருவூஞ்சல் பாமாலை 07
* ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான திருத்தல வரலாறு - *மகேஸ்வரி ராமதாஸ்* 09
* ஸ்ரீ முத்துமாரியம்பாள் திருவூஞ்சல் பாமாலை 16
* முருகப் பெருமானின் திருமேனித் தத்துவ விளக்கம் - *M.R. சாந்தாதேவி* 18
* முதல்வணக்கம்! எந்தன் முதல்வனுக்கே!! - *S.நல்லைநாதன்* 21
* அல்லல்கள் போக்கிடும் ஆஞ்சநேயர் - *A.S. இராதாகிருஷ்ணன்* 26
* திருவிளக்கு வழிபாடு - *செல்வி ஜெயந்தி ராமதாஸ்* 29
* நவக்கிரக வழிபாடு - *செல்வி செல்லத்துரை பரமேஸ்வரி* 33
* சைவப் பணியில் சைவ முன்னேற்றச் சங்கம் 37
* மாண்புறும் பொதுப்பணிச் சேவையாளர் திரு. G. சிவராஜ் 39
* மாண்புறும் பொதுச் சேவையாளர் திரு. V. வீரசிங்கம் 40
* காலத்தின் காவிய நாயகன் அமரர் A.V. சுப்ரமணியம் 42
* இறைபணியாளர் அமரர் S. ரவீந்திரன் 47
* அறப்பணி புரிந்திட்ட அமரர் N. ஆனந்தராஜ் 49
* பஞ்ச புராணங்கள் 50
* புகைப்படங்கள் உதவி (ஊடகப் படப்பிடிப்பாளர்) எஸ். ராமதாஸ் J.P.

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5613805*
*Fax -2361438*
*Email - rkmcey@eureka.lk*
*rkmcey@gmail.com*

## ராமகிருஷ்ண மிஷன் தலைவர்
## சுவாமி சர்வரூபானந்தா அவர்களின்

# ஆசியுரை



கண்டி, வத்துகாமம், 06.06.2008 அன்று நடைபெற இருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலய மஹா கும்பாபிஷேகம் சீரும் சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனின் அருளையும், ஆசியையும் வேண்டுவதோடு என் அன்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைய விஞ்ஞான பொருளாதார முன்னேற்றத்தில் தலைசிறந்து விளங்கும் நாடுகள் பல அமைதியைத் தேடி ஆன்மீகத்தை நாடுகிறது. அதேபோன்று தனிமனிதன் தன்னுடைய அறிவாற்றலிலும் பொருளாதாரத்திலும் மற்றவர்கள் போற்றும்படியாக முன்னேறி இருந்தபோதிலும் ஆன்மீகத்திலும், உயர்ந்த எண்ணங்களிலும், கொள்கைகளிலும் முன்னேற்றம் அடையாததால், சமுதாய வாழ்க்கையில் வெற்றி பெற்றிருந்தாலும் தன் சொந்த வாழ்க்கையில் தோல்வியடைந்து விட்டான். சமய வாழ்க்கையும் ஆன்மீக வாழ்க்கையும் மட்டும்தான் ஒரு மனிதனுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் உண்மையான முன்னேற்றத்தையும் கொடுக்க முடியும்.

அப்படிப்பட்ட இறையுணர்வை வளர்க்கவே கோயில்களும், திருவிழாக்களும், ஏனைய சமய அனுட்டானங்களும் நமது முன்னோர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இக் காரணத்தினாலேயே 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியும் உருவாயிற்று. இன்றைய உலகம் விஞ்ஞான பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளது போன்று ஆன்மீகத்திலும், நல்லெண்ணங்களிலும் முன்னேறினால்தான் மனித சமுதாயம் அமைதியுடனும், மனமகிழ்ச்சியுடனும் வாழமுடியும். பாமர மனிதனை பண்புள்ளவனாக்குவதும், பண்புள்ளவனை தெய்வமாக்குவதும் தான் சமயம் என்று சுவாமி விவேகானந்தர் கூறினார்.

அனைவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ, எல்லாம் வல்ல ஸ்ரீ கதிரேசனின் அருளை வேண்டுகிறேன்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி!*

சுவாமி சர்வரூபானந்த
*(சுவாமி சர்வரூபானந்த)*
*தலைவர்.*

*கொழும்பு - 6*
*21.05.2008*

சர்வதேச இந்துமத குருபீடம்
INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDA
*(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)*
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
(தம்பையா சத்திரம்)
SRI SITHTHI VINAYAKAR THEVASTHANAM
30, St. Anthony's Mawatta, Colombo 13. T.P: 2433468 Cell : 0722 - 422239 E-Mail : iyappathasan@yahoo.com

'சர்வதேச இந்துமத குருபீடாதிபதி'
கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்

GURU PEEDATHIPATHI
DR. SRI IYAPPATHASAN SAMBASIVA SIVACHCHARYAR J.P

# அருளாசிச் செய்தி



**ச**கல செல்வங்களும் பொலிந்துவிளங்கும் இலங்கை மணித் திருநாட்டின் மத்திய மாகாணத்தில் இயற்கை எழில்கொஞ்சும் மலைவளம், நிலவளம், நீர்வளம் மனிதப் பண்பாட்டு வளம் ஒருங்கே அமையப் பெற்ற வத்துகாமம் என்னும் பதியில் அருளாட்சி புரியும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு புதிய ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவுள்ளது. அறிந்து சந்தோஷம்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற முதுமொழிக்கமைய வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கத்தினரின் ஏற்பாட்டில் பொதுமக்களின் பேராதரவுடன் அருள்மாரி வாரி வழங்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு அழகிய ஆலயமும், முருகப் பெருமானுக்கும் தனியான ஆலயத்தை அழகுற அமைத்து சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பணியாற்றும் ஆலய பரிபாலன சபையினருக்கும், சைவாபிமானிகள் சங்கத்தினருக்கும் பணவுதவி, பொருளுதவி புரிந்த சகல அடியார்களுக்கும் எல்லாம் வல்ல கலியுகவரதனாகிய ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் திருவருள் என்றென்றும் கிடைக்க இறைவன் திருவடிகளைப் பிரார்த்தித்து எமது பூரண அருளாசிகளை வழங்குவதில் மனநிறைவு கொள்கிறோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி!*

**ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்**
*சர்வதேச இந்துமத குருபீடாதிபதி*

உ
சிவமயம்

# பிரதிஷ்டா குருவின் அருளாசிச் செய்தி

இலங்கைத் திருநாட்டின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கண்டி வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத கதிர்வேலாயுத சுவாமி ஆலய அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது அறிந்து மனமகிழ்ச்சியடைகிறோம்.

பழைய ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கலைவண்ணத்துடன் ஆலயம் அமைப்பதற்கு இறைப்பணியாற்றிய வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கத்தினருக்கும், ஆலய பரிபாலன சபையினருக்கும் தொண்டுகள் புரிந்த அடியார்களுக்கும் முருகப் பெருமான் திருவருட் கடாட்ஷம் கிடைக்கவேண்டி இறைவனைப் பிரார்த்தித்து கும்பாபிஷேக பிரதம குருவாக இருந்து நடாத்திவைக்கும் பாக்கியம் எமக்கும் கிடைத்துள்ளது என்பதனையும் மனநிறைவோடு தெரிவித்து சகலருக்கும் முருகன் அருள்கிடைக்க பூரண அருளாசிகளை வழங்குகிறேன்.

*சுபம்*
*''தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே''*


**கலாநிதி சிவப்பிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்**
*பிரதிஷ்டாகுரு, பிரதிஷ்ட கிரியாரெத்தினம்,*
*(சர்வதேச இந்துமத குருபீட யாழ். மாவட்டத் தலைவர்)*

*'சிவானந்த பவனம்'*
*முருகமூர்த்தி வீதி,*
*சங்கானை.*

உ
சிவமயம்

# ஆசியுரை

இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தில் கல்வியும், செல்வமும் சிறந்து விளங்கும் வத்துகாமம் என்னும் புண்ணியஷேத்திரப் பகுதியில், கலியுக வரதனாம் கந்தப் பெருமான், தன்னை நாடிவருகின்ற பக்தர்களின் மனமறிந்து வேண்டுவோர்க்கு வேண்டுவன வளங்கவென ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியாக எமது ஆலயத்தில் எழுந்தருளி இருக்கின்றார்.



கந்தனின் அவதார நோக்கம் சூர சம்காரமாக இருப்பினும், அவர் தன் அடியார்களிடம் கொண்ட அன்பின் காரணமாக வேண்டுகின்ற வரங்களை எழிதில் வழங்கிவிடுகிறார். இதனால் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள இனத்தவரும் இவரை வழிபடுவதில் கூடிய ஆர்வம் காட்டுகின்றனர். எப்போதும் இறைவழிபாட்டில் எவ்வித சந்தேகங்களுமின்றி முழுமனதுடன் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் நாம் வேண்டுதல்களை மேற்கொள்ள வேண்டும்.

ஆலய பூஜைகளில் நித்திய பூஜை, நைமித்திய பூஜை என குறிப்பிடுவர். நித்தியம் என்றால் தினந்தோறும் நடைபெறுகின்ற பூஜைகள் ஆகும். நைமித்தியம் என்றால் விஷேட விழாக்களைக் குறிக்கும். தினந்தோறும் செய்கின்ற பூஜைகளில் சிறு தவறுகள் நேர்ந்தால் அதனை நிவர்த்தி செய்ய வேண்டி மகோற்சவங்களை நடாத்துகின்றோம். இந்த மகோற்சவங்களிலும் தவறுகள் நேர்ந்தால் இதனை நிவர்த்தி செய்யுமுகமாகவே மகா கும்பாபிஷேகங்களை நடாத்துவது வழக்கம். இது ஒவ்வொரு ஆலயத்திலும் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட்ட வேண்டிய ஒன்றாக இருக்கின்றது.

இந்தக் கும்பாபிஷேக கிரிகைகளில் நிறைந்த ஹோமங்கள், சாந்திகள் என நிறைய பூஜைகள் உள்ளன எனவேதான் கும்பாபிஷேகம் பெருஞ்சாந்திவிழா எனும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகின்றது.

எனவே இப்படியான கும்பாபிஷேகக் கிரியைகளை முறைப்படி வேத ஆகமங்களைக் கற்றறிந்த குருமார்களை வரவழைத்து செய்வது சாலச்சிறந்தது. இது போன்று எமது ஆலயத்திலும் மிகுந்த தேர்ச்சி பெற்ற குருமார்கள் இந்த மகா கும்பாபிஷேகக் கிரியைகளில் குறைவின்றி நிறைவாக செய்து வைத்திருக்கின்றார்கள்.

இவ்விழா கிரியைகளில் நானும் கலந்து கொண்டமையை இட்டு மிகுந்த மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு ஆலயத்தில் கும்பாபிஷேகத்துடன் அனைத்து நிகழ்வுகளும் முடிவடைவதில்லை. தொடர்ந்துவரும் மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் தினந்தோறும் நடைபெறுகின்ற பூஜை வழிபாடுகளும் அனைத்து மக்களும் கலந்து கொண்டு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியை வழிபாடு செய்து அவருடைய திருவருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

*''சுபம் அஸ்து நித்தியம்''*

*''வேதாகம வித்வ சிரோண்மணி''*
*''சிவாச்சாரிய கலாமணி'', ''பிரதிஷ்டா வித்தகர்''*
**பிரம்மஸ்ரீ பா. ஏகநாதக் குருக்கள்**
*(ஆலயப் பிரதமகுரு)*

තරුණ අභිවෘද්ධි සහ සමාජ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
Ministry of Youth Empowerment and Socio Economic Development

## வத்துகாமம் ஸ்ரீ கதிரேசப் பெருமான் ஆலய மீள் புனருத்தாரண வேலைத்திட்டத்திற்கு கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின்

# ஆசிச் செய்தி



கண்டி மாநகரான வத்துகாமத்தில் இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தில் சைவத்திற்கும், தமிழ்மொழிக்கும், மண் வளத்திற்கும், கலைவளத்திற்கும் பன்நெடுங் காலமாக பெயர்பெற்று மக்களின் குறைகளை தீர்த்து அருளாட்சி நடாத்தி மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும் ஸ்ரீ கதிரேசப் பெருமான் ஆலய மீள் புனருத்தாரண வேலைத்திட்டமானது இறையருளுடனும் பொதுமக்களின் ஆதரவுடனும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் வெளியிட்டுள்ள ஆசிச்செய்தியில்:

மலையகத்தில் பன்னெடுங்காலமாக நின்று நிலைக்கும் முருக வழிபாட்டிற்கு பிரசித்தி பெற்ற திருத்தலமாக வத்துகாமம் ஸ்ரீ கதிரேசப் பெருமான் ஆலயம் விளங்குகின்றது. 1928.03.15ஆம் மிகமி காணிபெறப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டு முதற்கட்ட கும்பாபிஷேகம் நடைபெற்றதிலிருந்து இன்றுவரை மலையகத்தில் பிரசித்தி பெற்ற ஒரு ஆலயமாகவே இது இருந்து வருகின்றது. அத்துடன், பூஜை நெறிமுறைகளோடு மாத்திரம் நின்றுவிடாது மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றி வருகின்றமையானது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அந்த வகையில் இவ்வாலயத்தில் 1939.12.14ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சரஸ்வதி அறிநெறிப் பாடசாலையின் பணிகள் உன்னதமானவை. இவற்றுள் இந்து மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கல் இலவசக் கல்வித்திட்டம் என்பன முக்கியமானவை.

அதேபோல 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட சைவ முன்னேற்றச் சங்கமானது ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை சைவத்திற்கும் கல்விக்கும் பல்வேறு தொண்டுகளைச் செய்து வருகின்றது. இச்சங்கம் இந்து சமய மேம்பாட்டிற்கு உதவுதல், இந்து சமய கலாசார பண்பாட்டு

விழுமியங்களைப் பேணுதலும் வளர்த்தலும், சைவ சிறார்களின் சமய அறநெறிக் கல்வியை விருத்தி செய்தல், ஆலய திருப்பணிகளுக்கும், பொதுப்பணிகளுக்கும் உதவுதல், அறப்பணிகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை மையமாகக் கொண்டு செயற்படுகின்றமை பாராட்டத்தக்கவையாகும்.

இச்சங்கத்தின் பிரச்சாரப் பிரிவினூடாக சிவமகிமை, சபரி தரிசனம், குகதரிசனம், சிவ அமுதம் போன்ற நூல்களை வெளியிட்டமை. இன்னும் பல்வேறு இலவச நூல் வெளியீடுகளை மேற்கொண்டு வருகின்றமை. கல்விக்க கருத்தரங்குகளை மேற்கொண்டு வருகின்றமை என்பன மலையக மாணவர்களின் கல்வி மற்றும் கலாசார முன்னேற்றத்திற்கான பங்களிப்புகளேயாகும்.

எனவே நடைபெறவுள்ள கும்பாபிஷேகம் சீர்பெற்று சிறப்புடன் வெற்றிகரமானதாக அமையவேண்டுமென பிரார்த்திப்பதுடன் ஆலயத்தின் பணிகள் மென்மேலும் தொடரவேண்டுமெனவும் அதற்காக எனது ஒத்துழைப்பு என்றென்றும் உண்டு.

தவிர்த்து எந்த உமது அருமை மைந்தர்களை தழுவி ஒரு தந்தையாய், மகனாய், தோழனாய், எம்மை வழிநடத்தி காக்கின்ற கருணைக் கடலே உனதாலய மீள் புனருத்தாரண வேலைகள் தங்குதடையின்றி சீர்பெற்று சிறப்புற வாழ்த்துகிறேன்.

**ஆறுமுகன் தொண்டமான்,** (பா. உ.)
*பொதுச் செயலாளர், இ. தொ. கா.*
*அமைச்சர், இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.*

***Ministry of Youth Empowerment and Socio Economic Development***
***No 43, Jawatta Road, Colombo - 05***
***Tel : 011 2552185 Fax : 2552109***

ලේකම්
செயலாளர்
Secretary

දුරකථන
தொலைபேசி
Telephone — 2449959

ෆැක්ස් අංකය
பெக்ஸ் இல.
Fax No. — 2445447

E- Mail : secmoj@sri.lanka.net.

ප්‍රධාන කාර්යාලය
பொது அலுவலகம்
General Office

දුරකථන
தொலைபேசி
Telephone — 2323022

ෆැක්ස් අංකය
பெக்ஸ் இல.
Fax No. — 2320785

Web Site : www. justiceministry .gov. lk

විදුලි පණිවුඩ
Telegrams — අධිකරණ ලේකම් / நீதிச் செயலாளர் / Secminjust

තැ. පෙ.
தபால் பெட்டி
P.O. Box. — 555

උසාවි සංකීර්ණය
කොළඹ 12
மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி,
கொழும்பு 12.
Superior Courts Complex,
Colombo 12.


## අධිකරණ හා නීති ප්‍රතිසංස්කරණ අමාත්‍යාංශය

## நீதி , சட்ட மறுசீரமைப்பு அமைச்சு

## MINISTRY OF JUSTICE AND LAW REFORMS

මගේ අංකය
எனது இல.
MyNo.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date — 2008.05.27

# வாழ்த்துச் செய்தி



மலைவளமும் கலைவளமும் கொண்ட வழிபாடுகளையும், கலாசார விழுமியங்களையும் தென்னிந்தியாவிலிருந்து எம்மவர்கள் இங்கு கொண்டுவந்து பாதுகாத்தனர். அதைத் தொடர்ந்தும் பாதுகாக்கும் வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையினரும் மலர் வெளியிடும் சைவமுன்னேற்றச் சங்கமும் அரும்பணியாற்றுவதையிட்டு அகம் மகிழ்கின்றேன்.

நீண்ட வரலாற்றைக் கொண்ட இந்த ஆலய மஹா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துக் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது அறநெறியினை மக்களின் வாழ்வோடு இணைத்து அவற்றைப் பாதுகாப்பவர்கள் நிச்சயம் இறைவனின் ஆசிர்வாதத்தைப் பெற்றவர்கள்தான்.

இறைப்பணியுடன் சமூக மேம்பாட்டுக்கும் தங்களது பணி இணைந்திருப்பதையிட்டுப் பாராட்டுக்கள். சிறுவயது தொடக்கம் எம் சிறுவர்களுக்கு சமய அறநெறியின் புனிதத்தை, பெருமையை உணர்த்தும் விதத்தில் ஆற்றும் பணி அபாரமானது.

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகளின் ஆசிர்வாதம் வத்துகாமம் மக்களுக்கு மட்டுமன்றி முழு மலையகத்திற்கும் அருளாட்சி கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். வரலாற்றின் முத்தான இடத்தைத் தனதாக்கிய கதிர்வேலாயுத சுவாமியின் ஆசிர்வாதம் எம்மக்கள் அனைவருக்கும் கிடைக்க உழைத்து வரும் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துக்கள்.

மலையகத்தின் மத்தியில் எழுந்தருளிய ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகளின் மஹா கும்பாபிஷேகம் மூலம் எமக்குச் சகல சௌபாக்கியமும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வி. **புத்திரசிகாமணி.** பா. உ.
*நீதி மறுசீரமைப்பு பிரதியமைச்சர்.*

உ
சிவமயம்

# கௌரவ பிரதிக் கல்வி அமைச்சர் முருகன் சச்சிதானந்தன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



மனித சமூகத்தின் அறிவியல் ரீதியான கூீட்சத்துக்கு கல்வியும், அறிவு நூல்களும் தகவல் தொழில் நுட்பமும் உதவி வருகின்றன.

மனித சமூகத்தின் ஆன்மீக ரீதியிலான விடுதலைக்கும் பண்பாட்டு விருத்திக்கும் துணைபுரிவனவற்றுக்குள் சமயங்களும் சமய விழுமியங்களும் பெரும்பங்கு கொண்டுள்ளன.

எங்கள் இந்து மதம் வேதங்கள், உபநிடதங்கள் என்பவற்றைப் பிரமாணங்களாகக் கொண்டு மனித சமூகத்தை வழிநடாத்தி வருகின்றது. இந்த வகையில் இந்து மதம் வைதீக மதம் என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இந்த வைதீக மதத்தில் ஆறு பிரிவுகள் உள்ளதாகக் கொள்ளப்படுகின்றது. அவை சிவனை முதற் கடவுளாகக் கொண்ட சைவசமயம், விஷ்ணுவை வழிபடும் வைணவம், சக்தியைப் போற்றும் சாக்தம், கணபதியை வணங்கும் காணபத்தியம், முருகப்பெருமானை வழிபடும் கௌமாரம், சூரிய பகவானை வணங்கும் சௌரம் என்பனவாகும்.

இவற்றுள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கையில் முருக வழிபாடு இருந்ததற்கு சான்றுகள்ளுள்ளன. குறிப்பாக துறைமுகங்கள் சார்ந்தும், உள்நாட்டில் முக்கிய நகரங்களை அண்மித்தும், மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் முருகனுக்கு ஆலயங்கள் அமைந்துள்ளன.

முருகப் பெருமானுக்கு அமைந்த ஆலயங்களில் குன்றுகளில் அமைந்தவை அழகானவை. பக்திப் பெருக்கத்தை ஏற்படுத்தவல்லவை. இந்த வகையில் கண்டி வத்துகாம நந்நகரில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசப் பெருமான் கடந்த பல ஆண்டு காலமாக அருளாட்சி புரிந்து பக்தர்களுக்கு நல்லாசி வழங்கி வருகின்றார். கதிரேசப் பெருமான் ஆலயத்தின் மீள் புனருத்தாரண வேலைகள் முடிவுற்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வெய்துகின்றேன்.

சைவப் பெரியார்களும், அன்பர்களும் ஒன்று சேர்ந்து இப்பணியை இனிதே நிறைவேற்றியுள்ளார்கள். அவர்கள் சேவையை மெச்சிப் பாராட்டுகின்றேன். அவர்களுக்கு இறையருள் கிட்டப்பிரார்த்திக்கிறேன்.

கண்டி மாவட்டத்தில் சைவப்பணி பல ஆற்றி வரும் சைவ முன்னேற்றச் சங்கமும் இவ் இறைபணியில் அளப்பரிய பங்கு கொண்டிருப்பதையிட்டு பெரிதும் மனமகிழ்வுறுகின்றேன். இந்து சமய மேம்பாட்டுக்கும், இந்து சமய கலாச்சார, பண்பாட்டு விழுமிய உயர்வுக்கும் அறநெறிக் கல்வி விருத்திக்கும் அயராது பாடுபடும் சைவ முன்னேற்றச் சங்கத்தினரின் பணி மனமுவந்து பாராட்டுக்குரியது. அவர்கள் பணி தொடர எனது நல்லாசிகள்.

வத்துகாமம் ஸ்ரீ கதிரேசப் பெருமான் அருள் சகல மக்களுக்கும் கிட்டப் பிரார்த்திக்கின்றேன்.

*''மேன்மைகொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்''*

*28.05.2008*
*கல்வி அமைச்சு,*
*இசுறுபாய, பத்தரமுல்லை.*

**மு. சச்சிதானந்தன்**, பா. உ.
*பிரதிக் கல்வி அமைச்சர்,*

உ
சிவமயம்

## மலையக மக்கள் முன்னனியின் பாராளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத் தொழில் தொழில் நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான கௌரவ பெ. இராதாகிருஷ்ணன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



**ஆ**லய வழிபாட்டிலும், இறை விசுவாசத்திலும் தொன்றுதொட்டு நம்பிக்கையுடன் திகழும் தமிழ் மக்களின் பாரம்பரியம் கலை, கலாச்சாரமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து சிறப்பியல்புகளை கொண்டதாக இருப்பதற்கு தேசமெங்கும் அமைந்திருக்கும் திருத்தலங்களே உதாரணமாகும்.

இயற்கை வளம் நிறைந்த மலையகப் பகுதியிலும் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமையும், சிறப்பும், பக்தியும் நிறைந்த ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் ''வத்துகாமம் ஸ்ரீ கதிரேசப் பெருமாள் ஆலயம் நாடெங்கும் புகழ் பரவி நிற்பது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய அம்சமாகும்.

அன்பர்களாலும், பக்தர்களாலும் பரோபகார சிந்தனைமிகுந்த பெரியோர் களாலும் புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ள இவ்வாலயம் 1928ம் ஆண்டு மார்ச் 15ம் திகதி முறைப்படி காணி பெறப்பட்டு தற்போது வளர்ச்சிகளையும் கண்டு கும்பாபிஷேகமும் நடைபெறுவது மனமகிழ்வை ஏற்படுத்தியுள்ளது. அறநெறிக் கல்விப் பணியும் அபிமானிகளால் சிறப்புற்று விளங்குகிறது.

ஆலயத்தின் சிறப்பான மேம்பாட்டுக்கு கடந்த இரண்டு தசாப்தங்களாக பணிபுரியும் சைவ முன்னேற்றச் சங்கம் பணியாற்றி வருவதும் இப்பணியை மேலும் மறுமலர்ச்சி அடைவதற்கும் அவர்களது செம்மையான முயற்சிகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழர்களின் பண்பாட்டுக்கும், பக்தி மேம்பாட்டுக்கும் மென்மேலும் திருப்பணி புரிந்து சிறப்பியல்புகளுடன் செழுமையும், வளமும் பெறுவதற்கு எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துக் கூறிப்பிரார்த்திக்கின்றேன்.

*நன்றி!*

මධ්‍යම පළාත් සභාව
மத்திய மாகாண சபை
CENTRAL PROVINCIAL COUNCIL

ඩී. මදියුගරාජා
துரை மதியுகராஜா
D. Mathi Yugarajah

# வாழ்த்துச் செய்தி



எமது தாய்த்திரு நாடான இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கும் முன்னரே திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இத்தனை பழமை வாய்ந்த வத்தேகம ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இது ஓர் விஞ்ஞான யுகம். இன்று விஞ்ஞானம் பல புதுமைகளைப் படைக்கின்றது. இருந்தும் சாந்தி சமாதானம் என்பவை எட்டாக்கனியாகவே உள்ளன. காரணம் விஞ்ஞானம் வளர்ந்த அளவுக்கு மெய்ஞானம் வளரவில்லை. இவ்வாறு மனிதன் ஒவ்வொரு நிமிடமும் வாழ்க்கைக்கு போராடிக் கொண்டு இருக்கும் நிலையில் மனநிம்மதிக்குப் பெரிதும் உதவுவது இத்திருத்தலமே ஆகும்.

அவ்வகையில் நோக்கும்போது சுமார் 80 வருடங்கள் பழமைவாய்ந்த இக்கோயிலை பல இன்னல்களுக்கு மத்தியிலும் சிறப்பாக நடாத்தி வருவதை நினைக்கும்போது பெருமகிழ்ச்சியாக உள்ளது. ஒரு பிள்ளைக்கு வாழ்க்கையில் வேண்டிய நற்பழக்க வழக்கங்களையும், எமது சமய விழுமியங்களையும் அளிக்கும் ஓர் சிறந்த ஸ்தாபனமாக விளங்கும் இச்சைவக் கழகத்தின் சேவை பாராட்டத்தக்கது.

இவ்வாறான உங்கள் சைவக் கழகத்தின் தொண்டு மென்மேலும் வளரவும், இத்தலத்தின் சக்தி மேலோங்கவும் அறுபடை வீடுகளைக் கொண்டு அழகாக அமர்ந்திருக்கும் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**துரை மதியுகராஜா**
*மத்திய மாகாண சபை உறுப்பினர்,*
*உபதலைவர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.*
*பேராதனைப் பல்கலைக் கழக மேலவை உறுப்பினர்.*

உ

சிவமயம்

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்
## **திருமதி சாந்தி நாவுக்கரசன்** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

**உ**தித்தாங்(கு) உழல்வதும் சாவதும் தீரத்தென உன்னிலொன்றா
வித்தாங்(கு) அருள்தரும் காலமுண்டோ? வெற்பு நட்(கு) உரக
பதித்தாம்பு வாங்கி நின்(று) அம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமுருகா! மயில் ஏறிய மாணிக்கமே!



மந்தரமலையை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் சுற்றிக் கட்டி திருப்பாற்கடலில், விண்ணில் பம்பரம் எனச் சுழன்று, திரியக் கடைந்த திருமாலின் மருமகனே, மயில் வாகனத்தில் எழுந்தருளிய மாணிக்கம் போன்றவனே, மாயையில் உழன்று திரிந்து, மீண்டும் பிறந்து, இறத்தலாகிய செயலை நீக்கி, என்னை ஆட்கொள்ளும் முருகா! என்னை ஆட்கொள்ளும் காலம் எப்போ வரும் ஐயனே!

கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் இவ்வாறு முருகனை வேண்டும் திருப்பாடலில் மேற்கண்டவாறு கூறுகின்றார்.

எமது துன்பங்களில் இப்பிறவியில் அறுப்பவனும், ஈடு பேற்றை அளிப்பவனுமாகிய முருகப் பெருமான் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் மட்டுமல்ல இன்று உலகம் பூராவும் ஆலயம் அமைத்து, வழிபாடு செய்கின்றனர். தமிழ்த் தெய்வம் முருகன் என்பர். ''முருகு'' என்றால் ''அழகு''. அது நித்தியமானது. முருகன் அழிவற்றவன். அவன் தந்த தமிழும் அழிவற்றது. அழகுள்ளது. அதுபோல் தமிழும் என்றும் அழகு குன்றா கன்னித்தன்மையுடன் பூத்துக் குலுங்கி நிற்கின்றது.

இத்தகைய பெருமைக்குரிய எம்பெருமான் கதிரேசனுக்கு எழில்மிகு மலையகமாம், வத்துகமத்தில் கடந்த நூறு ஆண்டு காலத்திற்கு முன்பதாகவே கோவில் அமைக்கப்பட்டது.

தற்போது ஆகம விதிப்படி பன்னிரண்டு வருட காலப்பகுதிக்கு ஒரு முறை திருக்கோவில்கள் புனருத்தாரணம் செய்யப்படுவதனால் ஸ்ரீ கதிரேசன் ஆலய அறங்காவலர்கள் வத்துகாமம் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்திற்கும் மகா கும்பாபிஷேகம் நடாத்தவுள்ளமை கதிரேசப் பெருமானின் திருவுள்ளமேயாகும்.

மேலும் இந்த ஆலயத்தில் 1939ஆம் ஆண்டு சரஸ்வதி அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து இலவசக் கல்விச் சேவையும் வழங்கியுள்ளது. 1989ஆம் ஆண்டு முதல் சைவமுன்னேற்றச் சங்கத்தினர் 2000ஆம் ஆண்டு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக மலரையும் இவ் ஆண்டு 06.06.2008 இல் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேக மலரையும் சிறப்புறவும் வெளியிட்டு வைப்பது தெய்வீக அறப்பணியாகும். இவர்களின் அருட்பணி தொடரவும் மகா கும்பாபிஷேகம் முருகப் பெருமான் கதிரேசனின் ஆசி வேண்டிப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

*''ஓம் சரவண பவ ஓம்''*

**சாந்தி நாவுக்கரசன்,** *பணிப்பாளர்*

உ
சிவமயம்

# வாழ்த்துச் செய்தி



உலகை உய்விக்க உதித்தது நம் சைவம்.
நம் சைவத்தின் தொன்மையைத் தெளிவுபட
வரையறை செய்யமுடியாமல்,
இன்றும் ஆய்வாளர்கள் அல்லலுறுகின்றனர்.
வேதங்கள் இறைவனால் அருளப்பட்டவை எனும் நம்பிக்கை,
இந்துமதத்தாரின் ஆதார நம்பிக்கை.
நம் மதம் சார்ந்த மொழியோ, பண்பாடோ
இறைத்தொடர்புடனேயே பேசப்படுகின்றன.
தமிழ்ச்சங்கத்துக்கு சிவன் தலைமை ஏற்றான் எனும் செய்தியும்,
சில இலக்கியங்களிற் சொல்லப்படுகின்றது.
அகழ்வாராய்ச்சிகளின் போது கிடைத்த பல சான்றுகள்,
நம் மதத்தின் தொன்மையை,
பல்லாயிரமாண்டுகளுக்கு முன்கொண்டு செல்கின்றது.
கிடைக்கும் தமிழிலக்கியங்களில் தொன்மையவான,
சங்க இலக்கியங்களிலேயே சிவன் முதலிய கடவுளர் வழிபாடு குறித்து
பல செய்திகள் சிறப்புறப் பேசப்பட்டுள்ளன.
இச்செய்திகளுக்குள் குறிஞ்சி நிலத் தெய்வமாகப் போற்றப்பட்ட,
முருக வழிபாட்டுச் செய்திகள் சிறப்பிடம் பெறுகின்றன.
தலைசிறந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவரான நக்கீரர்தம்,
திருமுருகாற்றுப்படை முருகவழிபாட்டின் தொன்மையையும், பெருமையையும்,
உள்ளவாறு உணர்த்துகின்றது.
அன்றுதொட்டு இன்றுவரை தமிழர் சமுதாயத்தில்,
முருக வழிபாடு பெருஞ்சிறப்புப் பெற்று நிற்பதனால்,
தமிழர் கடவுளாக முருகன் கொள்ளப்படுகிற தன்மையும் உண்டு.
இவ்வழிபாடு ஈழத்திலும் தொன்மைக்காலம் முதல் சிறப்புற,
நிகழ்ந்து வந்திருக்கிறதென்பதை,
வரலாற்றுச் செய்திகளால் அறியமுடிகிறது.
புராணச் செய்தகிளலேயே போற்றப்படுகின்ற பல முருகன் ஆலயங்கள்,
ஈழத்தில் சிறப்புற விளங்கியிருந்துள்ளன,
கதிர்காமம், மாவிட்டபுரம், நல்லூர், செல்வச்சந்நிதி,

கந்தவனக்கடவை முதலிய பல ஆலயங்கள்,
இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.
இவ்வாறு ஈழத்தில் சிறந்துள்ள முருக வழிபாட்டினை,
மலைவளமும், கலைவளமும் சிறந்துள்ள வத்துகாமத்திலும்,
எம்மால் காணமுடிகிறது.
இந்துமதம் சிறப்புற பலவகையிலும் பணியாற்றிவரும்,
இப்பிரதேசத்தில் அமைந்துள்ள நூற்றாண்டுப் பழமை வாய்ந்த,
ஸ்ரீ கதிரேசன் ஆலயம்,
மெய்ஞ்ஞான வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பணி மகத்தானது.
அவ்வாலயம் தற்பொழுது கும்பாபிஷேகம் காண்பது,
சமய அன்பர்கள் அனைவர்க்குத் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.
வத்துகாமம் மண் இயல்பாகவே சமயப்பற்றும்,
ஒழுக்கநெறியும் நிரம்பிய மக்களால் பொலிவது.
அவர்கள் முன்னெடுக்கும் இக் கும்பாபிஷேகத் திருப்பணி,
இதற்கோர் சான்றாய் விளங்குகிறது.
காலவெள்ளத்தில் இத்திருப்பணியின் புகழ் விளங்கவென
உடன், சமய மணங்கமழும் மலரையும் வெளியிடுவது சிறப்பானது
பணியும் மலரும் சிறக்க வாழ்த்துக்கள்!
எல்லா முயற்சிகளிலும் இறைத்திருவருளும் கூடட்டும்.
'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'


*அன்பன்,*
**இ. ஜெயராஜ்**
*கம்பன் கழகம்.*

உ

சிவமயம்

# வாழ்த்துச் செய்தி

**அனைத்து மக்கள் வாழ்க்கையும் செழுமையானதாக அமைய வேண்டி வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ கதிரேச சுவாமிகளைப் பிரார்த்திக்கின்றேன்!**



பல்லின மக்களால் நிரம்பப் பெற்ற கண்டி வத்துகாமம் நகரில் அமைந்து அருளாட்சி புரிகின்ற அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவருகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க வாய்ப்புக் கிடைத்தமையை இறை பாக்கியமாகக் கருதுகின்றேன்.

பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு திருக்குடமுழுக்கு காணல் வேண்டும் எனும் நியதிக்கமைய பல்லாண்டுகளாகப் புனரமைக்கப்படாதிருந்த இவ் ஆலயத்தை பக்தர்களின் தெய்வ அனுக்கிரக நலன் வேண்டி மீள் புனரமைப்புச் செய்து புத்தொளி மிளிரப் புதுப்பொலிவுடன் பக்தர்களின் தரிசனத்துக்காக வகை செய்த ஆலய அறங்காவலர் சபையினரை எத்துணை பாராட்டினுந் தகும்.

ஏறத்தாழ எட்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஆலயத்துக்கான காணி பெறப்பட்டு திருப்பணி வேலைகள் நிறைவுற்று முதற்கட்ட கும்பாபிஷேகம் நிகழ்வுற்றதாக அறியக் கிடைக்கின்றது. இரண்டு தசாப்தங்களின் பின்னர் முத்துமாரி தேவஸ்தானத்துடன் இணைக்கப் பெற்று பொது தேவஸ்தானமாகி அதனைத் தொடர்ந்து அண்மையில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு தற்போது கும்பாபிஷேகம் நடைபெற இறையருள் கிட்டியுள்ளதாகவும் மேலும் அறியமுடிகின்றது.

70 வருடங்களுக்கு முன்பு பக்தர்கள் அனுக்கிரகம் வழங்குவதற்கு மேலாக பாடப்புத்தகங்கள் வழங்கி அதன்மூலம் மாணவர்களுக்கு இலவசப் போதனையினை வழங்க இவ்வாலயத்தில் சரஸ்வதி அறநெறிப் பாடசாலையின் மூலமாக சிறப்புப் பங்களிப்பாற்றியுள்ளது வரவேற்கத்தக்கது.

வேறுபாடுகளின்றி அனைத்தின மக்களும் இவ்வாலயத்தினை வழிபாடு செய்து வருகின்றமை முக்கியத்துவமிக்கதான சிறப்பம்சமாகும். அனைவருக்கும் ஸ்ரீ கதிரேசனின் திருவருளே கொடையாக உள்ளது. இவர்கள் அனைவருக்கும் இறையருள் வேண்டுகின்றேன். அனைத்து மக்கள் வாழ்க்கையும் செழுமையானதாக அமையவேண்டி வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ கதிரேச சுவாமிகளையும் பிரார்த்திக்கின்றேன். நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்பட வேண்டுகின்றேன்.

**எஸ். பி. சாமி**
*வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்,*
*கொழும்பு - 15.*

உ
சிவமயம்

# வாழ்த்துரை



இலங்கைத் தீவின் நடுவின் ஓங்கியுயர்ந்த மலை வளத்தால் அழகொளிர விளங்கும் மத்திய மாகாணத்தில் எழில் பொங்கும் இயற்கை வளத்தால் சிறந்து மிளிரும் வத்துகாமம் தமிழ் மொழியையும் சைவத்தையும் வளர்த்து வருகின்றது. அத்தகைய சிறப்புமிகு நிலப்பரப்பில் எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் ஸ்ரீ கதிரேசப் பெருமானின் திருத்தல மகா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெறுவதை எண்ணி மகிழ்கின்றோம். வரலாற்றுப் பெருமைமிக்க இத்திருத்தலம் நீண்ட இடைவெளிக்குப் பின் நல்லெண்ணம் கொண்டவர்களின் பெருமுயற்சியால் மீள் புனருத்தாரண செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தியாக்கம் நிறைவடைந்து மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இத்திருப்பணிக்காக வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கம் தன்னாலான சேவைகளை வழங்கியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

ஆலயங்கள் அன்று தொடக்கம் இன்றுவரை மக்கள் மனங்களைச் செம்மைப்படுத்தும் கருவூலங்களாக ஆட்சி செலுத்துகின்றன. அந்த வகையில் வத்துகாமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசப் பெருமான் ஆலயமும் அங்கு வாழும் மக்களின் நம்பிக்கைக்குரிய சொத்தாக அமைந்துள்ளமை சிறப்பு. 06.06.2008 அன்று ஸ்ரீ கதிரேசப் பெருமான் ஆலய மகாகும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துரை வழங்குவதோடு எல்லாச் சிறப்புகளும் கிடைக்க எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டுகின்றேன்.

வணக்கம்

**பேராசிரியர் சபா ஜெயராசா**
*தலைவர்,*
*கொழும்பு தமிழ்ச் சங்கம்.*

*இல. 7, 57வது ஒழுங்கை*
*கொழும்பு - 06.*

கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்
කොළඹ සයිව මුන්නේට්ට සංගම්
**COLOMBO SAIVA MUNNETTA SANGAM**

Bankers: BANK OF CEYLON (Metropolitan Branch) INDIAN OVERSEAS BANK

Regd. Sol. } S. 258

101/70, KEW ROAD, COLOMBO - 2

Branch Societies: United Kingdom / Peliyagoda / Chilaw

27. 05. 2008

# வாழ்த்துச் செய்தி



எழில்மிகு மலையகத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்க மலைவளமும், கலைவளமும் சிறப்புற்று விளங்கும் மலையகத்தின் வத்துகாமத்திலிருந்து அருள்பாலித்துவரும் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் முடிவுற்றுக் கும்பாபிஷேகமும் குடமுழுக்கும் காண இருப்பது கண்டு எல்லையில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்குடமுழுக்கு வைபவத்தினையொட்டி வத்துகாமம் சைவமுன்னேற்றச் சங்கத்தின் அனுசரணையுடன் வெளிவர இருக்கும் கும்பாபிஷேகப் பெருவிழா மலருக்கு இவ்வாசிச் செய்தியினை அனுப்பி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வத்துகாமத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதில் சைவ முன்னேற்றச் சங்கம் ஆற்றிவரும் பணிகளை நான் நன்கறிவேன். குறிப்பாக அதன் பிரச்சாரப் பிரிவு உத்தியோகத்தர் உயர்திரு எஸ். ராமதாஸ் J.P. அவர்கள் முன்னெடுத்துச் செல்லும் பணிகளும் ஊக்குவிப்பும் பாராட்டுக்குரியது. சைவ சமயத்தின் கொடியான ''இடபக் கொடி''யின் பெருமைகளைப் பாராட்டும் வகையில் அதற்கு விழா எடுத்து ஊர்வலங்கள் நடத்தி மக்கள் மனதில் ஓர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் பால்குட பவனி நடாத்தி மகிழ்ந்தவர் ஊடகவியலாளரும் பிரச்சாரப் பிரிவு உத்தியோகத்தருமான திரு. எஸ். ராமதாஸ் அவர்கள்.

இக் கும்பாபிஷேக மலர் செவ்வனே மலர்ந்து குடமுழுக்கு இனிதே நிறைவு பெறும். இதற்கு திருவருள் பாலித்திருக்கின்றது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வத்துகாம சைவ முன்னேற்றச் சங்கத்தின் சமய, சமூகப் பணி மென்மேலும் சிறப்புறத் தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

வணக்கம்

**சின்னத்துரை தனபாலா J.P**

தர்மகர்த்தா, கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்.

உ
சிவமயம்

## ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அறங்காவலரும், சைவ அபிமானிகள் சங்கத் தலைவருமாகிய திரு. G. சிவராஜ் J.P அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



சைவ மக்கள் இறைவனின் திருவருளைப் பெறுவதற்குச் சிறந்த சாதனமாக ஆலய வழிபாட்டினை ஏற்றுக் கொண்டுள்ளனர். இறையருள் நமக்குக் கிடைத்திட வேண்டுமானால் ஆலய தரிசனத்தினை மேற்கொள்ளுதல் மிகமிக அவசியமான செயலாக அமைந்துள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற முதுமொழி வகை செய்கின்றது. ஆலயம் புனிதமானது தெய்வீகமும் கலைப்பொலிவும் நிறைந்த மகிமைக்குரிய நிலையமாகவும் அது அமைகின்றது. ஆலயங்களை அமைத்தலும், அமையப் பெற்ற ஆலயங்களைப் பேணிப் பாதுகாப்பதும், காலத்துக்கு காலம் ஆலயங்களைப் புனரமைப்புச் செய்து மெருகூட்டுவதும் சைவர்களாகிய எம் தலையாய கடமையாகும். இதனை மனதில் நன்கு நிலைநிறுத்தி வத்துகாமம் சைவாபிமானிகள் சங்க நிர்வாகத்தினர், ஓர் நூற்றாண்டினையும் கடந்து நிலைப்பெற்றிருக்கும் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தை மீள் புனருத்தாரணம் செய்து புதுப் பொலிவுடன் மக்கள் இறைதரிசனத்துக்காக உருவாக்கம் செய்துள்ளனர். ஆலயம் இறையருளினால் திருக்குடமுழுக்குக் காண விளையும் இவ்வேளையில் ஆலயத்தையும், அதன் மகிமையையும் வெளிக்கொணரும் வகையில் வெளியாகும் கும்பாபிஷேகச் சிறப்பு மலரின் ஊடாக வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மனம் களிகொள்ளுகின்றேன்.

வத்துகாமம் நகரின் மையத்தில் குடிகொண்டருள்பாலித்துவரும் ஸ்ரீ கதிரேசன் ஆலயம் மிகப் பழமை வாய்ந்தது. நீண்ட காலமாக புனரமைப்பினையோ பெருஞ்சாந்தி நிகழ்வினையோ காணப் பெறாத நிலையில், ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து அங்குள்ள இறைவிக்கிரகங்களுக்கு மீளவும் இறை சக்தியூட்டி தெய்வீகத்தையும், கலைப்பொலிவினையும் ஏற்படுத்த வேண்டும் என்ற

எண்ணத்திடத்துடன் எனது தலைமையின் கீழ் இயங்கிவரும் பரிபாலன சபையினர் பொதுமக்களின் ஆதரவுடனும் இறை அனுக்கிரகத்துடனும் திருப்பணிவேலைகளை ஆரம்பித்தனர். பொருளாதார இடர் மத்தியிலும் தேவையற்ற குறுகிய நோக்குக் கொண்டோரின் நெருக்கடி மத்தியிலும் திருப்பணிவேலை தங்கு தடையின்றி குறுகிய ஆண்டுக்காலத்தினுள் நிறைவு கண்டமை மன மகிழ்வான விடயம். திருப்பணி வேலைத் திட்டத்தில் கடந்துவந்த பாதை கடினமானதாகவும், சவாலாகவும் அமைந்திருந்தாலும் மனந்தளராது சைவ இறைசிந்தனையுடன் பொருள் பண உதவிகளை வேண்டிய நேரத்தில் வேண்டியபடி அளித்துதவிய பொதுமக்களின் ஆதரவும், எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீ கதிரேசப் பெருமானின் அனுக்கிரகம் கைவரப் பெற்றமையும் பெரும் பாக்கியம். ஆலயத் திருப்பணிக்கு உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பொது வாழ்விலும் சரி தனி வாழ்விலும் சரி தனக்கென ஒதுக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்யாது அவற்றை அலட்சியம் பண்ணிக்கொண்டு சம்பந்தமற்ற வேறு வேலைகளில் ஈடுபாடு கொள்வது மனித இயல்பாகி வருகின்ற ஆபத்தான சூழ்நிலையை தற்காலத்தில் காண்கின்றோம். இதற்குக் காரணம் நம்மிடையே இறையுணர்வும் ஆன்ம ஞானமும் அருகிவருவதுதான். இறையுணர்வும் ஆன்ம ஞானமும் எம்மிடம் ஏற்பட்டு விட்டால் எம்மைப் போன்றே ஏனைய மனிதர்களும் அக இருள்நீங்கி இன்பம் பெற்றிட வேண்டும் என்ற எண்ணம் எம்முள் நிலைத்திடும். அவ்வுன்னத நிலையை அடைந்திட நாம் அனைவரும் இறைபணி, பொதுப் பணிகளைப் புரிந்திட வேண்டும். இதனை நன்கு மனதில் கொண்டு நாம் சைவர்களாக வாழ்ந்திடுவோம். ஸ்ரீ கதிரேசன் ஆலயக் கும்பாபிஷேக நிகழ்வும் அதனையொட்டி வெளிவரும் கும்பாபிஷேகச் சிறப்பு மலரும் மேன்மை பெற்றிட எல்லாம்வல்ல ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியைப் பிரார்த்தித்து அனைவருக்கும் சாந்தியும் சமாதானமும் கிடைத்திட வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்
இறைச்சேவையில்
இறைபணிச் செம்மல் **G. சிவராஜ் J.P**
*அறங்காவலர்,*
*ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்.*
*தலைவர், சைவாபிமானிகள் சங்கம், வத்துகாமம்.*

உ
சிவமயம்

### வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கப் பொதுச் செயலாளர் திரு. P.R. நாகரத்தினம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



**ஆ**ன்மீகத்தையும் தெய்வசிந்தனையையும் வளர்க்கும் உன்னத நிலையம் ஆலயமாகும். ஊர்கள் தோறும் ஆலயங்களை அமைத்து அவற்றினை புனிதத்த தன்மையுடன் பேணிப் பாதுகாத்து அடுத்துவரும் சந்ததியினருக்கு இறைவழிபாட்டினை மேற்கொள்ளத்தக்க வகையில் கையளித்து எம்முன்னோர்கள் மரபு வழியாகச் செயற்பட்டு வந்துள்ளனர். வத்துகாமத் திருநகரிலும் எம்முன்னோர் கதிரேசப் பெருமானுக்கு திருக்கோயில் அமைத்து வழிபாட்டுத் தலமாக மகிமையுடன் பராமரித்து வந்தனர். ஆலயத்தில் நியதி தவறாது நித்திய பூசைகளும், வருடாவருடம்-சித்திரை மாத பௌர்ணமி தினத்தில் சித்திரபுத்திரனை முதன்மைப்படுத்தி சித்திரைக்கஞ்சி' நிகழ்வும் ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி விரத பூசைகளும் சூர சங்கார நிகழ்வும் உரியமுறையில் பக்திபூர்வமாக மேற்கொள்ளப்பட்டு வந்தமை சிறப்புக்குரிய விடயமாகும். ஸ்ரீ கதிரேசன் திருத்தலம் மிகப் பழமைவாய்ந்தது. பல ஆண்டுகளாகத் திருப்பணிகள், கும்பாபிஷேக நிகழ்வுகள் இடம்பெறாத நிலையில் சைவாபிமானிகள் சங்க நிர்வாகத்தினர் ஆலயத்தை புதுப்பித்து மக்கள் இறை வழிபாடுகளை மேற்கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் திருப்பணிவேலைகளை நிறைவு செய்துள்ளனர். 06.06.2008ஆம் திகதி ஆலயக் கும்பாபிஷேகக் கிரியை இறைவன் திருவருளால் நடைபெறவுள்ளது. முருக பக்தர்களுக்கு இச்செய்தி மனமகிழ்வானது. இத்தருணத்தில் சைவ முன்னேற்றச் சங்கத்தினரால் வெளியீடு செய்யப்படும் கும்பாபிஷேகச் சிறப்புமலரின் ஊடாக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சி கொள்ளுகின்றேன்.

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திருப்பணி வேலைகள் நிறைவு காண்பதற்கு பணம், பொருள் உதவிகள் வழங்கிய அனைத்து இறை அன்பர்களுக்கும், ஆலய வேலைகள் பூர்த்தியாகுவதற்கு உடல் ரீதியாக உழைப்பினை நல்கிய இறைத்தொண்டர்களுக்கும், ஆலயத்தை அழகுற வடிவமைத்த சிற்பாச்சாரியர்களுக்கும், திருப்பணி உரிய காலத்திற்குள் நிறைவு பெறுவதற்காக அயராது உழைத்த சைவ அபிமானிகள் சங்கத் தலைவர், இதர நிர்வாக உத்தியோகத்தவர்களுக்கும் சங்கம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய உட்பிரகாரத்தில் பரிவாரத் தெய்வங்களுக்கான கோயில்களையும், மணிக்கோபுரம், இராஜகோபுரத் திருத்த வேலைகளையும் மனமுவந்து சைவ அபிமானிகள் சங்கத்துடன் இணைந்து அமைத்த இறையன்பர்களுக்கும் சங்கம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஸ்ரீ கதிரேசன் ஆலயக் கும்பாபிஷேக கிரியை நிகழ்ச்சியை சிறப்பிக்கும் வகையில் வெளியாகும் கும்பாபிஷேக மலரை வெளியீடு செய்யும் வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கத்தினருக்கும் சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேக நிகழ்வும், கும்பாபிஷேகச் சிறப்பு மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்துக் கூறுவதுடன் அனைவருக்கும் முருகப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

**பொதுச் செயலாளர்,** *சைவ அபிமானிகள் சங்கம், வத்துகாமம்.*

உ
சிவமயம்

## வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கப் பொருளாளர்
## திரு. S. வீரசாமி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



"கருணையை நாடு தர்மத்தைப்பாடு இறைவன் உன்னை நாடுவான்"

இலங்கைத் திருநாட்டின் பாரம்பரிய பெருமையையும் வரலாற்று மரபுரிமையையும் கொண்டு விளங்கும் மலைநாட்டின் மத்திய மாகாணம், வத்துகாமம் நகரில் குடிகொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் பண்டைய வரலாற்றுப் புகழ்மிக்க பெருமையைக் கொண்டிருப்பதோடு இந்து, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் சிங்கள, தமிழ் இனமத மொழி நல்லுறவுகளுக்கும், நல்லிணக்கப் புரிந்துணர்வுக்கும் அம்மக்களின் தோழமை எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து வருவதை நாம் காண்கிறோம்.

இந்நகரின் பழமையான ஆலயங்களில் ஒன்றாகத் திகழும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் புனருத்தாபன மஹா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவு மிக்கதாய் நிறைவேறிடவும் நம்நாட்டில் அமைதி, நிம்மதி, சாந்தி, சமாதானம் மேவி இனமத ஒருமைப்பாடும் நல்ல புரிந்துணர்வும் ஏற்பட்டு என்றென்றும் தழைத்தோங்க முருகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

இந்துக்களை மதத்தால் ஒன்று சேர்ப்பது ஆலயமாகும். இவ்வகையில் நாம் இந்துவாக வாழ்ந்து இந்து தர்மத்தைக் காக்கும் சீடர்களாக வாழ்வோமாகில் அதுவே நாம் இந்து சமயத்திற்குச் செய்யும் பெரும் தர்மகாரியமாகும். இவ்வகையில், ஆலய சேவையில் ஓர் பணியில் என்னை இணைத்தமைக்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேகத் திருவிழா இனிதே சிறப்புற நடைபெற அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்,
**திரு. S. வீரசாமி**
*பொருளாளர், ஆலயப் பரிபாலன சபை.*
*ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்*
*ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்.*

உ
சிவமயம்

## வத்துகாமம் ஸ்ரீ கதிரேசன் ஆலயப் பஞ்சாயத்தாரும்
## சைவ முன்னேற்றச் சங்கத் தலைவருமாகிய
## திரு. A.V.S. சற்குணராஜா M.AC.F (SL) J.P அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

*''அருவமு முருவுமாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்*
*பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்*
*கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரெண்டுங் கொண்டே*
*ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகமுய்ய''*



என்ற கச்சியப்ப சிவாச்சாரியாரின் திருவாக்குக்கு அமைய மானிடர்களின் துன்பங்களைப் போக்கிடும் கலியுகவரதன் கதிரேசப் பெருமான், வத்துகாமம் திருநகரில் ஓர் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக நிலைபெற்று எழுந்தருளி மக்களுக்கு அருள்பாலித்து வருகின்றமை கண்கூடு. மலையகத்தில் பழம்பெரும் முருகத் தலமாக விளங்கிவரும் வத்துகாமம் ஸ்ரீ கதிரேசன் சுவாமி ஆலயம் மிகநீண்ட தசாப்தகால இடைவெளிக்குப்பின் முதற்தடவையாக கும்பாபிஷேகம் என்னும் 'திரு நன்னீராட்டு' நைமித்திய கிரியையைக் காணுகின்றது. இப்புண்ணிய நன்னாளில் பெருஞ்சாந்தி நிகழ்வினை ஏற்றம் கொள்ளச்செய்யும் வகையில் வெளியாகும் கும்பாபிஷேகச் சிறப்பு மலரின் ஊடாக வாழ்த்துரை வழங்குவதில் மனமகிழ்வு கொள்கின்றேன்.

சமய அறிவும், ஆத்மஞானமும் மனிதனை முழு நிறைவுடையவனாக்குகின்றது. மனிதநேயம் மக்களிடையே வலுவிழந்து மனிதாபிமானச் சிந்தனைகள் அருகிவரும் இக்கால வேளையில் மனிதனைப் பண்புள்ளவனாகவும், பக்குவமுடையவனாகவும் உருமாற்றஞ் செய்ய சமயப்போதனைகளும், சமய வழிபாட்டு முறைகளும், அனுட்டானங்களும், ஆலய தரிசனங்களும் பெரிதும் உதவுகின்றன. அந்த வகையில் வத்துகாம நகரின் கண் அமையப்பெற்ற ஸ்ரீ கதிரேசன் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் காணப்பெறுவது மக்கள் தம் இறைவழிபாட்டினை உரிய வகையில் மேற்கொள்ள வழியேற்பட்டுள்ளமை சிறப்புக்குரியது. மூலவிக்கிரகராக ஸ்ரீ கதிரேசப் பெருமான் வள்ளிதெய்வானை சமேதராய் வீற்றிருக்கப் பரிவாரத் தெய்வங்களாக விநாயகர், துர்க்கை, மதுரை

மீனாட்சியம்மன், ஆஞ்சநேயர், வைரவப் பெருமான் ஆகிய தெய்வங்கள் புடைசூழ இவர்களுடன் நவக்கிரகங்களும், காவல் தெய்வம் இடும்பனும் அமைவுறப்பெற ஆலயம் புதுப்பொலிவு கண்டமை இறைத் திருவருள் செயலாகும். வழிபடுவோர் தம் இஷ்ட தெய்வங்களை அனுதினமும் வழிபட்டு அருளினைப் பெற்றிட வகை செய்யும் தன்மையில் ஆலயம் மீள் அமைவு பெற்றமை வரவேற்கத்தக்க விடயமாகவுள்ளது. ஆலய பரிபாலன சபையாகிய சைவ அபிமானிகள் சங்க நிர்வாகத்தினரின் அயராத உழைப்பும் சைவப் பெருமக்களின் தளராத நிதி, பொருளுதவிகளும் ஒன்றுசேர்ந்து ஆலயத்தினை புதுமெருகூட்டி மகிமையுறச் செய்துள்ளது. ஆலயத் திருப்பணியிலும் அதன் வளர்ச்சியிலும் முன்னின்றுழைத்த அனைத்து நல்இதயங்களுக்கும் மனதார நன்றி பகிர்வதுடன் அனைவருக்கும் ஸ்ரீ கதிரேசப் பெருமானின் நல்லருள் கிடைத்திடப் பிரார்த்திக்கின்றேன்.

''*அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்*
*இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே*'' என்ற தாயுமானவரின் திருவாக்குக்கு அமைய சைவம் கூறும் சமூக சேவையை மனதில் கொண்டு சேவை செய்து சைவர்களாக வாழ்வோமாக!

யாவருக்கும் ஸ்ரீ கதிரேசப் பெருமானின் திருவருள் கிடைக்க மனதாரப் பிரார்த்தித்து கும்பாபிஷேக நிகழ்வு இனிதே நிறைவு காண இறைத் திருவருளை முன்நிறுத்தி வாழ்த்துரைக்கின்றேன்.

இவ்வண்ணம்
**A.V.S. சற்குணராஜா M. AC.F (SL) J.P**
*ஆசிரியர்*
*ஸ்ரீ கதிரேசன் ஆலயப் பஞ்சாயத்தார்,*
*தலைவர், சைவ முன்னேற்றச் சங்கம்.*
*வத்துகாமம்.*

உ

சிவமயம்

## வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. A.S. இராதாகிருஷ்ணன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

*'பாமரனையும் பண்புள்ளவனாகவும்*
*பண்புள்ளவனைத் தெய்வமாகவும்*
*உயர்த்தும் கருத்தே மதம் என்பதாகும்.*

*-சுவாமி விவேகானந்தர்*



மதம் மனிதனை நேரிய வழியில் வாழ்ந்திட வழிப்படுத்தும் சாதனம். மனித வாழ்வு மதத்துடன் இரண்டறக் கலந்துள்ளது. மத விடயங்களும் அதன் பண்பாட்டுக் கலாசாரக் கோலங்களும் மனித வாழ்வியலில் ஆளுகை செலுத்துகின்றன. மதப் போதனைகளையும், தத்துவார்த்தக் கோட்பாடுகளையும், வழிபாட்டு முறைகளையும் அவற்றிற்குரிய தாற்பரியம் உணர்ந்து உரிய முறையில் கடைப்பிடித்து ஒழுகின் மனித குலத்தினர் மாட்சிமை கொள்வர்; அத்துடன் தமது வாழ்வின் இலட்சியத்தினையும் எய்து கொள்வர். அந்தவகையில் மனிதனின் இறைவழிபாட்டினையும், ஆன்மீகச் சிந்தனைகளையும் வளம்படுத்திக் கொள்வதற்குச் சாலவும் பொருத்தமான ஸ்தானம் ஆலயமாகும். பண்பையும் பக்தியையும் ஆன்மீகத்தையும் தெய்வீகத்தையும் ஏற்படுத்தும் உன்னத நிலையமே ஆலயம். இதனால்தான் ''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என ஆன்றோர்கள் திருவாய் பகின்றுள்ளனர். எம்முன்னோர்களும் தாம் குடியமர்ந்த இடங்களில் எல்லாம் தம் இஷ்டதெய்வங்களுக்கு கோயில்கள் அமைத்து அவற்றினை பயபக்தியுடன் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர்.

அவ்வழியமைப்பினைப் பின்பற்றி வத்துகாமம் திருநகரிலும் சைவப் பெரு முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ கதிரேசன் ஆலயம் ஓர் நூற்றாண்டுக்கு மேல் நிலைபெற்று மக்களுக்கு அருளாட்சி புரிந்து வருகின்றமை சிறப்புக்குரியது. நீண்ட பல ஆண்டுகளுக்குப்பின் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்று 'குடநன்னீராட்டினைக் காண விளைகின்றமை சைவப் பெருமக்களை உவகையடையச் செய்யும் என்பது திண்ணம். ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தினைப்

பரிபாலனம் செய்து வரும் சைவ அபிமானிகள் சங்க நிர்வாகத்தினர் பொது மக்களின் ஆதரவுடன் தமது கடின உழைப்பினையும் இணைத்து ஆலயத்தினைப் புதுப்பொலிவுடன் உருவமைப்புச் செய்து பெருந்சாந்திப் பெரு விழாவினை இறையருள் சித்தத்துடன் மேற்கொள்ள விளைவது பாராட்டத்தக்கது. சைவமக்கள் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் மகிமையையும் அதன் வரலாற்றுப் பின்னணிகளையும் நன்குணர்ந்து ஆலயம் மேன்மேலும் வளர்ச்சி பெற்றுத் தேவஸ்தான நிலைக்கு உயர்வு காண்பதற்கு இறைச் சேவைச் சிந்தனையுடன் உழைத்திடல் வேண்டும்.

இத்தருணத்தில் கும்பாபிஷேக நிகழ்வினை மகிமை பெறச் செய்யும் வண்ணம் வத்துகாமம் 'சைவ முன்னேற்றச் சங்கத்தினர்' வெளியீடு செய்யும் சிறப்பு மலரின் ஊடாக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வு கொள்ளுகின்றேன். பெருஞ்சாந்தி நிகழ்வும் கும்பாபிஷேகச் சிறப்புமலரும் சீர்பெற்று வளம் காண எல்லாம் வல்ல கதிரேசப் பெருமானை மனதாரத்துதித்து அனைவருக்கும் இறையருள் கிடைத்திட வேண்டி நிற்பதுடன், அகிலமெங்கும் சாந்தி சமாதானம் அமைதி நிலைத்திடுக.

*''தன்னலமற்ற பொதுப்பணியே இறைச்சேவையாகும்''*

இங்ஙனம்,
இறைத் தாழ்பணிந்து
**A. S. இராதாகிருஷ்ணன்** (ஆசி)
*பொதுச் செயலாளர்,*
*சைவ முன்னேற்றச் சங்கம்,*
*வத்துகாமம்.*

உ
*சிவமயம்*

### சைவ முன்னேற்றச் சங்கப் பிரச்சாரப் பிரிவு உத்தியோகத்தரின்

# வாழ்த்துச் செய்தி



நல்லருள் நயமுடன் நல்கும் விக்ன விநாயகரின் பாதக் கமலம் பரவி அனைத்தையும் வென்ற முருகனின் முதலாவது கும்பாபிஷேகம் சுமார் 80 வருடங்களுக்கு முன் நடைபெற்றதாக சான்றுகள் உள்ளன. 1944ஆம் ஆண்டு சைவ அபிமானிகள் சங்கம் தனது நிர்வாகத்தின் கீழ் சட்டமாக்கப்பட்டு 1948ஆம் ஆண்டு முத்துமாரியம்மன் தேவஸ்தானத்துடன் இணைத்து பொது தேவஸ்தானமாக்கி 2004 மார்கழி மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 25.03. 2005 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு இக்குறுகிய காலத்தில் திருப்பணி வேலைகள் நிறைவுபெற்று 06.06.2008 முதல் கதிரேசன் ஆலயமாக இருந்த இவ்வாலயம் 2008 முதல் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயமாகப் பெயர் மாற்றப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகிறது.

ஆலயங்கள் என்பவை வெறும் பிரார்த்தனை மண்டபங்களாக மட்டும் கருதப்படுவதில்லை. நம் முன்னோர்கள் இயற்கையின் எல்லாப் பொருள்களிலும் பரதத்துவமாகிய பிரும்மம் அடங்கியிருப்பதை உணர்ந்திருந்தார்கள். அதே பிரும்மம் மனிதன் உற்பட எல்லா உயிரினங்களிடமும் மறைந்து இயங்குவதை மக்களுக்கு உபதேசித்தார்கள். மனித அறிவுக்கு எட்டிய இந்த மகத்தான உண்மைதான் இந்துமத ஆலயங்களை அமைக்க அடிப்படைக் கோட்பாடு ஆயிற்று.

இதனடிப்படையில் [redacted] சங்கத் தலைவர் ஜி. சிவராஜ் J.P மற்றும் சங்க உறுப்பினர்கள் பக்த அடியார்கள் நன்கொடையுடன் ஆலய மகா கும்பாபிஷேகம் பல புதிய மூர்த்திகளுடன் புதுப்பொலிவுடன் வரும் பக்தர்களுக்கு அருளாசி வழங்குகின்றது.

2000ஆம் ஆண்டு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகச் சிறப்பு மலரும் 2008 ஆம் ஆண்டு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயக் கும்பாபிஷேகச் சிறப்பு மலரும் வெளியிட அவன் அருள்வழி இச்சிறுபணி யாவரையும் சென்றடைய கந்தன் துணையே வழிநின்றது.

இறை பணியில்,
'கலையமுதன், கலாநேசன், தேசகீர்த்தி'
**தினக்குரல் எஸ். ராமதாஸ் J.P.**

*ஜெயந்தி மஹால்,*
*12/7, வரகாஸ்தென்ன,*
*எல்கடுவ வீதி,*
*வத்துகாமம்.*

உ
சிவமயம்

# வாழ்த்துரை

'செயத்தக்க அல்ல செயக்கெடும் செயத்தக்க
செய்யாதை யானும்கெடும்''



என்ற திருவருள்ளுவரின் திருவாய் மொழியானது சமூகத்தில் செய்யத்தகாதவற்றைச் செய்வதாலும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விடுவதாலும் கேடு விளையும் எனப்பொருள் பகிர்கின்றது. எனவே அவ்வப்போது எமது சமய சமூகக் கடமைகள் எவையென்பதை உணர்ந்து கருமமாற்றுதல் மக்களாய்ப் பிறந்த எமது தலையாய கடனாகும். இதனை நன்கு கருத்திற் கொண்டு வத்துகாமம் 'சைவ அபிமானிகள் சங்கம்' காலத்துக்குக் காலம் சமூகம் - பயன் கொள்ளத்தக்க வகையில் இறைபணிகளை ஆற்றி வருவது யாவரும் நன்கு அறிந்த விடயம். அமைப்பினர் தமது இறைப்பணி கைங்கரியத்தில் மீண்டும் வரலாற்றுப் பதிப்பொன்றினை நிலைநிறுத்தும் வகையில் வத்துகாமம் ஸ்ரீ கதிரேசன் திருத்தலத்தினை மீள்புனரமைப்புச் செய்து பெருஞ்சாந்தி விழாவினை முன்னெடுத்திருக்கும் இப்புண்ணிய நன்நாளில் நிகழ்வினை மகிமைப்படுத்தும் வகையில் வெளிவரும் கும்பாபிஷேகச் சிறப்பு மலரின் ஊடாக எனது வாழ்த்துரையை வழங்குவதில் அகமகிழ்வு கொள்ளுகின்றேன்.

சமயமும் வாழ்வியலும் வேறு அல்ல. சமயத்துடன் இணைந்ததே வாழ்வியலாகும். சமயத்தையும் வாழ்வியலையும் வளம்படுத்துவது சோதிடக் கலையாகும். 'ஆயகலைகள் அறுபத்துநான்கினில் ஓர் கலையாகச் சோதிடக்கலை அமைவு கொண்டுள்ளது. மானிட வாழ்வினை செப்பனிட்டு நன்னெறிப்படுத்துவது சமயமாகும். சமயம் நம்பிக்கையின் பிரகாரம் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டு வளர்ச்சிப் பரிமாணம் கண்டு சிறப்புற்று விளங்குகின்றது. மனித வாழ்வும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. நிச்சயமற்ற உலக வாழ்வில் நம்பிக்கையின் அடித்தளத்திலே நின்று மனிதன் சமய நெறியின்ஊடாக வாழ்ந்து தனது வாழ்வியல் இலட்சியத்தை நிறைவு செய்து கொள்ளுகின்றான். எனவேதான் சமயமும் மனிதவாழ்வும் வேறு அல்ல என்கின்றனர் மெய்யறிவாளர்கள்.

நிலையற்ற மானிட உலகியல் வாழ்வில் மாந்தர்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பினை ஏற்படுத்தி வாழ்வதற்கு சோதிடக் கலை நம்பிக்கையூட்டுகின்றது. சோதிடக் கலைக்கும் மனிதவாழ்வுக்கும், சமயத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதன் வழியில்த்தான் பண்டையகாலம் தொட்டு இன்றுவரை சோதிடக் கலை மனிதவாழ்வில் ஓர் அங்கமாக அமைந்து வாழ்வை வளம்பெறச் செய்ய உதவிவருகின்றது. ஜனனம் தொட்டு மரணம் வரைக்கும்; மங்கள நிகழ்வுதொட்டு அமங்கள நிகழ்வு வரைக்கும் சோதிடக்கலை மனித வாழ்வுடன் தொடர்புபட்டு அதனை வழிப்படுத்தி வளம்காண வகை செய்கின்றது. ஆன்ம இலட்சிய வேட்கையை தீர்த்துவைக்கும் ஆலயங்களின் அமைவிடம் தொட்டு; கட்டடக்கலை, விக்கிரகவியல் அமைப்புக்கலை, கிரியாமுறை வரை சோதிடம் தொடர்புபட்டு நின்று சமயநெறி வளம்காண உதவுகின்றது. சமயம், மனிதவாழ்வு, சோதிடம் ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று ஒன்றிணைந்து வளம் கண்டு மனித வாழ்க்கையை அர்த்தமுள்ளவையாக்குகின்றன. இதனால்தான் மன்னராட்சிக் காலம்தொட்டு இன்றைய மக்களாட்சிக் காலம் வரை சமய. மனித வாழ்வுடன்; சோதிடக் கலை முக்கிய இணைவினைப் பெற்று நிலைபெற்றுள்ளது என்பது வெள்ளிடைமலை.

நூல் அறிவால் வரும் மனக்குழப்பத்தினைப் போக்கி மெய்ஞானத்தை மானிடர்களுக்கு வழங்கும் ஞானகுருவாம் ஸ்ரீ கதிரேசப் பெருமான் மக்கள் இடர்களைக் களைந்து வாழ்வை வளமாக்கிடும் அருள்வள்ளல். பரம்பொருளுக்கே ஞானஉபதேசம் செய்த ஞானகுரு. சூரபத்மனுடைய அகந்தையைக் களைந்து அவனுக்கு ஞானவாழ்வு அளித்திட்ட ஞானவள்ளல். கலியுகத்தின் தெய்வம் கதிரேசன். கதியற்ற மக்களுக்கு 'யாமிருக்கப் பயமில்லை' என்றுரைத்த கார்த்திகேயன். வத்துகாம நன்நகரில் புதுப்பொலிவுடன் புனருத்தாரணம் கண்டு பெருஞ்சாந்தி விழாவினை இன்று கண்டிடும் திருநாள் இறைப்பாக்கியமாகும். ஸ்ரீ கதிரேசன் ஆலய கும்பாபிஷேக நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றிடவும் சைவ முன்னேற்றச்சங்கத்தினரால் வெளியீடு செய்யப்படும் கும்பாபிஷேக சிறப்பு மலர் சீர்பெற்றிடவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை இறைவனைப் பிரார்த்தித்து வழங்குகின்றேன்.

*''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''*

**ஜோஷித் A.V.S. துளசிராஜா**
*சோதிட விற்பன்னர், சித்தாயுள்வேத மருத்துவர்.*

உ
சிவமயம்

# வாழ்த்துச் செய்தி



வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி குன்றுதோறாடும் குமரவேள் வத்துகாம நகரின் மத்தியில் ஸ்ரீ கதிரேசப் பெருமான் என்னும் பெயருடன் ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேதரராய் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்.

வத்துகாம நகரில் பிரதான வீதிகள் மூன்று உண்டு. இந்த மூன்று வீதிகளிலும் தெய்வ அநுக்கிரகம் செறிந்து உள்ளது. ஒரு வீதியில் விநாயகரும் நடுநாயகமாக ஸ்ரீ முத்துமாரியம்பாளும் மற்றும் மாத்தளை வீதியில் ஸ்ரீ கதிரேசப் பெருமானும் இந்த ஊர் பல இன, பலமத, பல மொழி மாந்தர்கள் யாவற்கும் மாத்திரமல்ல இந்த வீதிகள் வழியாகப் பயணம் செய்யும் யாவற்க்கும் உறுதுணையாக இருந்து அருள்பாலித்து வருகின்றார்கள்.

மாத்தளை வீதியில் கோவில் கொண்டருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிரேசப் பெருமானின் ஆலயம் புனருத்தாரணம் செய்து, பரிவார மூர்த்திகளின் ஆலயங்களும் புதிதாக அமைத்து மஹா கும்பாபிஷேகம் எனும் குடமுழுக்கு 06.06.2008 நிகழ இருப்பது வத்துகாமம் வாழ் மக்களுக்கு மாத்திரமல்ல இதை அண்டியுள்ள கிராமங்கள், நகரங்கள் வாழ் பல்லாயிரம் மக்களுக்கும் மனப் பூரிப்பும் அக மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது.

வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கத்தின் அயராத முயற்சியால் 01.09.2000 ஆம் ஆண்டு வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் புனருத் தாரணம் செய்து மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று இப்போது 06.06.2008 இல் அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயமும் புனருத்தாரணம் செய்து மஹா கும்பாபிஷேகத்தையும் அதே நிர்வாகத்தின் பெருமுயற்சியால் நடைபெறுகின்றது.

புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீ கதிரேசப் பெருமான் வள்ளி தெய்வானை சிவ விக்கிரகங்கள் கம்பீரமாகப் புதுப் பொலிவுடன் அனைவரின் கண்களையும் உள்ளங்களையும் கவர்ந்து அருள்பாலிக்கிறார்கள்.

இவ்வாலயமும் பரிபாலன சபையான சைவ அபிமானிகள் சங்கமும் சிறப்புற அருள்மிகு ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத கதிரேசப் பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'*

இங்ஙனம்,

**வி. கனகரெத்தினம்**

*65. மாத்தளை வீதி, வத்துகாமம்.*

உ
சிவமயம்

# வாழ்த்துச் செய்தி



வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயம் 1928ஆம் ஆண்டு ஆரம்பமாகவுள்ளது. 14.12.1939இல் இவ்வாலயத்தில் சரஸ்வதி அறநெறிப் பாடசாலை தொடங்கியிருந்தது. சற்றேறக்குறைய 80 ஆண்டுகால சரித்திரத்தினைக் கொண்ட இந்த ஆலயம் வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கத்தின் தற்போதைய நிர்வாகத்தின் கீழ் 2004ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 06.06.2008 இல் இன்று குடமுழுக்கு என்னும் கும்பாபிஷேகப் பெருவிழா நடக்க திருவருள் கிட்டியுள்ளது கடைத்தற்கரிய பெரும் பேறு.

இந்தப் பொன்னான நாளில் வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கம் தன்னுடைய பிரச்சாரப் பிரிவினூடாக பல முயற்சிகளுடன் பல நல்ல விடயங்களைத் தாங்கிக் கொண்டு கும்பாபிஷேக மலரானது அடியார்களிடையே வெளிவருகின்றது. அவர்களுடைய இந்த நற்பணிக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

வளம் படைத்தோர் பொற்கிளி தாரீர்
வலி படைத்தோர் தோள் கொடுப்பீர்

என்ற ஆன்றோர் வாக்கின்படி ஆலயத் திருப்பணிகளை வாரி வழங்கிய வள்ளல் பெருமக்களுக்கும் எல்லா வழிகளிலும் நற்பணிக்கு உதவிய நல்லடியார்களுக்கும் கலியுக வரதனான வள்ளியம்மை- தேவசேனா சமேத எம்பெருமான் சுப்ரமண்யக் கடவுளின் திருவருள் என்றென்றும் வற்றாமல் கிடைக்க மனமார பிரார்த்தனை செய்கின்றேன்.

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியாரெல்லாம்.

நன்றி!

அன்புடன்,

**சி. கணேசமூர்த்தி**
(முன்னாள் தலைவர், சைவ முன்னேற்றச் சங்கம்)

'ஜெயமஹால்'
283/6 பட்டிராவணை,
வத்துகாமம்

உ
சிவமயம்

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து சிலதுளிகள்.....

*எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ கதிரேசப்பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி இம்மலரைச் சமர்ப்பிக்கின்றேன்.*

இலங்கையின் மத்திய மாகாணத்தில் நீர்வளம், நிலவளம் மலைச்சாரல் அருவியாகவும் பொருந்திய வளம் நிறைந்த பாததும்பர தேர்தல் தொகுதியின் தலைநகரமாக விளங்கும் வத்துகாமம் நகர மத்தியில் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று 06.06.2008 இல் நடைபெறுவது வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இந்நிகழ்வையொட்டி வெளியிடப்படும் ''மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்'' கலை கலாசார விழுமியங்களையும் வரலாறுசார் உண்மைகளையும் கொண்டுள்ளது. சைவ உணர்வுடன் பாரம்பரியங்களும், சமய விழுமியங்களும் கட்டிக்காக்கப்பட வேண்டியன. எமது இந்து மக்கள் சமய அறிவு அறியப் பெறாத காரணத்தாலும் நாகரிக மோகத்தாலும் வேற்று மதங்களைத் தழுவிக் கொண்டுள்ளனர். நம் நாட்டில் ஆரம்பத்தில் இந்துமதமே பரவி இருந்ததாக நம் வரலாற்றினை ஆராயும் அனைவரும் ஒத்துக் கொண்டுள்ளனர். நம் நாட்டு வரலாற்றில் விஜயன் வருகைக்கு முன்பே இந்துமதம் பிரதான மதமாக சிவனையே வழிபட்டு வந்தமைக்கு உதாரணமாக திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய திருத்தலங்கள் அழியாமல் இன்றும் மக்களுக்கு திருவருள் அருளியவண்ணம் உள்ளது என்றால் கற்பனைக்கு எட்டாக் காலத்திலேயே எம்மதம் இலங்கையில் நிலைத்துள்ளதினைக் காணலாம். இந்து மதத்தினை வளர்க்க 1877 ஆம் ஆண்டு திரு. எச். எம். சின்னத்தம்பி ஆரம்பித்த இந்து சமயம் சார்பான 'இலங்கை நேசன்' புதிய உணர்வுகளை வெளிப்படுத்தியது. ஆறுமுகநாவலர் நூல்கள் பலவற்றினை எழுதினார். இதன்மூலம் எமது இந்து மக்கள் வேற்று மதங்களை தழுவியதில் இருந்து விலகிக் கொண்டனர். இக்காலகட்டத்தில்தான் கொழும்பு சுப்பிரமணியர் ஆலயத்தில் சமயப் பிரச்சாரங்களுக்காக சாமுக்குருக்கள் சைவமதம் அழிவிலிருந்து காக்க பத்திரிகை வேண்டும் என்ற கோரிக்கையின் பயனாக 1880ஆம் ஆண்டு 'சைவ உதயபானு' வெளிவந்தது. அதன்பின் 1885 ஆம் ஆண்டு ஞானசித்தி, இந்துபோதினி, 1910ஆம் ஆண்டு சைவ வினாவிடை, சமயபோதினி ஆகிய நூல்கள் வெளிவந்தன. நாவலரைப் போல் சங்கிர பண்டிதரும் மற்றும் சீடர்களும் பிரசங்கங்கள் மூலம் சமயத்துறையைக் கட்டிக் காத்தனர்.

இதன் அடிப்படையில்தான் வத்துகாமம் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் 1938.12.15 அன்று சைவ அபிமானிகள் சங்கம் பொதுக் கூட்டத்தில் தமிழ் மாணவர்களுக்கான அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டு இலவச சமயக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தொடர் நடத்தப்பட்ட இடத்துக்கான வாடகை 10 சதம் கொடுக்கப்பட்டது. 1939.12.04 இல் சைவ அபிமானிகள் சங்கம் செல்லையா தலைமையில் கூடி அறநெறிப் பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானப்படி 2 ரூபா 50 சதம் நிதி ஒதுக்கப்பட்டது. அதன்பின் 1939.12.14 திகதி ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் சரஸ்வதி அறநெறிப் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பித்து ஸ்ரீமான் தி. வ. ஏ. ராமசாமி சொற்பொழிவாற்றினார். பின் 1940.01.22 இல் மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகங்களான சைவ வினாவிடை, சைவ பிரகாசிகை, சைவ வேதம், திருவருள் பாமாலை ஆகிய நூல்கள் வழங்கப்பட்டன. இவ் அறநெறிப் பாடசாலையை நடத்துவதற்கு சங்க அங்கத்தினர் ஒரு நாளுக்கு ஒரு சதம் வீதம் சேகரித்து மாதம் 30 சதம் நிதியாக வழங்கி அறநெறிப் பாடசாலை நடாத்தி வந்தனர். பிற் காலப்போக்கில் சில நிர்வாக மாற்றத்தினால் அறநெறிப் பாடசாலை இயங்கவில்லை. இதன் அடிப்படையில் தான் எமது சைவ முன்னேற்றச் சங்கம் 1989ஆம் ஆண்டு டாக்டர் வி. கனகரத்தினம் தலைமையில் கூடி புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக, உபதலைவர் சீ. எஸ். சுந்தரலிங்கம், செயலாளர் A. S. இராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர் க. மோகனநாதன், பொருளாளர் சு. சற்குணராஜா பிரச்சாரக்குழு கோ. சிவராஜா, இராமச்சந்திரன் ஆகியோரால் புதிய நிர்வாகம் உதயமாகியது. சங்கம் சைவ முன்னேற்றத்துக்காக அறிவு ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மட்டுமல்லாது பின் தங்கிய பிரதேசங்களில் இந்து சமயத் தத்துவங்கள் வாழ்க்கை முறை என்பவற்றினை மக்களுக்கு தெளிவுபடுத்துதல். அமுதசுரபி அறநெறிப் பாடசாலை ஊடாக மாணவர்களுக்கு சைவ சமயப் பாடம் சம்பந்தமாக போதனை, எதிர்கால வாழ்க்கைக்கான நல் ஒழுக்கங்களை எடுத்துரைத்தல், சமயம் சம்பந்தமான விடயங்களை எளிய முறையில் இந்து மக்களுக்கு புரிய வைத்தல், மதப் பிரச்சாரங்களை முன்னெடுத்தல், இந்து மக்கள் பொருளாதார நெருக்கடியில் பாதிப்புறும் போது உதவுதல். பாடசாலையில் நடைபெறும் சைவ சமய சம்பந்தமான நிகழ்வுகளுக்கு ஊக்கமும் ஆதரவும் அளிப்பதுடன் மாணவர்களின் மத்தியில் சைவசமயத் திறனை வளம்படுத்துவதற்காக சமய சம்பந்தமான பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, எழுத்துப் போட்டி பரீட்சை, கலைத்திறன் சங்கத்தின் பெயரில் நடத்திப் பரிசில் வழங்குதல் - பாடசாலை மாணவர்களுக்கு பூஜை அறை சமய சம்பந்தமான விளக்கங்களை வழங்குதல், பாடசாலை மட்டத்தில் சைவத்தை வளர்த்தலுடன் சமய அறிவு பின் தங்கியுள்ள பிரதேசங்களில் ஒவ்வொரு பூரணைத் தினத்திலும் சமய போதனை நடத்துவது. ஒவ்வொரு வருடமும் வறுமை நிலையுற்ற மாணவன் அல்லது மாணவியைத் தேர்ந்தெடுத்து ஒரு வருடம் ஆயுள் கொண்ட புலமைப் பரிசில் திட்டமும் நிதியும் வழங்கல் சங்கத்தின் பெயரில் பத்திரிகை, நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், சைவ சமய விழாக் காலங்களில் பண்ணிசை, பஜனைகள் நடத்தல், சைவ சம்பந்தமான நூல்களைச் சேகரித்தல் அதனை எதிர்காலச் சந்ததியினருக்கு பயன்படுமாறு கொடுத்துதவுதல் போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செயற்படுத்தி வருகின்றது.

இதன் முதற்கட்டமாக வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக சிறப்பு மலர் 01.09.2000 ஆம் ஆண்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. வத்துகாமம் வாழ் மக்கள் ஆன்மீகத் துறையிலும் மனித முயற்சியிலும் வேரூன்றியிருக்க வத்துகாமத்தின் நகர் மத்தியில்

அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் மூலகாரணமாக அமைகிறது. சுமார் 80 வருடங்கள் பழைமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ கதிரேச சுவாமி பெருமைகளையும் அருட்கடாட்சங்களையும் உலகிற்கு எடுத்தியம்ப வேண்டுமென்ற நன்நோக்கத்தில் உயர்திரு. அமரர் டாக்டர் ஏ. வி. சுப்பிரமணியம் அவர்களின் குடும்பத்தாரும் மற்றும் சி. சண்முகநாதன் குடும்பத்தினரும் ஆரம்பகால வரலாற்றினைத் தந்துதவினர் அவர்களுக்கும், அத்தோடு இந்நூலுக்குப் பல வழிகளிலும் ஆலோசனைகளையும் கட்டுரைகளையும் வழங்கிய ஆசிரியர் ஏ. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றிதனை நவிலக் கடமை பூண்டுள்ளேன். பெரும் அவாவில் இந்த நூலை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் பெருமிதமடைகின்றேன். இந்த நூலை வெளியிடுவதற்கு மன உறுதியைத்தந்த காத்திரமான ஓர் நூலை வெளியிட வாய்ப்பளித்த பெருமை தேவஸ்தான சைவ அபிமானிகள் சங்கத் தலைவர் திரு. கோ. சிவராஜ் J.P. (அ.இ.) அவர்களைச் சாரும்.

இம்மலரை வெளியிட பல வழிகளிலும் உதவியவர்களுக்குத் விஷேடமாக ஆசிச் செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் விளம்பரங்களையும் வழங்கியவர்களுக்கும் நிதி உதவி வழங்கியோருக்கும் முதற் பிரதி, சிறப்புப் பிரதிகளை வாங்க முன்வந்தோருக்கும் மலரைச் சிறப்பான முறையில் அமைத்துத் தந்த ஸ்ரீ கணேசா பிறிண்டேர்ஸ் அச்சகத்தாருக்கும், சைவ அபிமானிகள் சங்கத்தினருக்கும் தொண்டர்கள் அடியார்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள். எமது சைவப் பணி தொடர்ந்திட உங்களிடம் இருந்து ஆக்க பூர்வமான ஒத்துழைப்புக்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றேன்.

அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி அருட்காட்சம் மக்கள் அனைவருக்கும் கிடைப்பதாகுக.

*''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''*

**தினக்குரல் எஸ். ராமதாஸ் J.P**
பிரச்சார பொறுப்பாளர்,
*சைவ முன்னேற்றச் சங்கம்*
*வத்துகாமம்.*

உ
சிவமயம்

# திருத்தல் வரலாறு

ஆக்கம் : **மகேஸ்வரி ராமதாஸ்**
*வத்தேகம.*

**ஆ**லயம் தொழுவது சாலவும் நன்று என்ற பழமொழிக்கமைய முன்னோர் வழிநின்று இன்னும் நம் இந்து மதத்தினர் தாம் வாழும் ஊரெல்லாம் கோயில் கட்டி வாழ்வாங்கு வாழ்ந்த பெருமைக்குரியவர்கள் நம்மவர்கள் என்றால் மிகையாகாது. ஊரெல்லாம் கோயில் எழுப்பி எமது ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டிச் சிறக்க வாழ்ந்த எம்முன்னோர்கள் எமக்கென விட்டுச் சென்ற பழம்பெரும் திருத்தலங்களை அருமையாய் பாதுகாப்பது எம் தலையாய கடமை அன்றோ, அந்த வழியில் இன்று குன்றா அருள்மழை பொழியும் முருகன் திருத்தலமாக மத்திய மாகாணத்தில் வத்துகாமம் நகரில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் சுவாமி ஆலயமாகும்.

வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் சுவாமி ஆலயம் எகிதிரகம்புரவத்தை என்ற பெயரில் உள்ள காணி உரிமையாளர்களான குணசேகர ஆராச்சிகே பொன்கென்றிக் தி சில்வாவும் மனைவி டொனா செலஸ்ரீனா குணசேகர ஹாமினேயும். இவர்கள் 1928 மார்ச் மாதம் 15ஆம் திகதி (1928.03.15) காணியை 3000/- ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர். இல. 68, சுப்பிரமணிய சுவாமி கோவில் கட்ட இக்காணி கொடுக்கப்பட்டது. கோயில் நிர்மாணப் பணிகளை சின்னத்தம்பி கதிர்வேலுப்பிள்ளைக்கும், செ. முத்தையன் பிள்ளைக்கும் வழங்கப்பட்டது. தர்ம கர்த்தாக்களாக குமாரசாமி குருக்கள், பால சுப்பிரமணியக் குருக்கள். கதிர்வேலுப்பிள்ளை குமாரசாமி, செ. முத்தையாபிள்ளை, வீரய்யாபிள்ளை, ரெங்கநாதன், கந்தவனம் செல்லையா சோமசேகரம் ஆகியோரும் இணைந்து 96x72 அடி நிலப்பரப்பில் கோயிலை அமைத்தனர். நிர்வாகத்தின் முகாமையாளராக பாலசுப்பிரமணியக் குருக்கள் நியமிக்கப்பட்டார். தினமும் இருமுறை பூஜை வழிபாடுகள் செய்யப்படவேண்டும் என்றும், மூன்று அன்பளிப்பாளர்களின் பெயரில் அர்ச்சனை செய்து விபூதியை அவர்களின் வீடுகளுக்கே அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும், கோயில் கைவிடப்படுமாயின் சட்டப்படி உரிமையாளர்களான குணசேகர ஆராச்சிகே, டொன் கென்றிக் தி சில்வா, திருமதி டொனா செபஸ்ரீனா குணசேகர, ஹாமினே ஆகியோரிடம் கட்டிடம் ஒப்படைக்கப் படல் வேண்டும் என்ற சட்டத்துக்கமையவே ஆரம்ப நிர்வாகப் பதவிகள் நடந்தது.

1936ஆம் ஆண்டில் உப தலைவராக க. கோபால் ஆச்சாரியும் செயலாளராக சி. இராஜதுரை ஆகிய நிர்வாக சபையினர் சங்க நடவடிக்கைகளை நடத்தி வந்தனர்.

1938-12-15 அன்று காலை இலக்கம் 67 இல் அமைந்திருந்த கட்டிடத் தொகுதியில் சைவ அபிமானிகள் சங்கப் பொதுக்கூட்டம் ஆரம்பமாகி தமிழ் மாணவர்களுக்காக அறநெறிப் பாடசாலை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் மாணவர்களுக்கு இலவச சமய கல்வி போதிக்கும் ஆசிரியருக்கு ஊதியம் கொடுத்தல்

சம்பந்தமாகவும் நடைபெற்ற கூட்டத்தொடருக்கு இடம் கொடுத்தவர்களுக்கு 10 சதம் கூலியாகவும் கொடுக்கப்பட்டது. 1939-01-02 இல் புதிய கதிரேசன் ஆலயத்தில் திரு. கோபால் ஆச்சாரி தலைமையில் கூட்டம் தொடர்ந்தது. ஆலயத்தை பொறுப்பேற்றல் சம்பந்தமாகவும் அறநெறிப் பாடசாலை வகுப்புச் சம்பந்தமாகவும், அரச கல்வி சட்டத்துக்கமைய மாணவர்களுக்கு சுகாதார வசதிகள் போன்ற வசதிகள் உள்ளடங்கியதாக அறநெறிப் பாடசாலை அமைய வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டு, அந்த இடமாக பெற்றிக்தன்னை என்ற இடத்தில் பாடசாலை ஆரம்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

1939.06.18 அன்று கூட்டம் தொடர்ந்து ஆரம்பித்து மு. செ. செல்லையாபிள்ளை, திரு. கனகராஜா, செ. இ. இராஜதுரை ஆகியோர் பிரம்மஸ்ரீ சு. பாலசுப்பிரமணியக் குருக்களிடம் சங்க நோக்கம், இந்து மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, ஆலய அபிவிருத்தி ஆகியவை சம்பந்தமாக கலந்து பேசி சமரச முடிவுக்கு வந்து 1939.06.18 பிரம்மஸ்ரீ சு. பாலசுப்பிரமணியக் குருக்களிடம் காணியைப் பெற்றுக் கொண்டனர். 1939.07.02 ஆம் திகதி அதற்காக ரூபா 5/= கொடுக்கப்பட்டது. மீண்டும் 1939.12.04இல் மீண்டும் கூட்டத்தொடர் ஆரம்பமானது. திரு. மாரிமுத்து, முகாமையாளர் ஆர். எம். கோ. வாசஸ்தலத்தில் திரு. செல்லையாபிள்ளை, கே. கோபால் ஆச்சாரி தலைமையில் ஆராயப்பட்டது. அதற்கான தீர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டு 1939.12.04 இல் சைவ அபிமானிகள் சங்கம் மு. செல்லையாபிள்ளை தலைமையில் இல. 60 கட்டிடத் தொகுதியில் ஆரம்பமானது. அறநெறிப் பாடசாலை சம்பந்தமாகவும் அதற்குத் தேவையான ஆசிரியர் 1939.12.12 திகதிக்கு முன் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அறநெறிப்பாடசாலை 1939.12.14 ஆரம்பிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மீண்டும் கூட்டத்தொடர் 1939.12.11 திகதி மு. செல்லையாபிள்ளை தலைமையில் கோபால் ஆச்சாரி வை. ராமசாமிபிள்ளை வே. கந்தையா, செ. இராசதுரை ஆகியோர் இணைந்து இந்து மாணவர்களுக்கு அறநெறிப் பாடசாலைக்கான, இலவச பாடப்புத்தகம், இலவசக் கல்வி ஆகியவற்றுக்காக 2 ரூபா 50 சதம் நிதி ஒதுக்கப்பட்டது. அத்துடன் கூட்டம் முடிவுற்றது. அதன் பின் 1939.12.14ஆம் திகதி கதிரேசன் ஆலயத்தில் சரஸ்வதி அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் மாணவர்களுக்கு மாலை 06.30 மணிக்கு ஸ்ரீமான் தி. வ. எ. ராமசாமி அவர்கள் வித்தியாரம்பம் தொடக்கி வைத்தார். ஆரம்ப ஆசிரியராக திரு. அ. கனகரத்தினம் கடமையாற்றினார். அன்று வ. ஏ. ராமசாமி சொற்பொழிவு ஆற்றி சைவ மாணவர்களுக்கு வினாவிடை மூலம் கேள்வி எழுப்பி மாணவர்களை உற்சாகமூட்டினார். அதன்பின் தலைவர் ஆழ்வாப்பிள்ளை அவர்கள் உரை நிகழ்த்திய பின் விழா நிறைவு பெற்றது. பின் மீண்டும் அறநெறிப் பாடசாலை சம்பந்தமாக 1940.01.22 இல் இலக்கம் 67இல் அமைந்த கட்டிடத்தில் கோபால் ஆச்சாரி தலைமையில் விழா நடைபெற்று மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தகங்களான சைவ வினாவிடை, சைவப் பிரகாசிகை, சைவ வேதம், திருவருள் பாமாலை, மற்றும் இரண்டு கதிரை, கரும்பலகை, மேசை ஆசிரியருக்கான சம்பளம் ஆகியவற்றுடன் சந்தனக் கட்டை, குங்குமம் போன்ற பூஜைகளுக்கான பொருட்களும் வழங்கப்பட்டது. சரஸ்வதி அறநெறிப் பாடசாலை நடத்துவதற்கு நிதி சேகரிப்பு சம்பந்தமாக கலந்துரையாடல் செய்து ஒரு அங்கத்தவர் ஒரு சதம் வீதம் சேகரித்து மாதம் 30 சதம் சேகரித்து செயலாளர், சி. இராசதுரையிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு செயல்படத் தொடங்கினார். அதன் பின் 1940.05.02 ஆம் திகதி கதிரேசன் ஆலய பரிபாலன சபை சம்பந்தமாக முது. செல்லையாபிள்ளை, மு.செ. செல்லையாபிள்ளை, க. கந்தசாமி ஆச்சாரி ஆகியோர் கண்டியில் இராசையா அவர்களின் அலுவலகத்தில் பிரம்மஸ்ரீ சு. சீனிவாசகக் குருக்களை சந்தித்தனர். பேச்சுவார்த்தை நடத்தியபின் சமரச முடிவுக்கு கொண்டு வந்து 03.05.1940 வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு சங்கத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்றும் பிரம்மஸ்ரீ சு.

சீனிவாசக் குருக்களிடம் ரூபா 10/= கொடுக்கப்பட்டது. பின் 03.05.1940ஆம் ஆண்டு மு. செல்லையாவின் வாசஸ்தலத்தில் கூடிய சங்க உறுப்பினர்கள் சி. சிதம்பரபிள்ளை தலைமையில் கோரிக்கையை முன்வைத்தபோது அதற்கு இணங்கிய பிரம்மஸ்ரீ சு. பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆலயத்தை நடத்திச் செல்ல நிதி வசூலிப்பது, உண்டியல் வியாபார நிலையங்களுக்கு கொடுத்து சேகரிப்பது, வெளியிடங்களில் சேகரிப்பது என்று கூடி ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டது. அதன்பின் மீண்டும் 1940.07.20 இல் தலைவர், மு. செல்லையா பிள்ளை, எஸ்.ரி. பீ. மாரிமுத்துப்பிள்ளை, அருணாசலம் பிள்ளை, முத்தையாபிள்ளை, சுப்பிரமணியபிள்ளை ஆகியோரால் புதிய நிர்வாக உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி செயலாளராக செ. இராசதுரை, பொருளாளராக ஆர். எம். அன்கோ அவர்களையும் பஞ்சாயத்தவர்களாக மு. செல்லையாபிள்ளை , அருணாசலப்பிள்ளை, கோபால் ஆச்சாரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

1941.05.26 திகதி சங்கம் மீண்டும் இலக்கம் 141 இல் அமைந்த கட்டிடத் தொகுதியில் தலைவர் மு. செல்லையாபிள்ளை தலைமையில் கூடியது. அதன்போது ஆலயத் திருவிழா 10 நாட்கள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் ஸ்ரீமான் பொன்னம்பலத்தார் இல்லத்தில் சென்று முதல் பூஜை ஏற்றபின்தான் வீதிஉலா வருவது வழக்கம். ஆனால் ஸ்ரீமான் பொன்னம்பலத்தார் இல்லத்தில் லஷ்மிகரமான பூஜை இல்லையென்று தெரிந்துகொண்டபின், மீண்டும் கூட்டம்கூடி ஆராய்ந்து பக்தர்கள் சுவாமி வீதியுலா வரும்போது லஷ்மி விளக்கு வைத்து வரவேற்க வேண்டும் என்றும் இனி சுவாமி வெளிவீதி உலாவரும்போது முதல்பூஜை தேங்காய் உடைப்பு விநாயகர் ஆலயத்தில்தான் நடைபெற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு ஸ்ரீமான் பொன்னம்பலத்தார் புதல்வன் அரியரத்தினத்திடம் விளக்கி ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. 1940.06.01 முதல் நிறுத்தில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலய சுவாமி வெளிவீதி உலாவரும்போது கண்கண்ட விநாயகர் ஆலயத்தில் முதல் தேங்காய் உடைத்து பூஜை பெற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு அன்றுமுதல் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 1941.05.10 இல் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஸ்ரீ கதிரேசன் ஆலயம் தேர் முதன் முதலில் அருள்மிகு ஸ்ரீ கண்கண்ட விநாயகர் ஆலயத்தில் முதல் பூஜையும் தேங்காய் உடைத்தலும் நடைபெற்றது. இதனை வத்துகாமம் வாழும் இந்துக்கள் அனைவரும் வரவேற்றனர். பின் 1940.05.30 திகதி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினரும், கதிரேசன் ஆலய நிர்வாகத்தினரும் மு. மா முதலியார் இல்லத்தில் வைத்து நிர்வாகம் சம்பந்தமாகப் பேசி பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்களிடம் பேசி சமரச முடிவுக்கு வந்தனர்.

1944.07.08 சைவாபிமானிகள் சங்கம் தனது நிர்வாகத்தினை சட்டமாக்கப்பட்டு பரிபாலனர்களாக, எஸ். இராஜதுரை, ஓ. ஏ. இரங்கநாதன்பிள்ளை, சோமசுந்தரம், காலஸ்சேர்மன், எம். செல்லையா, க. கோபால் ஆச்சாரி, க. கந்தசாமி ஆச்சாரி, என். ரி. நெல்லையப்பன் ஆச்சாரி, எம்டன் முத்தையாபிள்ளை, அருணாசலபிள்ளை ஆகியோரின் முயற்சியால் 1948 ஆம் ஆண்டு ஸ்ரீ கதிரேசன், ஆலய முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்துடன் இணைந்து பொது தேவஸ்தானமாக்கி சைவாபிமானிகள் சங்கத்தினரால் நிர்வாகத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

ஸ்ரீ கதிரேசன் ஆலயம் அமைக்கப்பெற்று சுமார் 30 வருடங்களாக நவக்கிரக பரிவார மூர்த்தி இல்லை. அதன்பின் சைவ அபிமானிகள் சங்க நிர்வாகம் கலந்தாலோசித்து 1950ஆம் ஆண்டளவில் திரு. நடேசன் தலைமையின் கீழ் திரு. அருணாசலம்பிள்ளை அவர்களால் 1952ஆம் ஆண்டளவில் நவக்கிரக பரிவாரமூர்த்தி கோயில் அமைக்கப்பெற்றது. அதன்பின் அதற்குச் சரியான கும்பாபிஷேகம் செய்யப்படவில்லையென்ற காரணத்தினால் 1980, 1981 காலப் பகுதியில் பழ. முத்தையாபிள்ளை தலைமையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

25.03.2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.44 மணிமுதல் 11.14 மணி வரையிலான சுபவேளையில் கணபதி வழிபாடு புண்ணிய வாசனம் நடைபெற்று பின் சகல பரிவாரமூர்த்திகளுக்கும் மூலஸ்தான கருவறை என்பவற்றுக்கான அடிகல் நாட்டு விழா சிவஸ்ரீ தற்புருஷ வை. கமலநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. *ஆலய நிர்மாணப் பணிகள், விஸ்வபிரம்ம கேந்திர ஸ்தபதியார் பிரம்மஸ்ரீ உ. கருப்பையா ஆச்சாரியார் (தமிழ்நாடு, இந்தியா.) பாஸ்கரக் குருக்கள்.*

வத்துகாமம் சைவ அபிமானிகள் சங்கத் தலைவர் G. சிவராஜ் J.P. அவர்களின் தலைமையின் கீழ் 2004 மார்கழ் மாதம் பாலஸ்தாபனம் சிவஸ்ரீ ஜோதி பத்மநாதக் குருக்கள், பாஸ்கரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் P.R. நாகரட்ணம், எஸ். வீரசாமி, பொருளாளர் வீ. வீரசிங்கம், பஞ்சாயத்தார் க. கார்மேகம் பஞ்சாயத்தார், வீ. இராசரத்தினம் பஞ்சாயத்தார், டாக்டர் K. கனகரட்ணம் இவர்களுடன் விழாவின் சிறப்பு அதிதிகளாக ஏ. எஸ். இராதகிருஷ்ணன், மாத்தளை மாவட்ட இந்து சமய ஆசிரியர் ஆலோசகர், திருமதி கோகிலேஸ்வரி ராம்குமார், அதிபர் க/ பா. த. ம. வித்தியாலயம், டாக்டர் சு. ப. துளசிராஜா, எம். இராமலிங்கம், திருமதி சி. சண்முகநாதன், சி. சந்திரபோஸ், எம். வைத்தியலிங்கம்பிள்ளை, எஸ். இரவீந்திரன் J.P. எஸ். சற்குணராஜா J.P. (சைவமுன்னேற்றச் சங்கத் தலைவர்) எஸ். இராஜேந்திரன், எஸ் ஆர். ஆர். எம். தங்கவேற்பிள்ளை, வீ. பெரியசாமிப்பிள்ளை, எஸ். சண்முகம்பிள்ளை, தினக்குரல் எஸ்.ராமதாஸ் J.P. சைவமுன்னேற்றச் சங்க பிரச்சார உத்தியோகத்தவர் திருமதி K. N. நடேசன், ஆர். ஆறுமுகம், என் மகாதேவன் (தலைவர், சைவ சிப்பந்திகள்) ஏ. எம். கந்தசாமிப்பிள்ளை, எஸ் சிவசுப்பிரமணியம் உட்பட பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

**ஸ்ரீ கதிரேசன் ஆலய வேலைத்திட்ட அமைப்பும் அதன் உபயகாரர்களும் :**

மூலஸ்தானம் 21 அடி விமான அமைப்பு : *வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ கதிரேசப் பெருமான் மூர்த்தி உபயம்.* திரு. திருமதி ச. நல்லைநாதன் குடும்பம் *மாத்தளை (லண்டன்),*பொதுமக்கள் ஆதரவுடன் *சைவ அபிமானிகள் சங்கம்.* இராஜகோபுரம் : *பொதுமக்கள் ஆதரவுடன் சைவ அபிமானிகள் சங்கம்.* பிள்ளையார் பரிவாரமூர்த்தி ஆலயம்: *எஸ். வீரசாமி, சைவ அபிமானிகள் சங்கம்.* அம்மன் பரிவார மூர்த்தி ஆலயம் : *சிவராஜா J.P. குடும்பம், சைவ அபிமானிகள் சங்கம்.*துர்க்கை பரிவாரமூர்த்தி ஆலயம்: *எஸ். இராஜேந்திரன், எஸ். ஆர். ஆர். கண்டி, சைவ அபிமானிகள் சங்கம்.* வைரவர் பரிவாரமூர்த்தி ஆலயம், *டாக்டர் ஏ. வீ. சுப்பிரமணியம் J.P. , சைவ அபிமானிகள் சங்கம்.,* நாகதம்பிரான் பரிவாரமூர்த்தி ஆலயம், *எஸ். ஜெயதிஸ்ஸ குடும்பம் U. S. A., சைவ அபிமானிகள் சங்கம்.,* ஆஞ்சநேயர் பரிவாரமூர்த்தி ஆலயம், *C. சண்முகநாதன் குடும்பம், எஸ். வெசா U. S. A., சைவ அபிமானிகள் சங்கம்.* சண்டேஸ்வரர் பரிவாரமூர்த்தி ஆலயம், *பாக்கியலஷ்மி சண்முகநாதன், சைவ அபிமானிகள் சங்கம்.* மணிகோபுரம், *திரு. இராமநாதன் தர்மராஜா குடும்பம் (லண்டன்), சைவ அபிமானிகள் சங்கம்.,* நவக்கிரக பரிவாரமூர்த்தி : *பொதுமக்கள் ஆதரவுடன் சைவ அபிமானிகள் சங்கம்,* மதுரை மீனட்சி அம்மன் *S. சண்முகம்பிள்ளை குடும்பம், G. சிவராஜ் J.P.* இவர்களின் பங்களிப்பில் ஆலயம் நிறைவுபெற்று 06.06.2008ஆம் ஆணடு வத்துகாமம் ஸ்ரீ கதிரேசன் ஆலயம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயமாக பெயர் மாற்றப்பட்டு மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் ஆரம்பமானது.

வைகாசி விசாகத்தினத்தில் வரும் பௌர்ணமி தினமாகும். இதைக் கருத்தில் கொண்டுதான் வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானம், அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் ஆகியவற்றின் திருவிழாக்கள் திருமுருகன் திரு அவதாரம் செய்த வைகாசி விசாகம் என்ற நன் நாளில் வத்துகாமம் வாழும் இந்துக்கள் தெய்வ வழிபாட்டில் தம்மை பூரணமாக அர்ப்பணித்து அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள், ஸ்ரீ விநாயப்பெருமான், வள்ளிதெய்வானை சமேத ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமான், ஸ்ரீ உமாமகேசுவரர், ஸ்ரீ சண்டேஸ்வரி ஆகிய உற்சவ மூர்த்திகளை பஞ்சரதோற்சவத் திருவிழா எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. வத்துகாம மக்கள் இந்த தெய்வ வழிபாட்டில் கலந்து கொண்டு விரதமிருந்து வழிபட்டு முத்தி பெறுகின்றனர். எமது ஊரிலும் பஞ்சரதோற்சவ பவனி நடைபெற்று தீர்த்தத் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

முருகப் பெருமான் அவதரித்தது வைகாசி விசாகத் திருநாளிலாகும். முருகப் பெருமானின் அவதாரமே அதர்ம இருளை அகற்றி தர்ம ஒளியைப் பிரகாசிக்கச் செய்வதற்கென்று புராணங்கள் வாயிலாக அறிகிறோம்.

'கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகமுய்ய'

என்று கூறப்படுவதைக் கந்த புராணத்திலே காண்கின்றோம்.

அன்றைய மனிதன் இயற்கையோடமைந்த வாழ்வு வாழ்ந்தான், இயற்கையை வழிபட்டான், இன்புற்றான், நிறைவாழ்வு வாழ்ந்தான். இன்றைய நிலைமை அன்று போலில்லை. அமைதியற்ற, ஏக்கமுடைய வாழ்வு வாழ்பவர் பலர். புறத்தே ஒளியிருந்தாலும் அகத்தில் ஒளியில்லை. பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொற் பிரயோகம் எனும் அசுரர்களே அமைதிக்குக் கொடுமை செய்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வசுரர்களை அழித்தாலன்றி அமைதியை ஆனந்தத்தை அடைய முடியாது. இறை வழிபாட்டின் மூலம் இதை நிறைவேற்ற முடியும் என்பது நம்பிக்கை. கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாகிய முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் முருகனருள் பெற்று நற்பேறடையலாம். அதற்கு வைகாசி விசாக விரதமனுட்டித்து முருகப் பெருமானை வழிபட்டு தான தர்மங்கள் செய்தல் சிறந்த வழியாகும்.

வைகாசிப் புராண பௌத்த மக்களுக்கும் வழிபாட்டிற்குரிய ஒரு முக்கிய தினமாகும். வீடுகளில் வீதிகளில் ஒளி விளக்குகள் ஏற்றப்பட்டிருக்கும். ஆங்காங்கே வானுயர்ந்த அலங்காரப் பந்தல்கள் மின் விளக்குகளால் ஒளியூட்டப்பட்டு அழகாகக் காணப்படும். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியென்றும் ஓசை ஒளியெல்லாம் ஆனாய் நீயே என்றும் இறைவனை ஒளிவடிவில் கண்டனர் எமது நாயன்மார்கள். புற இருளை விளக்கொளி மூலம் நீக்குதல் போல அகஇருளை ஞான ஒளி மூலம் நீக்க முடியும். அதற்கு ஜோதி வடிவான இறைவன் திருவருள் வேண்டும்.

இவ்வுலக சிற்றின்பங்களில் நீந்துபவர்கள் மெய்ப் பொருளாகிய பேரின்பத்தை அடைய முடியாது. தோன்றி மறையும் பொருட்களில் நில்லாது மெய்ப் பொருளை அடைய மனதைப் பழக்கி அதன் வழி பேரின்பத்தைத் தேடிக் கொள்வதே சிறந்தது.

அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்ட மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தில் **முதலாம் நாள்** 04.06.2008) புதன்கிழமை காலை 9.15 மணிக்கு விநாயக வழிபாடு, புண்ணியாகம், முகூர்த்த விஞ்ஞாபனம், அனுக்ஞை, மஹா கணபதி ஹோமம், திவ்ய சுத்தி, திவ்ய விபாகம், மங்கள கொடியேற்றம், ரஷோக்ன ஹோமம், திசா ஹோமம், சம்ஹிதா ஹோமம், சங்கம தீர்த்த - சங்கிரகணம், குண்டமண்டல வேதிகாஸ்தாபனம். ஆதித்ய ஆக்னி சங்கிரகணம், நூதன மூர்த்திகள் ஜலதான்யாதி வாசம், சயனாரோகணம், நயனோன் மீலனம்மும், பிற்பகல் 4.00 மணிக்கு முதல் புண்ணியாகம், ஆசார்ய விஷேட சந்தி - பூத சுத்தி கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரஷா பந்தனம், கடஸ்தாபனம், பாலாயப் பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, ஷண ஹோமம், மஹா யாகசாலா பிரவேசம், கும்பஸ்தாபனம், யாகபூஜை, அக்கிகார்யம், பஞ்சாக்னி விபஜனம், ஹோமம், தீபாராதனை, பிரதஷண நமஸ்காரம், வேத-ஸ்தோத்திர, பாராயணம் ஆசீர்வசனம், ஸ்தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம் அஷடபந்தனம் அருளாசியுரையுடன் முடிவுற்றது.

**இரண்டாம் நாள்** (05.06.2008) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்குப் புண்ணியாகம், விஷேச சந்தி, பூதசுத்தி, மங்களத்வஜபூஜை, யாக பூஜை, ஹோமம், தீபாராதனை, திருமறை, திருமுறை பாராயணம் நடைபெற்று காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாற்றியும், மாலை 5.00 மணிமுதல் புண்ணியாகம், பிம்பசுத்தி, பிம்பரஷாபந்தனம், ஷடத்வன் நியாசம், யாகபூஜை, ஹோமம், விஷேடத் திரவ்ய ஹோமம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை, வேத - ஸ்தோத்திர திருமுறை பாராயணம் ஆசீர்வசனம், ஆசார்ய வஸ்த்திரதானம், விபூதிப் பிரசாதம் வழங்கி அன்றைய நாள் முடிவுற்றது.

பின் **மூன்றாம் நாள்** (06.06.2008) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிமுதல் புண்ணியாகம் மங்களத்வஜ பூஜ, யாபூஜை, காயத்ரி ஹோமம், உபசாரஹோமம், அலங்கார தீபாராதனை, வேத - ஸ்தோத்திர, நிருத் கீத திருமுறைபாராயணம். ஆசீர்வசனம், அந்தர்பலி, பஹிர்பலி,முகூர்த்த தானம், ராகநாதாஞ்சலி, வேதமந்திர நிர்தத கீத சங்கநாத மங்கள பேரின வாத்யங்களுடன் கும்பம் வீதிப்பிரதஷணம், புஞ்பாஞ்சலியும் காலை 9.00 மணிக்கு ஸ்தூலலிங்க கோபுர ஸ்தூபிகள் அபிஷேகம், மூலாலய கலாகர்ஷணமும், **காலை 10.00 மணிக்கு மஹா கும்பாபிஷேகம்** மஹாஹவிர்வேதனம், தேவாதிபூஜை, தசமங்கள் தர்சனம், எஜமான், அபிஷேகம், ஆச்சார்ய சம்பாவனை, ஆசியுரை, விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டு அதன்பின் 12.15 மணிக்கு **கும்பாபிஷேகச் சிறப்பு மலர்** [redacted]ள் [redacted] கலாநிதி வ. மகேஸ்வரன் முதுநிலை விரிவுரையாளர், *(பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.)* தலைமையில் அருள்ஜோதி ஸ்ரீ ஐய்ப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P. அவர்களின் ஆசியோடு சைமுன்னேற்றச் சங்கத் [redacted]. [redacted]., பொதுச் செயலாளர் A.S. ராதாகிருஷ்ணன், பிரச்சாரப் பொறுப்பாளர் எஸ். ராமதாஸ் J.P. சைவஅபிமானிகள் சங்கத் தலைவர் G. சிவராஜ் J.P. ஆகியவர்களின் தலைமையின் கீழ் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்று 1.30 மணியளவில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் மகேஸ்வர பூஜை நடைபெற்று கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது.

கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தை நடாத்தி வைத்த பிரதிஸ்டா குருமணிகள் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, சபரிமலைக் குருமணி, சிவாகம கலாநிதி அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் தலைமையில், பிரதிஷ்டா பிரதம குருவாக பிரதிஷ்டா கிரியாரெத்தினம் சிவாகம கிரியா பூஷணம் கலாநிதி சிவபிரம்மஸ்ரீ. சிவ. நித்தியானந்த சிவாச்சாரியாரும் (சர்வதேச இந்து மத குருபீட யாழ். மாவட்டத் தலைவர், சங்கானை. சர்வசாதகாச்சார்யார் 'ஸாஹித்ய சங்கிரகர்' சாதக கலாபூஷணம் சிவஸ்ரீ சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சார்யாரும், ஸ்ரீதேவி குருகுல சபரி பீடம் - கொழும்பு, அத்துடன் ஆலயப் பிரதமகுரு : ஸ்ரீலஸ்ரீ பா. ஏகநாதக்குருக்கள் ஆகியோரின் வரவால் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது. சைவ அபிமானிகள் சங்கத் தலைவர் திரு. G. சிவராஜ் J.P , கௌரவச் செயலாளர் திரு. P. சு. நாகரெட்ணம், கௌரவப் பொருளாளர் திரு. S. வீரசாமி ஆகியோருடன் பஞ்சாயத்தார்கள் திரு. V. வீரசிங்கம் J.P., திரு. ஏ. ராஜரட்ணம், திரு. த. சற்குணராஜா J.P. ஆகியோர் இணைந்து கும்பாபிஷேகப் பெருவிழாவை சிறப்புறச் செய்தனர்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!*

❑ ❑ ❑

*With Compliments From :*

**A.V.S. ASTROLOGY**

**சோதிட ஆராய்ச்சி நிலையம்**

**ஜேஸ்ட ஜோதிஷ்**

**AYUR. DR. S. THULASIRAJAH**

*No. 54/1, Matalerd*
*Wattegama.*

*No.1, Daisy villa Avenue,*
*Colombo - 04.*

*T.P : 0777 - 728944 / 060 - 2815978*

# வத்துகாமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான் மீது பாடப்பெற்ற திருவூஞ்சல் பாமாலை

## காப்பு

கார்பெருகு கண்டிநகர்க் கணித்தா யாங்கு
கழனிபல செறிவத்து காமம் வாழும்
சீர்பெருகு சிவனடியார் இயற்றுமார்வஞ்
சிறந்ததிருக் கோயிறனி லினிதுமேவிப்
பேர்பெருகு மறைமுதல்வ னமலனாகப்
பேசுசுப்பிர மண்யர்மீ தூஞ்சல் பாட
நீர்பெருகு சடாமுடியோன் புதல்வனான
நிமலவிநா யகனடிகள் காப்பதாமே.

## நூல்

1. இசையுறுநல் நால்வேதங் கால்களாக
இன்பமுறு முபநிடதம் விட்டமாக
நசைபெறுமா கமபுராணங் கயிறதாக
நலங்கிளரும் பிரணவமே பீடமாக
வசையறுநன் மந்திரங்கள் அணியதாக
வடிவமைந்த ஊஞ்சல்மீ தினிதுமேவி
மிசைவருசீர் வத்துகாமத் தமர்ந்து வெற்றி
மிகுசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

2. சின்மயமா யிலகிடுநற் கிரீடந் தோன்றச்
சிறப்பினொடு முப்புரிநூல் மார்பிற் றூங்கப்
பொன் மயமாம் வேற்படையும் பொலிந்து மின்னப்
போற்றுசடக் கரமென்னும் நாமமோங்கக்
கன்னியராங் குறமகளும் யானைமாதுங்
காதலுடன் இருமருங்குக் களித்துச் சேர
மன்னியசீர் வத்துகாமத் துகந்த அன்பு
மல்குசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

3. இந்திரனு மோராறு நாமமோதி
இமையவரோ டருகுநின்று பணிந்துபோற்ற
சந்திரனும் வெண்டரளக் கவிகைதாங்கத்
தகுதிபெறு சாமரங்கள் தனதன்வீசச்
சுந்தரஞ்சேர் தும்புருநாரதர்கள் பாடத்
துதியினொடு மலர்மாதர் வடந்தொட்டாட்டச்
செந்திருவாழ் வத்துகம மதனில் மேவுஞ்
சிவசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

4. துய்யமறை முதற்பொருளோ தாதிநாத
தோகைமயி லேறிவருஞ் சோதிநாத
வையகமுன் படைத்தருளும் எங்கள் நாத
மலரயனைச் சிறையிலிடு மாசிநாத
வெய்யவனாஞ் சூரனைமுன் காய்ந்த நாத
வெற்றிவடி வேலேந்து சாமிநாத
செய்யதிரு வத்துகமஞ் சிறந்து வாழும்
சிவசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

5. துன்னுதிரு மதிவதன மாறுமாடச்
சோதிநவ ரத்னமுடி ஆறுமாட
மன்னுதிறற் கரங்களுடன் படைகளாட
வளர்நீப மலர்மாலை மார்பத்தாட
வுன்னுமிரு சத்தியரு மயிலுமாட
வோங்குமறைச் சிலம்பணியும் பதங்களாட
மின்னுதிரு வத்துகம முவக்கவன்பு
மிகுசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

6. கூடுமுயர் தத்துவா துதிதவாறு
குணமவைகட் கறுமுகங்கள் கொண்டநாத
பீடுபெறு மன்பரெனும் பயிர்வாடாது
பெருங்கருணை மழைபொழியும் முகிலேயென்று
நாடடியர் முனமோடு மயிலிலேறு
நாரணன்ற னொருமருக ஞானமூர்த்தி
தேடருஞ்சீர் வத்துகம மதனில் வாழுந்
தேவசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

7. ஓங்குமொரு சத்திதர கந்தபால
உமைகுமர அறுமுகவ பகவ சேந்த
தாங்குமயிற் சுரதலத்த விமலசெய்ய
சரவணோற் பவ இறைவ சாமிநாத
பூங்கடம்ப மலர்மார்ப மயிலிலேறும்
பூரணா னந்தகுக புனிதநீத
தேங்குதிரு வத்துகமத் தினிதுமேவுந்
திவ்யசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

8. அரியதிரு றைப்பொருளே யாடீரூஞ்சல்
அமரர்சிறை மீட்டவரே யாடீரூஞ்சல்
குருதிவடி வேலவரே யாடீரூஞ்சல்
கும்பமுனி தொழுகுருவே யாடீரூஞ்சல்
இருமயில்பங் குடையவரே யாடீரூஞ்சல்
ஏறுமொரு மயிலினரே யாடீரூஞ்சல்
தெரிவுறுசீர் வத்துகமத் தினிது மேவுந்
திவ்யசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

9. தானவரைக் காதினரே யாடீரூஞ்சல்
தங்குழைக் காதினரே யாடீரூஞ்சல்
ஞானவுரை விரித்தரே யாடீரூஞ்சல்
நண்ணலரை யிரித்தவரே யாடீரூஞ்சல்
ஆனதிரு மயிலினரே யாடீரூஞ்சல்
அருள்பொழியு மயிலினரே யாடீரூஞ்சல்
தானமுறு வத்துகந் தழைக்க வென்றுந்
தங்குசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.

10. அந்தணரு மானினமும் அரசும்வாழி
அருமறையோ டாகமங்கள் அறங்கள் வாழி
முந்துமழை முகில் கற்பின் மாதர் வாழி
முதன்மையுறு சைவநெறி நீறும் வாழி
சந்ததமுங் கண்டிநகர் நாட்டார் வாழி
சத்தியரோ டுயர்மயிலு மயிலும் வாழி
செந்திருவாழ் வத்துகமஞ் சிறக்கவாழுஞ்
சிவசுப்ர மண்யரே யாடீரூஞ்சல்.


*With Compliments From :*

# M. தியாகராஜா தேசிகர் பூக்கடை

★ முத்துமணவறை
★ பூ மணவறை
★ வர்ண மணவறை
★ முகூர்த்த மாலை
★ மாலை வகைகள்
★ மின்சார யந்திரம்
★ மின்சார உபகரணம்
★ ஒலி பெருக்கி மற்றும் அலங்காரப் பொருட்கள்

★ சுவாமி சாத்துப்படி
★ அம்பாள் சாத்துப்படி
★ பிள்ளையார் சாத்துப்படி
★ முருகன் சாத்துப்படி
★ அனைத்து பூசாத்துப்படி வகை
★ ஜாதகம் கணித்தல்
★ பொருத்தம் பார்த்தல்

இல. 80, புதிய ஆஸ்பத்திரி வீதி, கலஹா.
தொலைபேசி : 060-2819449 / Mobile : 077-5980897

*With Compliments From :*

கலியுக வரதனாக விளங்குபவர் கந்தன். வாழ்வில்
துன்பங்களும் அதைியின்மையும் தோன்றும்போது
தோன்றாத் துணையாக நிற்பவன் காக்கும் தெய்வமாகிய
கருணைக் கடலான முருகப் பெருமான்.



முருகனி அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிட்டப் பிரார்த்திக்கும்!
இறைபக்தர்

# M. இராமலிங்கம்

வத்துகாமம்

உ
சிவமயம்

# வத்துகாமம்
# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான
# திருத்தல வரலாறு

ஆக்கம் : **மகேஸ்வரி ராமதாஸ்**
வத்தேகம.

*வித்தகமுற்றி விளங்குவர்*
*வேதங்களோடு நெறி*
*முத்தியு மெய்தி முதிர்குவர்*
*மோகன ரூபியளாய்*
*வத்துகாமத்தி லெழுந்தருள்*
*மாமுத்து மாரியம்பாள்*
*சக்தியில் மேலவாள்*
*பக்தியாழ்திடு மானிடரே.*

**ஆ**லயம் தொழுவது சாலவும் நன்று என்ற பழமொழிக்கமைய முன்னோர் வழிநின்று இன்னும் நம் இந்து மதத்தினர் தாம் வாழும் ஊரெல்லாம் கோயில் கட்டி வாழ்வாங்கு வாழ்ந்த பெருமைக்குரியவர்கள் நம்மவர்கள் என்றால் மிகையாகாது. ஊரெல்லாம் கோயில் எழுப்பி எமது ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டிச் சிறக்க வாழ்ந்த எம்முன்னோர்கள் எமக்கென விட்டுச் சென்ற பழம்பெரும் திருத்தலங்களை அருமையாய் பாதுகாப்பது எம் தலையாய கடமை அன்றோ, அந்த வழியில் இன்று குன்றா அருள்மழை பொழியும் அம்பாள் திருத்தலமாக மத்திய மாகாணத்தில் வத்துகாமம் நகரில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானம் விளங்குகின்றது. இத்தேவஸ்தானம் யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வத்துகாமத்தில் உயர் பதவி வகித்தவருமான வியாழரென எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட ஸ்ரீ கனகசபை வைத்தியலிங்கம் அவர்களால் தமது காலம்சென்ற புதல்வி மூத்தம்மாள் எனும் முத்தாச்சியின் நினைவாகவும் அம்பாளின் தரிசனவருள் பெறவும் கட்டப்பட்டது. கட்டுகலை பிள்ளையார் தேவஸ்தானம் நிறைவுற்றபோது அங்கிருந்த சிற்பாசிரியர்களை அழைப்பித்து திரு. ஆச்சாரி, திரு. கடலைமுத்து ஆச்சாரி, திரு. கதிர்வேல் ஆச்சாரி முதலிய விஸ்வகர்தாக்களைக் கொண்டு எழுந்தருளி விக்கிரகங்களையும் செய்து பிரதிஷ்டை உபயங்களையும் செய்ததுடன் பல நன்கொடைகளையும் செய்து ஊக்குவித்தனர். பிரேல்லேண்ட் அமுணுகம தோட்டம் என்ற காணியை தேவஸ்தானத்துக்கு திருவாளர் வட்ஹலேவே வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இத் தேவஸ்தானத்தில் திருப்பணி வேலைகள் முடிவுற்று தமிழ் பிலவருஷம் வைகாசித் திங்கள் பதினெட்டாம் நாள் 31.05.1901 இல் விசாக நட்சத்திரத்தன்று மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மகா கும்பாபிஷேகம் செய்த வைகாசி விசாக நாள் வரும் ஒவ்வொரு வருடமும் வைகாசி விசாகத்தன்று வருடா வருடம் தேர்த்திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன்பின் திரு. கு. நாகலிங்கம் என்பவரால் 1903 இல் மணிதூபம் கட்டப்பட்டு சங்காபிஷேகம் உபயம் வைகாசி விசாகத்தன்று சிறப்பாகக்

கொண்டாடப்பட்டது. வாவின்னை முனியாண்டித் தேவர், வத்துகாமம் ஸ்ரீ சின்னையா செட்டியார் கதிர்வேற்பிள்ளை வேலுப்பிள்ளை, டி.எல்.டி.எஸ். குணசேகர ராலஹாமி ஆகியோரினால் வருடா வருடம் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்று வந்தது. அதன்பின் 1910 இல் திருவாளர் வைத்தியலிங்கம் பிள்ளை தான் குடியிருந்த கொரத் தண்டஹேன எனும் காணியையும் பெத்திகஸ் தன்னை என்ற காணியையும் தேவஸ்தானத்துக்கு கொடுத்துதவி செல்லப்பா அன்பர் கண்ணப்பா எனும் தமது புதல்வர்களில் மூத்தவராகிய திரு. செல்லப்பாவை தர்மகர்த்தாவாக்கி தேவஸ்தான நிர்வாகத்தை கையளித்தார். 1923 இல் திருவாளர் வைத்தியலிங்கம்பிள்ளை சிவபாதம் அடைந்தார். 1936.05.19 ஆண்டுவரை திருவாளர் கனகசபை வைத்தியலிங்கம்பிள்ளை செல்லப்பா தமது புதல்வர்களாகிய கனகலிங்கம் அன்னலிங்கம் என்பவர்களை நிர்வாகித்து வந்தபோது பணமுடை ஏற்படவே கண்டி கட்டுக்கலை ஸ்ரீ பாலசுப்பிரணியம் குருக்கள் இக்கோயில் நிர்வாகத்துடன் வத்துகாமம் ஸ்ரீ கதிரேச சுவாமி தேவஸ்தானத்தையும் நிர்வாகம் செய்து வந்தார். அதன்பின் 1940.03.24 சங்கம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து சங்க நடவடிக்கைகளை 1944.07.08 முதல் சங்க நடவடிக்கைகள் சட்டமாக்கப்பட்டது. அதன்பின் சைவாபிமானிகள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பரிபாலனர்களாக எஸ். இராசதுரை, ஓ. ஏ. இரங்கநாதன்பிள்ளை, சோமசுந்தரம் வைஸ்சேர்மன், எம். செல்லையா, க. கோபால் ஆச்சாரி, க. கந்தசாமி ஆச்சாரி, என். ரி. நெல்லையப்பன் ஆச்சாரி, திரு. எம்டன் முத்தையாபிள்ளை அருணாசலப்பிள்ளை ஆகியோரின் முயற்சியில் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்துடன் ஸ்ரீ கதிரேசன் தேவஸ்தானத்தையும் 1948ம் ஆண்டு முதல் பொது தேவஸ்தானமாக்கி சைவாபிமானிகள் சங்கத்தினரால் நிர்வகித்து வருகிறது.

1958ஆம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தின்போது தன்னலங் கருதாது அயராது தெய்வ கைங்கரியத்தின் சேவையில் ஈடுபட்டு பல இன்னல்களுக்கிடையில் வைகாசி திருவிழாவை நடாத்தி முடித்த டாக்டர் ஏ. வி. சுப்பிரமணியம் அவர்களை அன்றே பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து ஒரு மாதம் சிறையில் வைக்கப் பட்டிருந்தார்.

அதன்பின் 1962.09.15இல் திரு. க. கோபாலன் ஆச்சாரியார் அவர்களினால் திருத்தியமைக்கப்பட்ட திருச்சட்டம் ஆக்கப்பட்டது.

சங்க காலத்திலேயே ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் ஸ்ரீ கதிரேசன் தேவஸ்தானம், ஸ்ரீ கண்கண்ட விநாயகர் தேவஸ்தானம் ஆகிய மூன்று தேவஸ்தானங்கள் சுவாமிகள் அலங்கார ரதங்களில் ஆரோகணித்து நகர்வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. அண்டினோருக்கு அருள்பாலிக்கும் அம்பாளை வழிபட்டோருக்கு வேண்டிய வரமளித்து இந்து பௌத்த பெருமக்கள் எவ்வித வேற்றுமையுமின்றி உபயங்களும் பொன்னும் பொருளும் அளித்து வருவதுடன் வழிபட்டு வருகின்றனர். இத்தேவஸ்தானத்துடன் இருவர்த்தக ஸ்தாபனங்களும் காணியும் சேர்க்கப்பட்டது. அதன்பின் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் சுமார் 100 வருடம் பழைமை வாய்ந்தமையால் இத்தேவஸ்தானத்தைப் புனரமைத்து திருப்பணி செய்ய ஆரம்பித்து 1982.01.30 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அதன்பின் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஆலய மூலஸ்தான அடிக்கல் பதிப்பு 1982.02.07 அன்று சிறப்பாக நடைபெற்றது. சுப்பிரமணியம்பிள்ளை தலைமையிலான சைவாபிமானிகள் சங்கத்தினரின் பெரு முயற்சியிலும் மற்றும் வெளியூர் பக்தப் பெருமக்களினதும் தனவான்களினதும் பொருள் உதவியிலும் இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு திருப்பணி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1984ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நாள்தோறும் வழிபடும் அடியார்கள் குறைதீர்க்கும் எல்லாம் வல்ல அம்பிகை கோயில் கொண்டெழுந்தருளி அனுக்கிரகம் செய்யும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஆவணி மாதம் 11ம் திகதி (27.08.1984) காலை 9 மணிக்கு விநாயகர் வழிபாடு, திரவிய பூஜை, கணபதிஹோமம் தொடர்ந்து பூர்வாங்க கிரியைகள் நடைபெற்று மாலை 4 மணிக்கு மிருத்சங்கிரஹம அங்குரார்ப்பணம் உட்பட கிரியைகள் நடைபெற்றது. ஆவணி மாதம் 12ம் திகதி (28.08.1984) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு பக்தர்கள் எண்ணைக் காப்பு விசேட

சாந்தியாக பூஜை, மாலை 6.00 மணிக்கு புக்சுத்தியாக பூஜை, பிம்பசுத்தி பிரதிசார தத்துவந்நியாசம் உட்பட தீபாரதனை நடைபெற்றது.

மகா கும்பாபிஷேகம் முன்னேஸ்வரம் சர்வபோதகர் பிரம்மஸ்ரீ கி. வைத்தீஸ்வரர் குருக்கள், சர்வசாதகர் வேதாகம ஞானபாஸ்கரன், பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள், ஸ்ரீ தர்மசாஸ்த்தா குருகுல அதி பிரதிஷ்ட பிரதமகுரு சிவாச்சார்யமணி, பிரம்மஸ்ரீ த. சரவணபவானந்தக் குருக்கள், ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை. ஸ்ரீ பிரம்மஸ்ரீ சோ. செல்லையா குருக்கள், கம்பளை. பிரம்மஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்கள், மாரியம்மன் தேவஸ்தானம், அரியாலை, பிரம்மஸ்ரீ ம. பிரகாஷ் சர்மா, வத்துகாமம் ஆகியோர்களால் ஆவணி மாதம் 13ம் நாள் 29.08.1984 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு யாகபூஜை பூர்வபச்சி மசந்தானம், மகா பூர்ணாகுதி, தீபாராதனை வேத பாராயணம், ஸ்தோத்திர பாராயணம், ஆசீர்வாதம், திராவிட பாராயணம், யாத்திரா தானாதிகள் நடைபெற்று அதன்பின் அந்த ராவித்திரமூல மூதிருத்தியைத் திதியும் சித்தயோகமும் கூடிய சுபநேரமாகிய 11 மணி 15 நிமிடத்தில் தூபிகள் அபிஷேகம் நடைபெற்றது. பின் 12.00 மணிவரையில் வரும் விருச்சிக லக்கின சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அன்று இரவு 7 மணிக்கு திருவீதி திருத்தல உலா நடைபெற்றது. அன்று தொடக்கம் 48 தினம்வரை மண்டலாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது.

ஆலய நிர்மாணம் சு. க. முத்துராமபிள்ளை தமிழ்நாடு வி. நாகலிங்கம் ஆச்சாரி தமிழ்நாடு சு. மகேஸ்வரன் குழுவினர், தம்பலகாமம் ஆகியோரால் மிகவும் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு மணிக்கோபுர வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மணிக்கோபுர கும்பாபிஷேகம் 17.05.1999 பிரமாதி வருடம் வைகாசி மாதம் 3ஆம் நாள் நடைபெற்றது. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய மணிக்கோபுரம் நகரத்திற் விழிப்புணர்வைத் தருகின்றது. அழகிய சிற்பவேலைப்பாடுகள் செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுரம் எழிலார்ந்த வண்ணம் வனப்புத்தர பூசை நேரங்களை நினைவுபடுத்தி எல்லோருக்கும் இறை சிந்தனையையும் ஏற்படுத்தி வருகின்றது என்றால் மிகையாகாது. அதன்பின்னர் 22.10.1999 ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அதன்பின் புதிய நிர்வாகக் குழுவினர் நூறு வருடங்களாக கோபுரம் இன்றி இருந்த ஆலயத்திற்குக் கோபுரம் அமைத்தனர். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது ஆலய வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்கள் முதலில் இராஜகோபுரத்தை மூல விக்கிரகத்தின் பிம்பமெனக் கருத்திற் கொண்டு அதனை வழிபட்ட பின்பே உட்பிரவேசிக்க வேண்டும் என்பது சிவாகம விதி ஆகம விதிப்படி அமைந்து மனிதனுடைய சரீரம் போல ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதன் இராஜகோபுரம் பாதங்களாகவும், கற்பக்கிரகம் சிரசாகவும் அம்பாள் சந்த கண்டமாகவும், முருகன் சந்நிதி, சுந்தரி சந்நிதி இருதயஸ்தானமாகவும் பலிபீடம் வயிறாகவும், ஸ்தம்பம் நாபியாகவும், ஸ்தம்ப விநாயகர் மூலாதாரமாகவும் அமையும்படி ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

யோகசாஸ்த்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் மனித உடலிலுள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம் ஸ்தம்ப கணபதியாகவும் சுலாதிட்டானம் ஸ்தம்பமாகவும், மணிபூரகம் நந்தியாகவும், அனாகதம் விநாயக சந்தியாகவும் விசுத்தி முருகன் சந்நிதியாகவும் ஆக்ஞை கருப்பக்கிரகமாகவும் கருவறை விமானம் சகஸ்ராரமாகவும் ஆலயம் அமைக்கப் பட்டிருக்கின்றது. இத்தகைய ஆலயத்தினுள் இறைவனை வழிபட்டு இரண்டறக் கலத்தலாகிய யோக சாதனைக்காக உட்பிரவேசிக்கின்றோமென்ற நினைப்போடு அமைதியில் செல்ல வேண்டும்.

இத் தேவஸ்தானத்தின் இராஜகோபுரம் 24 அடி உயர்ந்தும் மூலஸ்தான விமான கோபுரம் 36 அடி உயரத்திலும் அமைக்கப்பட்டிருக்கிறது. எழிலார்ந்தி வர்ணங்கள் தீட்டப்பட்டு புராணக் கதைகள் சிததரிக்கப்படுவதாக அமையப் பெற்றுள்ளது.

முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்திற்கு முன்கோபுரம் திரு. வைத்தியலிங்கம்பிள்ளை ஸ்ரீ ராம ஜெயம் ஸ்டோர்ஸ் வத்துகாமம் பொதுமக்கள் ஆதரவுடன் சைவ அபிமானிகள் சங்கமும் சிவன் ஆலயத்தை செ. மகாலிங்கம் குடும்பமும் சிவன் பரிவார மூர்த்தியை எம். ராமலிங்கம் சண்டேஸ்வரி பரிவாரமூர்த்தி ஸ்ரீராம் அவர்களும் வசந்தி மண்டபத்தினை, N. புஸ்பராஜ் குடும்பத்தினரும், சைவ அபிமானிகள் சங்கம் இணைந்தும் கொடிஸ்தம்பம் தங்கவேல் குடும்பம் ஞானஸ்வரி ஸ்டோர்ஸ், ஐயப்பன் கோயில், ஏ. ஆர், ஆர். ரவிந்திரன் J.P. குடும்பம் பரிவார மூர்த்தி சைவ அபிமானிகள் சங்கமும் மற்ற அனைத்து வேலைகளையும் பொது மக்களினதும் சைவ அபிமானிகள் சங்கத்தினரும் இணைந்தே கட்டிமுடித்தனர்.

### விமானங்கள் :

விமானங்களைத் தூபிகள் என்றும் சொல்லலாம், தேவஸ்தானங்கள் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே சந்நிதிகள் அமைக்கப்படும் போது அவைகளுக்கு விமானங்களும் அமைக்கப்படுகின்றன. விமானங்கள் இல்லாத அந்தக் கோயில்களை மடாலயங்கள் என்று சொல்லப்படுகின்றது. எமது அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தில் அம்பாள் விநாயகர், முருகன், தாரிகா சண்டேஸ்வரி, லிங்கேஸ்வரன், வைரவர் ஆகியவற்றிற்கு விமானங்கள் அமைந்திருப்பதினைக் காணலாம்.

பலிபீடம், சிம்மம் தேவஸ்தானங்களில் பலிபீடத்தில் மூலமூர்த்தியைப் பார்த்தபடி அமர்ந்திருப்பவர்.

### சிம்மம்

ஆன்மாக்கள் பலிபீடத்தில் மும்மலங்களையும் பலிகொடுத்து மல நீக்கம் பெற்ற பின் சிவத்தை நோக்கியிருக்கும் என்பதினை சிம்மம் விளக்குகிறது. ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தில் சிம்மம் வாகனமாகி வீற்றிருக்கிறது.

### கொடி ஸ்தம்பம்

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொடிக்கம்பம் 12 அடி அளவுகொண்டு தேக்குமரத்தில் செய்யப்பட்டது. 18.08.2000 வெள்ளிக்கிழமை ஸ்தாபிக்கப்பட்டது. மூல மூர்த்தியை ஆவாகனம் செய்யும் இடங்களிலொன்று மகோற்சவ காலத்தில் இதில் கொடியேற்றப்படும். சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களாகிய புறச் சர்வசாலை நோக்காது சர்வ சங்கரா காலத்தின் முடிவில் சிவபெருமான் தனது சக்தியைத் தனக்குள்ளே அடக்கிக்கொண்டு நிற்கும் சொரூபநிலையைக் குறிப்பது ஸ்தம்பம். மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியானது எழுந்து செல்லும் சுழுமுனாடி போல அமைந்தது ஸ்தம்பம் என்றும் கூறப்படுகிறது. இதனாலேயே ஸ்தம்பத்தினடியில் உள்ள கணபதியை மூலாதார கணபதி என்பார்கள். மூலாதாரத்தின் அதிஷ்டான தேவதை தேவஸ்தானத்தை ஸ்தம்ப கணபதி மகோற்சவ காலத்தில் கொடியேற்றியிருக்கும் போது கொடிமரம் பதியாகிய சிவபெருமானையும் கொடிக்கயிறு திருவருட் சக்தியையும் கொடிச்சீலை பசுவையும் தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாச பந்தம் நீக்கிச் சிவபெருமானை அடையுமிடத்துத் திருவருட் சக்தி வாயிலாகவே அடைதல் வேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது. இவ் ஆலயத்தில் இதனைக் காணமுடிகிறது.

### வசந்த மண்டபம்

புதிதாக வசந்த மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த மண்டபத்தில் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி மூர்த்திகள் அலங்கரிக்கப்பட்டு அமர்ந்திருப்பார்கள். வசந்த மண்டபத்தில் விநாயகர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், ஸ்ரீ முத்துமாரியம்பாள் திருவுருவங்களும் உற்சவ காலங்களில் நடேசர் பூஜைகள் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. அழகிய சிற்ப வேலையோடு கண்ணை கவரும் வர்ணங்களில் மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

### வைரவர்

தேவஸ்தானத்தில் காவல் தெய்வமென இவர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். அர்த்த சாமப் பூஜை முடிவுற்ற பின் திருக்கதவுகள்

அடைக்கப்பட்டு திறப்புகள் எல்லாவற்றையும் வைரவர் சந்நிதியில் ஒப்படைப்பது சம்பிரதாயமாக இருந்து வருகின்றது. இவ் ஆலயத்தில் ஸ்தம்ப மண்டபம் வசந்த மண்டபத்தின் அருகில் யாகசாலைக்கருகே வைரவருக்குத் தனி சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

### சண்டேஸ்வரர்

தேவஸ்தானங்களில் பூசைகள் யாவும் நிறைவேறியபின் இறுதியாக சண்டேசுவரருக்குப் பூசை நடைபெறும். சிவனுக்கு சமர்ப்பிக்கப்படும் நைவேத்தியம் முதலானவற்றை சண்டே சுவரருக்குப் படைத்து, பூசை நிறைவேற்றுவார்கள். ஆலய வழிபாட்டின் பலனை அருளுபவர் சண்டேசுவரர். அவர் மகாயோகி சதாசிவத் தியானத்திலிருப்பவர். ஆதலால் அவர் தியானத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வருவதற்காக வழிபடுவோர் மெதுவாக வரவைத் தெரிந்தோ கைதட்டியோ விழிப்படையச் செய்து ஆலய வழிபாட்டின் பலனை அருளுமாறு வேண்டிக் கொள்வார்கள். அதனால் இத்தேவஸ்தானத்திலும் சண்டேஸ்வரிக்குத் தனி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

### லிங்கேஸ்வரர்

உற்சவ காலத்தில் சிவராத்திரி 9 நாட்கள் நடைபெறும் விசேஷகாலங்கள் இதில் சோமவார விரத தினங்களின் விசேட பிரார்த்தனை செய்யும் அம்சமாகும். இங்கு லிங்கமூர்த்திக்கு கண்கவரும் வகையிலும், பார்ப்பவர்களுக்கு பக்தியை உண்டு பண்ணும் வகையிலும் சிறப்பாக தனிச் சந்நிதி அமையப் பெற்றுள்ளது சிறப்பாகும்.

### தீர்த்தக் கிணறு

இந்து மதத் தத்துவங்களை வாழ்க்கை நெறியோடு இணைத்துத் தந்துள்ளார்கள். ஆலய வழிபாட்டில் தீர்த்தாண்டவமும் ஒன்று அவற்றிற்கமைய ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான தெற்கு புறத்தில் தீர்த்தக் கிணறு அமைக்கப்பட்டுள்ளதினை இன்றும் காணலாம். ஆனால் இக்கிணற்றில் ஆரம்பத்தில் தீர்த்தமாடினார்கள். ஆனால் வீதி உலாவும் பல கிராமங்களுக்குச் செல்வதினால் ராசல்ல நீர்த்தேக்கத்தில் ஸ்ரீ கண்கண்ட லிங்க நதியில் தீர்த்தமாடி வருகின்றார்கள். புதிய நிர்மாண வேலைகள் தேவஸ்தான மணிக்கோபுரம், இராஜ கோபுரம், விமானங்கள், வசந்த மண்டபம் ஆகிய நிர்மானப் பணிகளையும் வர்ணம் தீட்டும் வேலைகளையும் திரு.எம். சந்தானம் (சபதி) மதுரை, தென் இந்தியா. அவர்களால் மிகவும் சிறப்பாகக் கட்டிமுடிக்கப்பட்டது.

மூன்றாவது கும்பாபிஷேகம் 30.08.2000 அன்று விநாயகர் வழிபாடோடு விசேட பூஜைகள் ஆரம்பமாகியது. 31.08.2000அன்று காலை 7.00 மணிக்கு விசேட சாந்தி புண்ணியவாசனம் தொடர்ந்து பக்தர்கள் எண்ணைக் காப்பு பிற்பகல் 1.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நடைபெற்றது. பின் மாலை 6.00 மணிக்கு பிம்பசுத்தி, விஷேச பூஜைகள் நடைபெற்றது. 01.09.2000 அன்று 7.10 முதல் 11.10 வரை உள்ள சுபநேரத்தில் கிரியைகளைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

2001 வைகாசி விசாகத்தில் பஞ்ச ரதோற்சவத் திருவிழா 10 நாட்கள் திருவிழா 15 நாட்களாக மாற்றப்பட்டது. ஒரு நாள் நடைபெற்ற மகேஸ்வர பூஜை (அன்னதானம்) 15 நாட்களாக மாற்றம் பெற்றது. அருள்மிகு ஐயப்பன் சுவாமி கோவில் அமைக்கப்பெற்றது. எஸ். ரவிச்சந்திரன் J.P. (S.R.R.) குடும்பத்தவர்களால் 12.12.2003ஆம் ஆண்டு சித்திரத்தேர் நிர்மாணப் பணிகள் ஆரம்பமானது.

31.05.2004இல் வத்துகாமம் நகரில் முதலாவது சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடத்தப்பட்டது. 01.06. 2004 வைகாசி விசாக மகோற்சவ பஞ்ச ரதோற்சவம் நடைபெற்றது. தேர்த்திருவிழா, பால்குடி பவனி, கற்பூரச் சட்டி பவனி, தீர்த்தோற்சவம், பூங்காவனம், வைரவர் பூஜை என்ற விதிகளுக்கமைய திருவிழா நடைபெறுகின்றது. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள், அருள்மிகு ஸ்ரீ கண்கண்ட விநாயகப் பெருமான், வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ கதிரேசப் பெருமான், அருள்மிகு ஸ்ரீ உமா மகேஸ்வரர், அருள்மிகு ஸ்ரீ சண்டேஸ்வரி ஆகிய பஞ்ச மூர்த்திகளுமாகும்.

ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தில் நாட்டின் நலன் கருதியும் நாட்டு மக்களுக்கு சுபீட்சத்திற்காகவும் சனிப் பெயர்ச்சியை முன்னிட்டு சனீஸ்வர கிரகதோஷ விஷேட மஹா யாகம் 24.06.2005இல் சர்வதேச இந்துமதக் குருப் பீடாதிபதி சிவாகம கலாஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார், தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வை. கமலநாதக் குருக்கள், சைவ அபிமானிகள், பொதுஜன ஆதரவுடன் நடைபெற்றது. 18.12.2005 ஞாயிற்றுக்கிழமை சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமி மகரஜோதி விழா நடைபெற்றது. சைவ அபிமானிகள் சங்கம், முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தில் 12.02.2006 இல் இணையத்தள கணினிப் பயிற்சி நிலையம் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சைவ அபிமானிகள் சங்கத் தலைவர் சிவராஜ் மற்றும் உறுப்பினர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சிவனுக்கு தனி ஆலயம் அமைக்கப்பட்டது. திரு. எம். இராமலிங்கம் மகாலிங்கம் குடும்பம் அவர்களால் நிர்மானித்துக் கொடுக்கப்பட்டது. 2001இல் வைகாசி விசாக பஞ்சரதோற்சவப் பெருவிழாவின்போது வரகாஸ்தென்னயில் 2001 ஆம் ஆண்டு முதல் வசிக்கும் எஸ். ராமதாஸ் J.P. தலைமையில் கூடிய பொதுமக்கள் வரகாஸ்தென்ன பொது மக்கள் உதவியுடன் தீர்த்தத் திருவிழாவின்போது, அம்பாள் வரகாஸ்தென்ன வரை வர சைவ அபிமானிகள் சங்கத் தலைவர் ஜி. சிவராஜ் ஒப்புக் கொண்டதற்கமைய வழமையாக தீர்த் தோற்சவத்துக்காக அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ராசல்ல நீர்த்தேக்கத்தில் ஸ்ரீ கண்கண்ட லிங்க நதியில் தீர்த்தமாடி வாவின்ன வழியாக தமிழ் மக்களினதும் பௌத்தர்களினதும் பூஜைகளை ஏற்று ராமச்சந்திரன் தோட்டத்தில் மதிய உணவு அருந்தியபின் மீண்டும் பிடியகெதர யடிராவன வழியாக நகர் வந்து மீண்டும் தேவஸ்தானத்தை வந்தடையும். அதன்பின் தேவஸ்தானத்தில் பிராயச்சித்த பூஜையும் அபிஷேகமும் நடைபெற்று கொடியிறக்கம் நடைபெறும். பின் பூங்காவனத் திருவிழா சைவ அபிமானிகள் சங்கத் தலைவர் ஜி. சிவராஜ் குடும்பத்தாரால் செய்யப்பட்டு வருகிறது. இறுதிநாள் திருவிழாவென வைரவர் பூஜை (வைரவர் மடை) வைரவர் சுவாமிக்கு அஷ்டோத்தர சத சங்காபிஷேகம் விசேட தீபாராதனையும், பகல் மகேஸ்வர பூஜையும் மாலை வைரவர் சுவாமிக்கு விஷேட வைரவ ஹோமம், தீபாராதனையுடன் வசந்த மண்டப பூஜையும் நடைபெற்று. சுவாமி உள்வீதி உலாவும் நடைபெறும். இந்த உபயத்தினை விஸ்வபிரம்ம குல சமூகத்தவர்களால் செய்யப்பட்டு வருவது சிறப்பு அம்சமாகும். மேலும் விஷேட தினங்களில் பூஜைகள் நவராத்திரி விழா, சரஸ்வதி பூஜை. மஹாயாகம், சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி மகரஜோதி விழா, கிரக தோஷ மகாயாகம். சிவராத்திரி, திருவெம்பாவை, மாவிளக்குப் பூஜைகள், சுமங்கலிப் பூஜைகள் மட்டுமல்ல விஷேட தினங்களில் விசேட பூஜைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கம் அதன் ஒரு சேவையாக கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தினர் மூலம் நந்திக்கொடியினைப் பெற்றுக் கொடுத்தது. நந்திக் கொடியின் மகிமையை எழுத்தில் வடிக்க முடியாது. அதாவது சைவ சமயத்தை உலகத்துக்கு எடுத்துக் காட்டுவது நந்திக் கொடிதான்.

*சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை*
*அவனொடொப் பார் இங்குயாவரும் இல்லை*
*புவனம் கிடந்தன்று. பொன்னொளி மின்னும்*
*தவனச் சடைமுடித் தாமரையான்*

(திருமந்திரம்)

விநாயகர், முருகன், வைரவர், அம்பிகை மட்டுமல்ல அனைத்துத் தெய்வங்களும் சிவனின் பிரதி பிம்பம்தான். அதனால் தான் எம்நாட்டில் நந்திக்கொடியை பரவச் செய்ததும் எமது தேவஸ்தானத்திலும் நந்திக் கொடி பறக்கச் செய்ய வேண்டும் என்ற நல்நோக்குடன் எமது சமயத்துக்கு சோதனை வந்தபோது அதாவது கன்னியாகுமரிக்கும் நாகபட்டணத்துக்கும் மத்தியில் அமைந்துள்ள சுசீந்திரத்தில் சுண்ணாம்பாலும் செங்கற்களாலும் உருவாகப் பெற்ற நந்தி உள்ளது.

சைவத்திற்கு சோதனை வந்தபோது நந்தி உயிர் பெற்று காட்சி கொடுத்த வரலாறுகளை அறிவோம். கன்னியாகுமரிக்கும் நாகபட்டணத்திற்கும் மத்தியில் அமைந்துள்ள

சுகீந்திரத்தில் சுண்ணாம்பாலும், செங்கற்களாலும் உருவாக்கப்பட்ட நந்தி உள்ளது. சந்தாசாகிப் கோவிலின் சிலைகளை சிதைக்கும் போது நந்தி வைக்கோலைச் சாப்பிட்டு சாணம் போட்ட அற்புதத்தைக் கண்ட சந்தாசாகிப் சிலைகளை சிதைக்காது விட்டதாக வரலாறு கூறுகிறது.

திருச்செங்கோடு அர்த்த நாரீஸ்வரர் தலம் மறைகள் பூசித்த தலமாகும். இத்தலத்திலுள்ள நந்தி திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஒரு மகான் பாடிய பாடலைக் கேட்டு உயிர் பெற்று நின்றது என்று கூறுகின்றார்கள்.

திருப்புன்கூர் தலத்தில் மிகப்பெரிய நந்தி, இந்த நந்தி சிவபெருமானின் கட்டளைக்கிணங்க இரண்டு அடி நகர்ந்து நந்தனார் இறைவனை வணங்க வழி செய்தது என்பது புராண வரலாறு. திருஞான சம்பந்தர் திருப்பட்டீஸ்வரத்தை அடைந்தபோது, சம்பந்தரைக் காண்பதற்கு ஆவல் கொண்ட சிவன் தன்முன்நின்ற நந்தியை விலகச் சொல்ல நந்தியும் விலகியது. இப்படியான வரலாறுகளும் நந்திக்குண்டு.

கொடி கட்டுதல் என்பது ஒரு செயலைச் செய்ய எடுத்துக் கொள்ளும் உறுதியாகும். அது கொள்கைக் கோட்பாட்டின் மீது கொண்ட பற்றையும் செயல் வீரத்தையும் உணர்த்துவதாகும். பழந்தமிழ் வேந்தர்கள் தமக்கு என்று கொடி கட்டுதல், கொடிமரத்தைப் போற்றியதை அறிவோம்.

பல்லவர்கள் சைவம் தழுவிய நந்திக்கொடி கொண்டதும் வரலாறு காட்டும் சிவன் கோவிலில் பலிபீடத்திற்கு (மனிதன் தனது தீய குணங்களை பலியிடும் இடம்) அருகில் இருக்கும் கொடிமரம் அதன்மீது பறக்கும் நந்திக்கொடியும் சிவசக்தியின் ஆட்சியை உலகுக்கு வெளிப்படுத்த எடுத்த முறையாகும். தூய அறமாக-நல்லொழுக்கமாக -நன்மையே வடிவாக புண்ணியச் செயலாகக் கடமை செய்து செம்மையாகச் சிவத்தொண்டு செய்து பிறவா நெறி நின்று வீடு பெறு பெறவருவார் வருக என்று அழைக்கும். அழைப்பே நந்திக்கொடியாகும். இவ்வாறு சிவத்தின் முப்பெரும் ஆற்றலை எடுத்துக் காட்டும் வண்ணம் முப்பெரும் நந்திகள் சிவன் கோவிலில் உள்ளனர். படைக்க வருக (வீடுபேறு) என அழைக்கும் நந்திக்கொடியும், காக்க வருக (சிவ ஒழுக்கத்தை) என அழைக்கும் வாகன நந்தியும். அருள்பெற வருக என அழைக்கும் அதிகார நந்தியும் முறைப்படி அமைந்துள்ள திறம் சிவன் கோவிலின் விந்தைமிக்க திறமாகும். முப்பெரும் நந்தியும் சிவத்தின் மூவகை ஆற்றலைக் காட்டும் உருவமாகும். சிவனின்மெய்யியலை உணர்வோர் இதனை நன்கு உணர்வார். அன்றைய மன்னர்கள் எங்கள் நாணயங்களிலும் இடபம், நந்தி சின்னங்களைப் பதித்து மிக உயர்ந்த நிலைப்படுத்தியிருந்தார்கள்.

ஆனால், அன்னிய ஆட்சியின் மதவெறியால் எமது கோவில்கள் எமது பாரம்பரியம், எமது சின்னங்கள் எல்லாம் புதைக்கப்பட்டன. இன்று எல்லாம் உயிர்பெற்று விட்டபோதும் சைவர்கள் நந்திக்கொடியை மட்டும் பாராமுகமாக, அதாவது சில கோவில்களைத் தவிர வேறு எங்கும் காண முடியாமலிருந்தது. ஆனால் திரு. சின்னத்துரை தனபாலா அவர்களின் அன்பளிப்பாகக் கிடைத்த நந்திக் கொடிகளை வத்துகாம நகருக்கு முதன் முதலில் வத்துகாமம் நகரசபைக்கும், வத்துகாமம் தேவஸ்தானதுக்கும் நந்திக் கொடியினைக் கொடுத்து மகிமைப்படுத்திய பெருமை தினக்குரல் எஸ். ராமதாஸ், சைவ முன்னேற்றச் சங்க பிரச்சாரப் பிரிவு உத்தியோகத்தவராவார். அவர் மூலம் 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு வத்துகாமம் இந்து திருவிழாவின்போது நந்திக்கொடி பறக்க விடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இது மட்டுமல்லாது இந்து சமய வளர்ச்சிக்காக இலவசப் புத்தக வெளியீடுகள், பிரச்சாரம் பத்திரிக்கை செய்திகள் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிற்கும் செய்தி வெளியிடுதல் போன்றவற்றினை சைவ முன்னேற்றச் சங்கம் தான் இன்றுவரை செய்து வருகின்றது.

*'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!'*

*சுபம்*

❑ ❑ ❑

உ
சிவமயம்

# வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருவூஞ்சல் பாமாலை

## விநாயகர் வணக்கம்

சீர்பூத்த தென்னிலங்கை தன்னில் மேவும்
சிரம்பூத்த மணி மகுடத் திலக மென்ன
போர்பூத்த கண்டி நகர்க் கருகாய் யுள்ள
பேர் புகழ் பூத்த வத்துகாம நகரினில்
ஏர்பூத்த முத்துமாரியம்மன் மீது
இசை பூத்த பொன்னூஞ்சலினிது பாடக்
கார்பூத்த கருணை மதம் பொழியு முக்கட்
கண்கண்ட கணபதி தன்
திருவடியை கருத்துள் வைப்பாம்.

## எழுந்தருளற் பா

சந்தனம் பாலிள நீரா லபிடேக மாட்டிச்
சஞ்சலங்கள் டியாற்கு அஞ்சி யோடச்
செந்திருவுங் கலைமகளுஞ் சேடியாகச்
சேவித்துப் பாட்டாடை யணிகள் பூட்டிக்
கொந்தளக மலர் சூட்டித் திலகந் தீட்டி
குளிர் பன்னீர் ஜவ்வாது நறு நெய் பூசி
அந்தணர்களரு சித்து மறைகனோத
அன்னை முத்துமாரியே எழுந்தருள் வீரம்மா.

## பொன் ஊஞ்சல் பாமாலை

1. செம்பவளக் கானிறுத்தி மணிகள் தீற்றித்
திகழ் வைரச் சட்டமதிற் சலாகை வீக்கி
ஐம்பொனருங் கயிறதனி லாடுஞ் செய்ய
ஆடகப் பொற் பீடமதி லமர்ந்து தாயே
இம்பரெலாந் தொழதேத்தி யிசைகள் பாட
வெத்திசையுஞ் சித்தர்கள் நின் றாடல் காணக்
தும்புரு நாரதரி சைப்பத் துதிகள் கூறத்
துலங்கு முத்துமாரியே யாடீரூஞ்சல்.

2. மங்கை நலார் தொழு தேத்தி வாழ்த்துப்பாட
மலர்களுங் கமலைமகளும் வடந்தொட்டாட்ட
பங்கயனு முகுந்தனுமற் றுள்ள தேவர்
பரவி மலர் தூவியஞ் சலித்து போற்ற
பொங்கு கட லெனவடியார் புகழ்ச்சி பாடப்
பொன் செய் வத்துகாம வூரினில் வந்தாய்
தங்க மணித் தவிசமர்ந்து ஆடீரூஞ்சல்
தங்கு முத்துமாரியே ஆடீரூஞ்சல்.

3. திருமகளுங் கலைமகளுஞ் சேர்ந்து ஆட்டத்
திகழுமர மகளிர் நறு மலர்கள் தூவ
அருகிருந்து வள்ளியொடு தெய்வ யானை
அம்மையர் சாமரைக் ளசைத்து வீச
மருகியிவர்க் கயல்துர்க்கைமாது காளி
மணிவிளங்கு மா(ஆ) ராத்தி வகையு மேந்த
திருவிளங்கு வத்துகாம ஊர்தன்னில் வைகுந்
தேவி முத்துமாரியே நீ (ஆ) ராடீரூஞ்சல்.

4. நந்திகாண நாதர் முழ இசைத்து ஆட
நாரதர் தும் புருநரம்பு மீட்டியாட
அந்தரந்தூர்த்த மரர் களி நடமே யாட
ஆனந்த வெள்ளத்தி லடியா ராட
முந்தி வந்து பணிந்தயனு மாலு மாட
முன்பு நின்று வாணி திரு முறையே பாட
சிந்தை மகிழ்ந் வத்துகாம வூரில் வைகுந்
தேவி முத்துமாரியே நீ ராடீரூஞ்சல்.

5. ஊர் விளங்கு மக்களெலா முன்னை யேத்த
உலகில்றம் பொருளின்ப முயந்து பெய்ய
இடர்தருவார் நின்தளிர்க்கு இலாது வீழ
கூர் விளங்கு வைவேலாற் கொடுமை செய்வாய்
குணமுடையார் கடைத்தேறக் குறிக்கு நெஞ்சாய்
பார் விளங்கு முத்துமாரி யம்மனேன்றே
பகரு மனோன் மணியே நீ ராடீ ரூஞ்சல்.

6. பொய்மையிலா வுள்ளமுயர் கூட மாக்ப
புகலு மொரு இறையுணர்வே கால்களாக
மெய்மையறி வோளியே பொற்பீட மாக
விளங்குபே ரன்பதுவே கயிறதாக

செய்யபுல னைந்துமணி விளக்க தாக
திகழ பொன் னூஞ்சல் மிசை இனிதுமேவி
உய்யவரு மருள் சுரந்து டே ரூஞ்சல்
உலகு புகழ் முத்துமாரி நீ ராடீர் ஊஞ்சல்.

7. பொங்குகட லெனத் தேவர் கணங்கள் சூழ்ந்து
புகழ் பாட வரம்பையர் கணடனமாட
செங்கனிவா யிசைபாட வீணை தாளம்
செப்பரிய நாதஸ்வர வாத்தியங்க ஆர்ப்ப
மங்களஞ் சேர் முழவதிரச் சங்க மூத
வானவர் கண ணிமையாது வணங்கி யேத்த
வங்கி மலி வத்துகாம ஊர் தன்னில் வைகி
வரமருளு முத்துமாரி நீ யாடீ ரூஞ்சல்.

8. தேவியுன் திருத்தளியும் புகழு மோங்கத்
திருநாடும் நல்லோருஞ் செழித்து வாழ
மேவியுறை இத்தலமும் இந்நாடும்
மேனாடாய் மென் மேலும் மிளிர்ந்து வீசக்
காவியங்கள் நின்புகழை யென்றும் பாடக்
கருணை மழை பொழிவாய் நின் னடியர் வாழத்
தாவி லவித் தலம்புரக்கும் சைவாபி மானிகள் சங்கம்
தழைக்க முத்துமாரித் தேவி நீராடீ ரூஞ்சல்.

9. பத்தி நிறை யர்ச்சகர் பல்லூழி வாழப்
பகருமித் தலங் காப்போர் பணி செய்வார்கள்
உத்தமியுன் புகழ் விளங்கவுற் சவங்கள் செய்வோர்
உண்மையுட னுழைக்கு மிவ் வூரார் யாவரும்
சித்த மதில் நிறை வெய்திப் புவனபோகம்
சித்தியெலா மித்திரையில் நுகர்ந்து வாழ
மெத்த மன மிரங்கி நீ ராடீ ரூஞ்சல்
விளங்கு முத்துமாரி நீராடீ ரூஞ்சல்.

10. ஆரணியே அம்பினை யாடீ ரூஞ்சல்
சுந்தரியே சுத்தரியே யாடீரூஞ்சல்
பூரணியே புராதனியே யாடீ ரூஞ்சல்
புங்கவியே சங்கரியே யாடீரூஞ்சல்
காரணியே கற்பகமே யாடீ ரூஞ்சல்
கலைமகளே மலைமகளே யாடீ ரூஞ்சல்
சீரணியு வத்துகாம வூரில் வைகுந்
தேவி முத்துமாரி நீ ராடீ ரூஞ்சல்.

சீர்வாழி சிவசமய மடியார் வாழி
தேவிமுத்து மாரி நாமஞ் சிறந்து வாழி
ஊர் வாழி கல்விதிரு வுயாந்து வாழி
உத்தமரித் தல அறங்காவல் வாழி
கார் வாழி கழனிகதிர் கதித்து வாழி
காசினியி லானின நான் மறையும் வாழி
ஏர் வாழி வத்துகாம பொன்னூர் வாழி
இவ்வூஞ்ச லென்றென்றும் வாழி மாதே.

## மங்களம்

விக்கின விநாயகர்க்கும் வேலவர்க்கு
மங்களம்
மிக்க துர்க்கை அம்மனுக்கும் வைரவர்க்கு
மங்களம்
தொக்கவடி யார்களுக்குந் தொண்டருக்கும்
மங்களம்
தக்க பொன்னி னூஞ்சல் கேட்ட சகலருக்கும்
மங்களம்
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

❑ ❑


*With Compliments From :*

**SREE KUMARAN EMPORIUM**
**ஸ்ரீ குமரன் எம்போரியம்**
**SREE KUMARAN TRAVELS**
**ஸ்ரீ குமரன் டிராவல்ஸ்**

*No. 74, Main Street, Wattegama, Sri Lanka.*

*Off. 0094 081 2470709 . Res. 0094 060 2840900 Cell : 077 910 5814*



உ
சிவமயம்

# முருகப் பெருமானின் திருமேனித் தத்துவ விளக்கம்

ஆக்கம் : **M. R. சாந்தாதேவி**
*ஆசிரியை, க/வ/ பன்வில விக்கேஸ்வர த.ம. வித்தியாலயம்.*

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே''

*-கந்தர் அநுபூதி*

**நா**ம் வாழும் காலம் கலியுகம். கலியுகத்துக்குரிய கடவுள் முருகப் பெருமான் பரம்பொருளாகிய சிவபெருமானின் திருக்குமாரர்களில் ஒருவராவார். திருநந்திதேவரின் சாபத்துக்குள்ளான தேவர் குலத்தினர் சூரபன்மனால் துன்பத்துக்குள்ளாயினர். தேவர்கள் கருணாமூர்த்தியாகிய ஈசனிடம் சென்று சூரபன்மனால் தங்களுக்கு ஏற்பட்ட இடர்கள் பற்றி முறையிட்டு, தங்களைக் காத்தருளுமாறு வேண்டி நின்றனர். கருணைக் கடலாம் சிவபிரான் அமரர் குலத்துயர் களைய திருவுள்ளம் கொண்டார். தனது நெற்றிக்கண்ணைத் திறந்தார். அதனின்றும் ஆறு அருட்பொருட் ஜோதிகள் தோன்றின. சிவபிரான் ஆறு அருட்பெருஞ் ஜோதிகளை சுருக்கினார். அவ் ஆறு தீப்பொறிகளும் சரவணப்பொய்கையில் விழுந்து ஆறு திருக்குழந்தைகளாக உருமாறின. அக்குழந்தைகளை ஈசனின் ஆணைப்படி திருக்கார்த்திகைப் பெண்கள் வளர்த்தனர். இவ்வாறு நிகழுங் காலத்தில் ஒருநாள் சிவபெருமானும் உமையம்மையாளும் சரவணப் பொய்கைக்கு வந்து ஆடல்புரிந்து நின்ற ஆறு திருக்குழந்தைகளையும் கண்டு அகமகிழ்ந்தனர். அப்பொழுது ஈசன் தாமும் அப்பிள்ளைகளுக்கு பேதமில்லை என்பதை அம்மையாருக்கு உணர்த்தினர். அம்மையார் ஆறு குழந்தைகளையும் ஒருசேரக் கையில் கொள்ள அவை ஆறு முகங்களும் பன்னிரெண்டு கைகளும் கொண்ட ஒருதிருமுருகனானார். ஈசன் தனது நெற்றிக் கண்ணைத் திறந்தருளிய பொழுது தோன்றிய ஆறு அருட்பெருஞ் ஜோதிகளைக் கண்டு உமையவள் அஞ்சி ஓடியபொழுது அம்பிகையின் கால் சிலம்பில் இருந்து ஒன்பது மணிகள் உதிர்ந்தன. அந்த ஒன்பது மணிகளிலும் ஈஸ்வரியின் நிழல்பட்டது. அதன் விளைவாக நவ சக்திகள் உருவாகினர். அந்த ஒன்பது சக்திகளையும் சிவபெருமான் கடைக்கண்ணால் பார்த்து அருளினார். ஒன்பது பேரும் கருக்கொண்டனர். நீண்ட நாட்கள் கருக்களைச் சுமந்து அம்பிகையின் அருளினால் நாபியிலிருந்து ஒன்பது வீரர்களைப் பெற்றெடுத்தனர். (நவவீரர்கள்) வீரவாகுத்தேவர், வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரதீரர், வீரராக்தகதர், வீராந்தகர் என நவவீரர்கள் உதயமாகினர். இவ்விதம் குமரக் கடவுளுக்கு ஒன்பது தம்பியர்கள் உருவாகினர். ஈசனின் வியர்வைத் துளிகளில் இருந்து லட்ச வீரர்கள் உருப்பெற்றனர். நவ சக்திக் குமாரர்களும், லட்ச வீரர்களும் திருமுருகனும் இவ்விதம் தோன்றினர் எனப் புராணவரலாறு கூறுகின்றது. ஆறுமுகப் பெருமான் நவசக்திக் குமாரர்கள், லட்ச வீரர்களுடன் தேவர் சேனைக்குத் தலைமை தாங்கித் தேவசேனாதிபதியாய் தேவகுழாமும் பூத கணங்களும் புடைசூழ அசுரகுலத்தினருடனும் சூரபன்மனுடனும் போர் புரிந்து சூரனை சங்காரம் செய்து அமரர் குலத்தினரின் துயரினைக் களைந்தார். முருகப் பெருமானின் திவ்விய பிறப்பு தேவர் துயர்களைந்து அவர் தம்குலம் உய்வு பெற வகையாயிற்று.

முருகப் பெருமானின் ஆறுமுகங்களும் தெய்வீகத் தன்மை கொண்டன. முருகனின் ஆறுமுகங்களில் ஐந்து திருமுகங்கள் சிவசொரூபமானவை. அவைமுறையே ஈசானம், வாமதேவம், தற்புருஷம், சக்தியோஜாதம், அகோரம் என்பனவாகும். ஆறாவது திருமுகம் சக்தி சொரூபமான அதேமுகமாகும். முருகப் பெருமானின் திருமுகங்களில் ஐந்து திருமுகங்கள் சிவசொரூபமானவை என்ற தன்மையில் முருகவேளும் ஈசனும் ஒருவரே என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் சூரனுக்குப் போர்க்களத்திலே முருகனால் காட்டியருளப்பட்ட திருப்பெரு வடிவ விஸ்வரூபம் அமைகின்றது. திருப்பெரு வடிவத்தினுள் சகல அண்டங்களும், சமுத்திரங்களும் ஜீவராசிகளும் உள்ளடக்கப்பட்டு அவற்றுக்கு எல்லாம் பரம்பொருள் தானே என சூரபன்மனுக்கு உணர்த்தும் வகையில் முருகன் காட்சியளித்தார். இத்திருப்பெரும் வடிவம் முருகவேளின் பரம்பொருள் தத்துவத்தினை உணர்த்தி நிற்கின்றது. மேலும் முருகனுடைய ஆறுமுகங்களும் ஆறு குணங்களைக் குறித்து நிற்கின்றன. முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயமுடைமை, வரம்பிலாற்றல், பேரருளுடைமை என்னும் ஆறுகுணங்கள் ஆறு திருமுகங்களுக்குரியன வாகின்றன. ஆறுமுகங்களும் ஆன்மாக்களுக்கு அன்பு, அறிவு, கருணை, ஞானம், அருள் என்பவற்றை வழங்குவனவாகவும் உள்ளன. முருகப் பெருமானின் ஆறுமுகங்களும் அறுவகையான கருணையைப் புரிகின்றன. ஒருமுகம் பிரணவ மயிலேறி விளையாடுகின்றது, ஒருமுகம் பரமசிவனுக்கு சிவஞானம் போதிக்கின்றது. ஒருமுகம் முருகாவென மொழிகின்ற அடியார் தம் வினைகளைத் தீர்க்கின்றது, ஒருமுகம் ஆணவமலமாகிய சூரபத்மனை ஆட்கொள்ளு கின்றது, ஒருமுகம் வள்ளியம்மைக்கு கருணை புரிகின்றது. இதனைத் திருப்புகழில் 'வாக்கிற் அருணகிரி'யார் அழகுறப் பாடியுள்ளார்.

''*ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே*
*ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே*
*கூறுமடியார்கள் வினைதீர்க்குமுக மொன்றே*
*குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே*
*மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே*
*வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே*
*ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்*
*ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.*"
என்கின்றார்.

முருகனின் ஆறு திருமுகங்களில் முதல் நான்கும் வேதவாக்கிய சொரூபங்களாகவும், அடுத்த இருமுகங்களும் இதிகாச புராண மகாவாக்கிய சொரூபங்களாகவும் அமைந்துள்ளன.

ஆறுமுகக் கடவுளின் பன்னிரு திருக் கரங்களும் ஒவ்வொரு தெய்வப் படையை ஏந்தியுள்ளன. கேடயம், சேவற்கொடி, அங்குசம், வரதமுத்திரை, பாசம், வில், சக்கரம், வஜ்ராயுதம், சக்திவேல், கத்தி, சூலம், அபயமுத்திரை எனப் பன்னிரெண்டு திருவாயுதங்கள் காணப்படுகின்றன. முருகவேளின் பதினொரு புயங்களும் ஏகாதச என்னும் பதினொரு எண்ணிக்கை கொண்ட உருத்திரர்களாகவும், பன்னிரெண்டாவது புயம் சக்தியின்புயமாகவும் விளங்குகின்றன. முருகப் பெருமானுடைய திருவுருவம் அருவமாக கண்ணுக்குப் புலப்படாமலும், அருவுருவமாக கண்ணுக்குப் புலப்பட்டும், புலப்படாமலும் நிற்கும் இயல்புகளைக் கொண்டது.

முருகப் பெருமானை சுப்பிரமணியன் எனவும் அழைப்பர். சுப்பிரமணிய மூர்த்தங்கள் பதினாறு வகையானவையென குமார தந்திர ஆகமம் குறிப்பிடுகின்றது. அவை முறையே சக்திதரன், ஸ்கந்தன், சேனாதிபதி, சுப்பிரமணியன், கஜவாகனன், சரவணபவன், கார்த்திகேயன், குமாரன், சண்முகன், தாரதுாரி, சேனானி, பிரம்மசாஸ்தா, வள்ளி கல்யாண சுந்தரமூர்த்தி, கிரௌஞ்சபேதன், சிகிவாகனன், பாலசாமி என்பனவாகும். பதினாறு மூர்த்தங்களின் இலட்சண விதியமைப்பினை நோக்கின் சக்திதரன், சுப்பிரமணியன், ஸ்கந்தன், குமரன், பிரம்ம சாஸ்தா, வள்ளிகல்யாண சுந்தர மூர்த்தி, பாலசாமி, சிகிவாகனன் ஆகிய மூர்த்தங்கள் ஒருமுகத்துடனும் இரண்டு கைகளுடனும். கைகளில் கத்தி, வச்சிரம், அபயம், வரதம் ஆகிய ஆயுதங்களுடனும் காட்சியளிப்பார். சேனாதிபதி, சேனானி, தாராதுாரி, சண்முகன், சரவணபவன், கார்த்திகேயன், கிரௌஞ்சபேதன் ஆகிய மூர்த்தங்கள் ஆறுமுகத்துடனும் பன்னிரு கைகளுடனும் அபயம், வரதம், கத்தி, புஸ்பபானம், கரும்பு, வில், கேடயம், வச்சிரம், சேவல்கொடி, அம்பு, பாசம், அக்கயமாலை, கமண்டலம் ஆகிய ஆயுதங்களுடன் காட்சி கொள்வர்.

முருகப் பெருமான் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் மூன்று இயல்புகளையுடையவர். இச்சாசக்தி வள்ளியம்மமை, கிரியாசக்தி தெய்வானை, ஞானசக்தி முருகனின் கையிலுள்ள வேல் ஆகும். முருகப் பெருமானின் கையிலுள்ள வேல் ஞானத்தையும் சேவல் சிவஞானத்தையும் குறிக்கின்றது. ஆணவமாகிய மயிலை அடக்கி அதன் மீது அமர்ந்து திருவருளாகிய சிவஞானத்தை ஆன்மாக்களுக்குக் கொடுத்து உயர்பதம் அடையச் செய்பவர் முருகவேள். முருகனுடைய வாகனங்களாக மயில், ஆட்டுக்கடா, யானை என்பன கொள்ளப் படுகின்றன. மயில்வாகனம் ஆணவ மலத்தினையும், யானை மாயை மலத்தினையும் குறித்து நிற்கின்றன. முருகனுடன் போர் புரிந்த சூரன் மாயைகள் பலபுரிந்து நடுக்கடலில் மாமரமாக நின்றவேளை குகனின் ஞானவேல் பட்டு இருகூறாகி ஒன்று மயிலாக உருப்பெற்றான். முருகவேள் மயிலை தமது வாகனமாகக் கொண்டருளினார். நாரதமுனிவர் ஒருகால் வேள்வியொன்றினை மேற்கொண்டிருந்தார். வேள்விப் பிரகாரத்தில் மந்திர உச்சாடனத்தை மேற்கொள்ளும் பொழுது பிசகு ஏற்பட உச்சாடனம் மறுபடி உச்சரிக்கப்பட்டது. இதன் விளைவால் வைரம் போன்ற கொம்புகளை உடைய ஆட்டுக்கடா தோன்றி உலகத்தையே இம்சை செய்தது. தேவர்கள் சென்று முருகவேளிடம் முறையிட்டனர். முருகப் பெருமான் வீரவாகுத் தேவரிடம் அவ் ஆட்டுக்கடாவை அடிக்கும்படி பணித்தார். முருகனின் கட்டளையை ஏற்ற வீரவாகுத்தேவர் அதனை அடக்கி பெருமானிடம் கொண்டு வந்தார். அந்த ஆட்டுக் கடாவை முருகப் பெருமான் தமது வாகனமாக்கிக் கொண்டார். சூரசங்கார நிகழ்வில் சூரபத்மனுடைய தம்பியான தாரகாசூரன் மேல் ஈசன் மைந்தனின் ஞானவேல் ஏவப்பட்டது. ஞானவேலுக்குத்தப்ப கிரவுஞ்ச மலையில் ஒளிந்துகொண்டான் தாரகாசூரன். ஏவப்பட்ட அம்பு சென்று கிரவுஞ்ச மலையைத் துளைத்து உடைத்தது. தாரகாசூரன் அம்புபட்டு மாளாது யானை வடிவானான். அவ்யானையை முருகன் தனது வாகனமாக ஏற்றுக் கொண்டார். இவ்விதமாக ஆறுமுகக் கடவுளுக்கு மயில், ஆட்டுக்கடா, யானை என்பன வாகனங்களாக அமையப் பெற்றன. முருகப் பெருமானுடைய சேவல்கொடி படைத்தல் தொழிலையும், மயில்வாகனம் காத்தல் தொழிலையும், வேல் அழித்தல் தொழிலையும், வள்ளி மறைத்தல் தொழிலையும், தேவயானை அருளல் தொழிலையும் என ஐந்தொழில்களைக் குறிப்பனவாக அமைந்துள்ளன.

முருகப் பெருமானின் மந்திரங்கள் 'சடாட்சரம்' சரவணபவ என்பனவாகும். 'சரவணபவ' என்ற மந்திரத்தில் 'ச' என்பது தெய்வீகத்தையும், 'ர' என்பது ஒளியையும், 'வ' என்பது தூய்மையையும், 'ண' என்பது வீரத்தையும், 'பவ' என்பது இவையாவும் சேர்ந்து 'உதித்தவ' என்ற பொருளைக் குறித்து நின்கின்றது.

குமரக் கடவுள் ஞானத்தை வழங்கும் குருவாகவும், பழனியாண்டியாகி நிலையில் யோகியாகவும் தேவர்களின் சேனைக்குத் தலைமை தாங்கும் சேனாதிபதியாகவும் விளங்கி அருள்பாலிக்கின்றார். ஞானிகள் யாவரும் அவரைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபாடாற்றுகின்றனர். குழந்தைகளுக்கு அவர் குழந்தைவேலன்; அடியார்களுக்கு பாலசுப்பிரமணியன்; கவிஞர்க்கும் கலைஞர்க்கும் சண்முகன்; வீரர்களுக்குத் தேவசேனாதிபதி; ஞானத்தை விழைவோர்க்குச் சுவாமிநாதன்; இல்லறத்தாருக்கு வள்ளி தெய்வானை சமேத கந்தசுவாமி; ஞானிகளுக்கு பழனியாண்டவர். இவ்வாறு எவரொருவர் எவ்வெவற்றை விரும்புகின்றனரோ அவ்வவ்வருக்கு அவ்வவ்வுருவிற் சென்று அருள்பொழியும் கருணை வள்ளல் இம்முருகப் பெருமானேயாவார். ஆறெழுத்து மந்திரத்திற்குரிய முருகவேள் ஞானம், வைராக்கியம், வீரியம், ஐசுவரியம், ஸ்ரீ, கீர்த்தி என்னும் ஆறு ஷட்குண சம்பன்னன். ஆறு திருமுகங்களுடனும், பன்னிரு கைகளுடனும் மயில்வாகனம் ஏறியமர்ந்து ஞானவேலினைப் புயத்தில் ஏந்தி வள்ளி தெய்வானை சமேதராய்க் காட்சியளிக்கும் கதிரேசப் பெருமானை புண்ணிய திருப்பெருஞ்சாந்தி நன்னாளில் பணிந்து தொழுது எம் பழவினைகளைப் போக்கிடுவோம். ''யாமிருக்கப் பயமில்லை'' என்ற ஆறுமுகனின் வாக்கினை உள்ளத்தில் பதித்து வத்துகாமம் பதிதனில் அமர்ந்து அருளாட்சியுடன் ஞானாட்சி புரிந்திடும் ஸ்ரீ கதிரேசப் பெருமானின் அருளினைப் பெற்றுய்திடுவோம்.

❑ ❑ ❑

உ
கணபதி துணை



# முதல் வணக்கம்! எந்தன் முதல்வனுக்கே!!

ஆக்கம் : **எஸ். நல்லைநாதன்**
*மல்வத்தை வீதி, மாத்தளை.*



***முதல் வணக்கம் எந்தன் முதல்வனுக்கே !!***

''பிள்ளை'' யார்? இவன் யாருடைய பிள்ளை?
அவன்தான் பிரணவத்தின் பரம்பொருளாவான்.
ஓம் எனும் சொல்வடிவில் எதை நாம் காண முடிகின்றது?

**இந்த 'ஓ'** வெனும் சொல்வடிவில் காண்பது பிரணவநாதனின் பிம்பம்தான். பிரணவ நாதனின் பெருமைகள் பலவுண்டு. அவற்றில் ஒருசில பணிவுடன்......

விநாயகனே சித்தி விநாயகனே!
நாயகனே வேதத்தின் நாயகனே!
விநாயகனே சித்தி விநாயகனே!
முதல் வணக்கம்! எந்தன் முதல்வனுக்கே!!

மலர்கொண்டு துதிப்போர்க்கு மாறாத்துயர் தீர்ப்பவனே
அருள்வேண்டி அழுவோர்க்கு அருள்புரியும் ஐங்கரனே
துணைநாடி வருவோர்க்கு துணையிருக்கும் நாயகனே
கருணையின் பிறப்பிடமே காத்தருள்வாய் விநாயகனே!

(விநாயகனே....)

அகிலமெல்லாம் ஆதிபகவான் ஆட்சியென நீயெண்ணி
அம்மையப்பன் முன்னிலையில் ஞானப்பழம் பெற்றவனே
அமர்ந்து போக எலிவாகனமுமுண்டு அருள்நல்க ஐங்கரங்களுண்டு
அகிலாண்ட நாயகியே பார்போற்றும் பஞ்சமுகத்தானே
அண்டசராச்சரனே! தேடிவந்தேன் உன்னருள் வேண்டிவந்தேன்
இவ்வணக்கம் உனக்கன்றி வேறொர்வக்கும் தந்ததில்லை!

(விநாயகனே .....)

பாரெங்குமுன் திருக்கோயில் பார்க்குமிடமெல்லாம் நின்பாசவெள்ளம்
'பிள்ளையார்பட்டியில்' வீற்றிருந்தாய் வலம்புரிவிநாயகனாய் காட்சிகொண்டாய்
'மலையகத்தில்' ஷ்தலைமைத்தாய் அருள்பொழிந்து காத்திட்டாய்
பாலும்தெளிர்தேனும் பாகும்பருப்புமிவை நாலும்கலந்துனக்கு நானும் தருவேன்
துங்கக்கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கும் தருவாயா??
உன் புகழ் எழுத ஞானத்தமிழ் அறிவை!!!

(விநயாகனே .....)

## விநாயகர் ஸ்லோகம்

கஜானனம் பூத கனாதி சேவிதம்
கபித ஜம்பு பலசார பட்சிதம்
உமாசுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்.

அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லை போம்
போகாத்துயரம் போம்
நல்ல குணமதிக மாமருகனை
கோபுரத்தின் மேலிருக்கும் செல்வக் கணபதியை
தொழுதக்கால்

## விநாயகர் சதுர்த்தி

ஆவணி மாதம் சுக்லபட்சத்தில் (வளர்பிறையில்) வரும் சதுர்த்தி விநாயகர் சதுர்த்தி என்று கொண்டாடப்படுகிறது.

விநாயகப் பெருமானுக்கு கஜானன கணபதி, தூமகேது, வல்லப கணபதி, ஐங்கரன், யானை முகத்தோன் என்ற பெயர்களும் உண்டு. விநாயகருக்கு 'பரும்மணஸ்பதி என்ற பெயரும் உண்டு. ப்ரும்னஸ்பதி என்றால் வேதத்துக்கே தலைவன் என்று பொருள்.

எந்தக் காரியம் செய்ய வேண்டும் என்றாலும் முதலில் விநாயகரை வணங்கி துவங்க வேண்டும். இவரை வணங்கி துவங்கும் காரியம் அனைத்தும் சித்திக்கும், அந்தக் காரியங்களில் தடங்கல் வராமல் இருக்க விநாயகர் துணை புரிவார். இதனால் இவருக்கு முழுமுதற் கடவுள் என்ற பெயரும் உண்டு.

விநாயகர் தனது ஐந்து கரங்களில் பாசம், அங்குசம், ருத்திராட்சமாலை, தந்தம், மோதகம் ஆகியவை திகழ்கின்றன. இதனால் இவருக்கு ஐங்கரன் என்ற பெயர் வழங்கப்படுகிறது.

தென்னாட்டில் பிரம்மச்சாரியாக வணங்கப்படும் விநாயகப் பெருமான் வடநாட்டில் சித்தி, புத்தி என்று என்று இரண்டு மனைவிகளுடன் காட்சியளிக்கிறார்.

முதன் முதலாகத் தோன்றி சித்தி, புத்தி என்ற இரண்டு பெண்களை திருமணம் செய்து கொண்டு மும்மூர்த்திகளையும் படைத்து அவர்களுக்கு சதுர்த்தி விரதத்தை உபதேசித்து அருளியதாகக் கூறி அவரை வக்ரதுண்ட கணபதி என்று கூறி வடநாட்டினர் வழிபடுகின்றனர்.

இவரது நாபி பிரம்மஸ்வரூபமாகவும், முகம் விஷ்ணு அம்சம் பொருந்தியதாகவும், கண்கள் சிவமயமாகவும், இடப்பாகம் சக்தி ஸ்வரூபமாகவும், வலப்பாகம் சூரியனாகவும் அமைந்த திருவுருவம் விநாயகருடையது.

## தோப்புக்கரணம் போடுவது ஏன்?

விநாயகரை வணங்கும்போது தோப்புக்கரணம் போடும் வழக்கமும், தலையில் குட்டிக் கொள்ளும் வழக்கமும் உள்ளது.

தோப்புக்கரணம் போடுவது குறித்து புராண நிகழ்ச்சி ஒன்று கூறப்படுகிறது.

ஒருமுறை விநாயகர் தனது மாமா மகாவிஷ்ணுவின் சக்கரத்தை விளையாட்டாக பிடுங்கி தன் வாயில் போட்டுக் கொண்டுவிட்டார். அதிர்ந்துபோனார் மகாவிஷ்ணு.

விநாயகர் பலம் பொருந்தியவர். அவரை மிரட்டி சக்கரத்தை வாங்க முடியாது. அவரை சிரிக்க வைத்து அவர் வாயிலிருந்து சக்கரம் விழுந்தால் சக்கரத்தை எடுத்துக் கொண்டுவிடலாம் என்று மகாவிஷ்ணு ஐடியா போட்டார்.

தன் நான்கு கைகளாலும் காதுகளை பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போட்டார். இதைப் பார்த்த விநாயகருக்கு சிரிப்புத் தாங்கவில்லை. விழுந்து விழுந்து சிரித்தார் விநாயகர். அப்போது வாயிலிருந்த சக்கரம் வெளியே வந்து விழுந்தது. மகாவிஷ்ணு சக்கரத்தை எடுத்துக் கொண்டு விட்டார்.

தோப்புக்கரணம் போட்டதால் மகாவிஷ்ணுவுக்கு அவரது பொருளைத் திருப்பித் தந்தார். அதேபோல நாமும் தோப்புக்கரணம் போட்டால் விநாயகர் வேண்டிய வரத்தை அருள்வார் என்பது நம்பிக்கை.

## அருகம்புல் மகாத்மியம்

விநாயகர் பூஜையின்போது பூக்களுடன் அருகம்புல்லும் கட்டாயம் இடம்பெறும்.

'அனலாசுரன்' என்ற அசுரனை விநாயகர் விழுங்கி விட்டார். அனலாசுரன் பெயருக்கு ஏற்றார்போல் அனலாக, தீயாக கொதிக்கக்கூடியவன். அனலாசுரனை விழுங்கிய பின் அந்த அனலை தணிக்க அருகம்புல்லை விழுங்கினார் விநாயகர்.

அருகம்புல் குளிர்ச்சியானது. அருகம்புல்லை விழுங்கி அனாசுரனை விழுங்கியதால் ஏற்பட்ட சூட்டைத் தணித்துக் கொண்டார். இதனால் விநாயகர் பூஜையில் அருகம்புல் சிறப்பான இடம்பெறுகிறது.

பூ இல்லாவிட்டாலும் கூட அருகம்புல் வைத்து பூஜை செய்தால் போதுமானது. அருகம்புல் மூலம் விநாயகரின் வயிற்றைத் தடவிக் கொடுப்பதை பல விநாயகர் கோவில்களில் பார்க்கலாம். அதற்கு காரணமும் அனசுரனை விழுங்கிய சூடு தணிய வேண்டும் என்பதற்காகத்தான்.

## விநாயகர் உருவம் சொல்வது என்ன?

*ஐந்து கரத்தனை யானை முகத்தனை*
*இந்து இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.*

விநாயகர் அமர்ந்திருக்கும் கோலத்தை நோக்கும்போது ஓம் என்ற எழுத்து போல் தோன்றும். இதனால் இவரை ஓம்கார ஸ்வரூபி என்று வணங்கப்டுகிறார்.

அவரது உடலின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு கருத்தைச் சொல்கின்றன.

விநாயகரது பெரிய தலை நன்கு சிந்தனை செய்யவேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது.

விநாயகரது பெரிய காது எல்லா விஷயத்தையும் கூர்ந்து கேட்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது.

இவரது சிறிய கண்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது.

இவரது கையில் இருக்கும் கோடாலி உலக பந்தங்கள் அனைத்தும் வெட்டி எறியப்பட்டு முக்தி அடைய வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

இவரது மற்றொரு கையில் இருக்கும் கயிறு நம்மை இறைவனுக்கு அருகில் இழுத்துச் செல்கிறது.

இவரது சிறிய வாய் குறைவாக பேசி நிறைய சாதிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

இவரது ஒரு தந்தம் நாம் நல்லதை மட்டும் வைத்திருந்தால் போதும் கெட்டதை இழப்பதில் தவறில்லை என்பதைக் காட்டுகிறது.

ஆசி வழங்கும் இவரது கரங்கள் நம்மை என்றும் ஆசிர்வதித்து நம்மை நல்வழிப் படுத்துகிறது.

இவரது தும்பிக்கை நமக்கு திறமையை தருகிறது.

இவரது பெரிய வயிறு நல்லதையும், கெட்டதையும் எல்லாவற்றையும் ஜீரணித்துக் கொண்டு, இரண்டையும் ஒன்று போல் பாவிக்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

## விநாயக லீலை : புராணகதை

*வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்*
*மாமலராள் நோக்குண்டாம் - மேனிநுடங்காது*
*பூக்கொண்டு துப்பார்க்குத்துறைமேனி*
*தும்பிக்கையான் பாதம்*
*தப்பாமற் சார்வார் தமக்கு.*

தேவர்கள் துயர் துடைக்க விநயாகர் கஜமுகன் என்ற அரக்களை அழித்ததால் அவர் கஜானன கணபதி என்று அழைக்கப்படுகிறார்.

இது குறித்து புராணக்கதை கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ளது.

யானைத் தலையை கொண்ட கஜமுகன் என்ற அரக்கன் தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். அவனை அழிக்க வேண்டும் என்று தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

சிவபெருமான் விநாயகரை அழைத்து கஜமுகளை அழிக்குமாறு பணித்தார். சிவபெருமான் அளித்த பூதகணங்களுட்ன சென்று கஜமுகனுடன் கடும் போரிட்டு அவனை அழித்தார் விநாயகர்.

விநாயகர் கஜமுகனை அழித்ததற்கு பிரதிபலனாக சித்தி, புத்தி என்ற தேவ கன்னியரை அவருக்கு மணம் செய்வித்து தேவர்கள் விநாயகரை வணங்கினர்.

நினைத்த காரியம் நிறைவேறுவதுதான் சித்தி, புத்தி என்றால் அறிவு. விநாயகரை வழிபடுவோருக்கு நினைத்த காரியம் கைகூடும். அறிவும், ஞானமும் பெருகும். இதனால் விநாயகருக்கு பாலச்சந்திரன் என்ற பெயரும் உண்டு.

புகை வடிவில் தோன்றிய அரக்கனை கொன்றதால் விநாயகருக்கு தூமகேது என்ற பெயர் ஏற்பட்டது.

## ஏன் யானை முகத்தான்?

விநாயகருக்கும் யானை முகம் வந்தது எப்படி? இதற்கான புராணக் கதை உண்டு.

பார்வதிதேவி பூஜை ஒன்றில் ஈடுபட்டிருந்தார். அந்தப் பூஜை முடியும்வரை அவர் எழுந்திருக்கக் கூடாது. அந்த பூஜையின்போது யாருடைய தலையீடும் இருக்கக்கூடாது என்பதற்காக அவர் விநாயகரைப் படைத்தார்.

யார் வந்தாலும் உள்ளே விடவேண்டாம் என்று விநயாகரிடம் கூறிவிட்டு பூஜையில் அமர்ந்தார் பார்வதி.

பார்வதியின் ஆணைப்படி காவற் பணியில் ஈடுபட்டார் பாலகனான விநாயகர்.

பார்வதிதேவியைக் காண பிரம்மா வந்தார். விநாயகர் உள்ளேவிட மறுத்துவிட்டார்.

யாரும் பார்வதிதேவியை பார்க்க முடியாது என்று கூறி பிரம்மாவுக்கு அனுமதி மறுத்தார். பிரம்மன் கம்பீரமாக 'நான் படைப்புக் கடவுள் பிரம்மா' என்றார். என்னை படைத்தவர் பார்வதி அவர் கட்டளைப்படிதான் நான் செயல்படுவேன். யாரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்பது அவர் ஆணை' என்று கூறி பிரம்மனை பார்வதிதேவியைப் பார்க்க அனுமதிக்க முடியாது என்றுகூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

தேவர்கள், முனிவர்கள் எல்லாருக்கும் இதே பதில்தான். அனைவரும் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் வந்தார். அவருக்கும் அனுமதி மறுத்தார் விநாயகர்.

கோபம் பொங்கியது சிவபெருமானுக்கு, விநாயருடன் போரிடத் துவங்கினார். முடிவில் விநாயகரின் தலையை துண்டித்தார்.

இந்நிலையில் பூஜை முடிந்து வெளியே வந்த பார்வதி நடந்ததை உணர்ந்தார். சிவபெருமானிடம் தான் விநாயகரை படைத்ததையும் தான் இட்ட கட்டளையையும் கூறினார்.

உண்மையை உணர்ந்த சிவபெருமான் தேவர்களுக்கு ஒரு கட்டளையிட்டார். உலகெங்கும் சென்று தேடுங்கள். யார் வடக்கு பக்கம் தலை வைத்து படுத்திருக்கிறார்களோ அவர் தலையை வெட்டி எடுத்து வந்து விநாயகருக்கு பொருத்துங்கள் என்றார்.

தேவர்கள் தேடிக்கொண்டு சென்றபோது. யானை ஒன்றுதான் வடக்கே தலை வைத்துப்படுத்திருந்தது. அதன் தலையை வெட்டி விநாயகருக்குப் பொருந்தினர். இதுதான் விநாயகருக்கு யானை முகம் வந்த கதை.

## சனியை ஏமாற்றி விநாயகர்

*அல்லல் போம் வல்வினை போம்*
*அன்னை வயிற்றில் பிறந்த தொல்லை போம்*
*போகாத் துயரம் போம்*
*நல்ல குணமதிக மாமருகனை*
*கோபுரத்தின் மேலிருக்கும்*
*செல்வ கணபதியை கை தொழுதக்கால்.*

நவக்கிரகங்களில் சனி போல் கொடுப்பவரும் கிடையாது. கெடுப்பவரும் கிடையாது.

மனித வாழ்வில் மூன்று முறை ஏழரை நாட்டுச்சனி என்று அழைக்கப்படும் ஏழரை ஆண்டு சனி தசை வரும். மனிதர்களுக்கு ஏழரை ஆண்டு என்பது போல் சனி தசை தேவர்களுக்கு ஏழரை மாதம், கடவுள்களுக்கு ஏழரை நாள்.

கடவுள்களையும் விட்டு வைப்பதில்லை சனீஸ்வர பகவான். அவர் விநாயகரை பிடிக்க வேண்டிய காலம் வந்தது. விநாயகரை பிடிக்க வந்தார் சனீஸ்வரன். விநாயகரை வந்து வேண்டினார் சனீஸ்வரன். 'விநாயகப் பெருமானே என் கடமைப்படி நான் உங்களை ஏழரை நாட்கள் பிடித்திருக்க வேண்டிய காலம் இது. அதற்கான பலன்களையும் நீங்கள் அனுபவிக்க வேண்டும். என் கடைமையைச் செய்ய நீங்கள் அனுமதிக்க வேண்டும்' என்றார்.

விநாயகர் மறுக்கவில்லை 'நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். நான் என் தாயிடம் சென்று நீங்கள் என்னை பிடிக்கவிருப்பதை சொல்லிவிட்டு வருகிறேன். நீங்கள் நாளை என்னை பிடித்துக் கொள்ளலாம். என் முதுகில் இன்றுபோய் நாளை வருகிறேன் என்று எழுதிவிட்டுச் செல்லுங்கள்' என்று கூறினார்.

சனீஸ்வரனும் விநாயகர் முதுகில் இன்று போய் நாளை வருகிறேன் என்று எழுதி விட்டுச் சென்றுவிட்டார்.

மறுநாள் தான் கூறியபடியே சனீஸ்வரன் வந்தார். 'என் முதுகில் என்ன எழுதியிருக்கிறீர்கள் படியுங்கள்' என்றார் விநாயகர். இன்று போய் நாளை வருகிறேன் என்று கூறினீர்கள். இன்று போய் நாளை வாருங்கள் என்று அவரை அனுப்பி வைத்தார்.

மறுநாள் வந்தார் சனீஸ்வரர் முதல் நாள் கதையே அன்றும் தொடர்ந்தது. ஏழாவது நாள் சனீஸ்வரன் இன்று போய் நாளை வருகிறேன் என்று படித்ததும், விநாயகர் 'நீங்கள் எழுதியதை நீங்களே அழித்துவிட்டு நாளை வாருங்கள்' என்றார்.

சனீஸ்வரனுக்கு ஒரே சந்தோஷம். நாளை விநாயகரைப் பிடித்துவிடலாம் என்று மகிழ்ந்தார். அவர் மனதில் நினைத்ததைப் புரிந்து கொண்ட விநாயகர். 'சனீஸ்வரரே நீங்கள் கூறிய 7 நாட்கள் இன்றோடு முடிந்துவிட்டது. நாளை நீங்கள் என்னைப் பிடிக்கமுடியாது' என்று கூறினார்.

சனீஸ்வரன் தோல்வியுடன் திரும்பினார். சனீஸ்வரனையே ஏமாற்றியவர் விநாயகர். விநாயகரை பிரார்த்திப்போரை சனி தசையும் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

**விநாயகர் சதுர்த்தி - பூஜை முறைகள்**

விநாயகர் சதுர்த்தி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

அன்றைய தினம் களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் பொம்மைகள் கடைவீதிகளில் விற்கப்படும். சிறியதும், பெரியதுமான விநாயகர் பொம்மைகள் விற்கப்படும். அவற்றை வாங்கி வந்து வீட்டில் பூஜை அறையில் வைக்கப்பட்டு அவை பூஜிக்கப்படும்.

விநாயருக்கு முக்கியமான நிவேதனம். கொழுக்கட்டை என்று அழைக்கப்படும் மோதகம். இது அரிசி மாவில் கூடு செய்யப்பட்டு அதனுள் வெல்லம் போட்ட இனிப்பு பூரணமும், உளுத்தம் பருப்பு போட்ட பூரணமும் போடப்பட்டு இனிப்பு கொழுக்கட்டையுட், உளுந்து கொழுக்கட்டையும் வேக வைத்து நிவேதனம் செய்யப்படும்.

இது தவிர பழங்களும் நிவேதனம் செய்யப்படும். விநாயகருக்கு எருக்கம் பூ மாலை மிகவும் உகந்தது.

பூஜையில் எல்லா விதமான பூக்களையும் பயன்படுத்தலாம். விநாயகரை சதுர்த்தி தினத்தன்று மட்டும் விநாயகர் பூஜையில் துளசி சேர்த்துக் கொள்ளப்படும்.

ஏன் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று மட்டும் துளசி பூஜையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது? இதற்கான புராணக்கதை.

துளசி தேவி விநாயகரை மணக்க வேண்டும் என்று கடுந்தவம் புரிந்தாள். நீ விஷ்ணுவுக்குத்தான் மனைவியாக வேண்டும் என்று விநாயகர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் துளசி தேவி கேட்கவில்லை. விநாயகரை மணக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாள்.

விநாயருக்கு கடும் கோபம் வந்தது. நீ செடியாக மாறுவாயாக! என நித்திய பூஜைகளுக்குச் சேரும் தகுதியையும் நீ இழக்கிறாய்! என்று சாபமிட்டார்.

பின்னர் துளசியின் மேல் இரக்கம் கொண்டு நீ செடியாக பூமியில் இருக்கும் காலத்தில் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று மட்டும் மற்ற மலர்களைப் போல் துளசியும் சேர்த்துக் கொள்ளப்படும் என்று அருளினார்.

இதனால் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று மட்டும் துளசி பூஜைக்கு சேர்த்துக் கொள்ளப்படும். மற்றபடி தினசரி பூஜைகளில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

விநாயகர் சதுர்த்தியன்று வீடுகளில் மாவிலை தோரணங்கள் கட்டப்பட்டு, மாக்கோலங்கள் போடப்பட்டு விநாயகருக்கு பூஜை செய்யப்படும், நிவேதனத்தில் கொழுக்கட்டை, பழங்கள் தவிர பச்சரிசி மாவினால் செய்யப்பட்ட இட்லியும் முக்கியமானதாகும். விநாயகர் சதுர்த்தி தினத்தன்று அனைத்து விநாயகர் கோவில்களிலும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

பிரணவநாதனின் பெருமைகள் பலவுண்டு. அவற்றில் ஒருசில பணிவுடன் தொகுத்தழித்த இவனின் தொகுப்பில் பிழையிருப்பின் மன்னிக்கவும்....

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

❑ ❑ ❑

உ
சிவமயம்

# அல்லல்கள் போக்கிடும் ஆஞ்சநேயர்!

**A. S. இராதாகிருஷ்ணன்**
*B.A., Dip in Edu.*
*ஆசிரிய ஆலோசகர்.*

*''அஸாத்ய ஸாதகஸ்வாமின் அஸாத்யம் தவகிம்வத*
*ராம தூத தயாஸிந்தோ மத் கார்யம் ஸாதயப்ரபோ''*

**அ**ஞ்சனை மைந்தனை மனதில் நிலைநிறுத்தி இவ் இருவரிச் சுலோகத்தை உள்ளன்போடு உச்சரித்தபின் எந்தவொரு காரியத்தைத் தொடங்கினாலும் அக்காரியம் வெற்றிமேல் வெற்றிபெறும் என்பது அசையாத நம்பிக்கை. வேண்டியவர்க்கு வேண்டிய பொழுதினிலே. இலகுவாக வந்து சகல சௌபாக்கியங்களையும் அளிக்கவல்ல தெய்வம் ஆஞ்சநேயப் பெருமான். ஆஞ்சநேயரைப் பலநாமங்கள் கொண்டு அழைக்கலாம். அனுமார், மாருதி, அஞ்சனை, திருக்குமரன், அஞ்சனைச் செல்வன், ஸ்ரீராம தூதன், வாயுகுமாரன், வாயுபுத்திரன், வாதஜாதன், கேசரிநந்தன், ஞானகுணசேகரன், பஜாங்கி, மஹாவீர் எனப் பல நாமங்களால் அழைக்கப்படுகின்றார்.

ஆஞ்சநேயப் பெருமானின் தாய் அஞ்சனை, தந்தை வாயுதேவன். ஆஞ்சநேயப் பெருமானின் தோற்ற வரலாறு ஆச்சரியம் மிக்கதும் சுவாரஸ்யம் நிறைந்ததுமான விடயங்களை உள்ளடக்கி யுள்ளது. அழகும் துடிப்பும்மிக்க தேவலோகத் தேவதையான 'அப்சரா' என்ற பெண் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் தவத்தில் ஈடுபட்டிருந்த ரிஷி ஒருவரை நிந்தித்துப் பேசிய காரணத்தால் கோபம் கொண்ட அந்த ரிஷி அப்சராவுக்கு சாபம் அளிக்க அவள் சாபத்தின் விளைவாய் 'அஞ்சனா' என்கின்ற வானரப் பெண்ணாக மாற்றம் பெற்றுப் பூலோகத்தை வந்தடைந்தாள். காட்டில் தனித்து வாழ்ந்துவந்த அந்த வானரப் பெண்ணை வாயு பகவான் மணந்து கொண்டார். புத்திரப் பேற்றினை வேண்டி யாகத்தினை மேற்கொண்ட அயோத்தி மன்னன் தசரதனுக்கு வேள்விப் பிரகாரத்தினின்றும் அமுது கிடைக்கப் பெற்றது. கிடைத்தற்கரிய அவ் அமுதத்தினை தனது மனைவியர் மூவருக்கும் பகிர்ந்தளித்தார். முதலில் கோசலைக்கும் அடுத்து சுமித்திரைக்கும் இறுதியில் கைகேயிக்கும் உண்ணும்படி தசரத மன்னன் கொடுத்தார். தன் பங்கை இறுதியாகக் கொடுத்துத் தன்னை அவமானப்படுத்தி விட்டதாக எண்ணிய கைகேயி அவ் அமுதினை வீசி எறிந்தாள். எனினும் பின்னர் தன் தவறினை உணர்ந்து மன்னிப்புக்கோரியதால் தசரதனின் மற்றைய மனைவியரைவிட கைகேயி காலந்தாழ்த்தித் தாய்மையடைந்தாள். கோசலை இராமனையும், சுமித்திரை லட்சுமணன், சத்துருக்கன் என்ற இரட்டையரையும், பின்னர் கைகேயி பரதனையும் பெற்றெடுத்தனர். இதேவேளையில் யாகத்தின் மூலமாய்க் கிடைத்த அமுதினை கைகேயி விட்டெறிந்தபோது அதனை ஓர் காகம் பற்றிக்கொண்டது. அமுதினைப் பற்றிக் கொண்ட காகம் காட்டுவழியாகப் பறந்துசென்று கொண்டிருந்த வேளையில் அதனது வாயிலிருந்த அமுதம் தவறி காட்டில் வாழ்ந்து வந்த அஞ்சனாவின் கைகளில் விழுந்தது. அஞ்சனாவின் அருகிலிருந்த கணவனாகிய வாயுபகவான் தன் மனைவியிடம் அதனை வீசவேண்டாம் என்றும் அதனை உண்ணும்படியும் பணித்தார். அதனை உண்ட அஞ்சனாவும் கருவுற்றாள். அக்குழந்தையே ஆஞ்சநேயர் என்கின்ற அனுமான் என புராணவரலாறு கூறுகின்றது.

அனுமார் தனது இளமைக் காலத்தில் ஓர்நாள் தன் தாயாரிடம் பசிக்குது எனக்கூறினார். அச்சமயம் அஞ்சனா என்ன சூழ்நிலையில் இருந்தாரோ தெரியாது அங்கே தெரிந்த சூரியனைக்காட்டி அங்கே பார் மகனே! மஞ்சள் நிறத்தில் நன்கு பழுத்த கனியொன்று தெரிகிறதல்லவா? வேண்டுமானால் அதை எடுத்துச் சாப்பிட்டுக்கொள் என்று விளையாட்டாகக் கூறினாள். அதனைக்கேட்ட அனுமாரும் சூரியனைப் பிடிக்க முயன்றார். சூரியபகவான் பாலகன் அனுமாரின் பிடியில் இருந்து தப்ப ஓட்டம் பிடித்தார். அனுமாரும் துரத்திச் சென்றார். வழியில் ராகு பகவான் குறுக்கிடவே ஆஞ்சநேயர் அவரிடம் விடயத்தைக் கூறினார். பின்னர் இருவருமாக சூரியபகவானிடம் சம்பவத்தைத் தெளிவுபடுத்தினர். நிகழ்ந்தவைகள் அனைத்தையும் கேள்வியுற்ற ஏனைய தெய்வங்களும் அங்கு கூடினர். ஒரு சிறுவன் சூரியபகவானைத் துரத்துவதா எனக் கோபம் கொண்ட இந்திரன் இடி மின்னலைக் கூட்டி ஆஞ்சநேயர் மேல்விழச் செய்து அவரின் எலும்பை முறித்துக் காயப்படுத்தி விட்டார். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த ஆஞ்சநேயரின் தந்தையாகிய வாயுபகவான் கோபம்கொண்டு அனைத்துத் தெய்வங்களையும் தண்டிக்க எண்ணி அவர்களின் உடலுக்குள் வாயுரூபத்தினுள் புகுந்து அனைவரின் வயிற்றிலும் வலியொன்றினை ஏற்படுத்தினார். அப்பொழுதுதான் சிறுவன் யாரென்ற உண்மையைப் புரிந்து கொண்ட இந்திரபகவான் வாயுபகவானிடம் தனது தவறினை ஒப்புக்கொண்டு மன்னிப்புக்கோரியதுடன் ஆஞ்சநேயருக்கு வரமொன்றினை அளிப்பதாகவும் உறுதியளித்தார். இதன்படி ஆஞ்சநேயருக்கு இந்திரபகவானால் சாகாதவரமாகிய 'சிரஞ்சீவி' வரம் அளிக்கப்பட்டது. ஆஞ்சநேயருக்கு சிரஞ்சீவி வரம் அளிக்கப்பட்டதனை அங்கிருந்த ஏனைய தெய்வங்களும் ஆமோதித்து வரவேற்றனர்.

பிரம்மாவின் புத்திரர்களில் ஒருவன் ஜம்பவான். அவன் ஆஞ்சநேயரின் குழந்தைப் பருவத்தினைப் பக்குவம் பெறவைக்கத் திருவுளம் கொண்டான். ஆஞ்சநேயரை ஆசீர்வதித்து அருள்புரிந்தான். ஜம்பவானின் ஆசீர்வாதம் காரணமாக ஆஞ்சநேயருக்குச் செயற்கரிய செயல்கள் அனைத்தையும் செய்யவல்ல சக்தி கிடைத்ததாக வரலாறுகள் சான்று பகிர்கின்றன. இதனை உறுதி செய்யும்வகையில் இராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் ஸ்ரீ அனுமான் புகழ்மாலையைப் பாடி ஜம்பவான் ஆஞ்சநேயரை ஆசீர்வதித்தார் எனக் கூறப்படுகின்றது. தந்தையாகிய வாயு தேவனிடமிருந்து ஆஞ்சநேயர் பறக்கும் சக்தியையும், தனது தோற்றத்தைப் பெரிதாகவும், சிறிதாகவும் உருமாற்றம் செய்யும் சக்தியையும் வரமாகப் பெற்றுக் கொண்டார்.

ஆஞ்சநேயர் கந்தமாதன பர்வத மலையிலிருந்து புறப்பட்டு, 'சுரசை' என்னும் அரக்கியை வெற்றி கொண்டு இலங்கையின் காவல் தெய்வமாகிய இலங்கினியை அடக்கி அன்னை சீதையை அசோகவனத்தில் கண்டுபிடித்து கணையாழியைக் கொடுத்து அந்த அசோகவனத்தையே அழித்து பிரம்மாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு தன்வாலில் வைத்த தீயால் இலங்கையை எரித்து மீளத் திருப்பி இராமபிரானிடத்து சூடாமணியைத் தந்து 'கண்டனன் சீதையை கண்களால்' என்று இராமபிரானை வணங்கித் துதித்த இராமதூதுவன் ஆஞ்சநேயர். இராவணனால் கவரப்பட்ட சீதையை மீட்க இராம, வானரசேனைகளுடன் இலங்காபுரி நோக்கிப் பயணித்து இலங்காபுரிக்கு பாறைகள் கொண்டு பாலமமைத்து வழிகண்ட அனுமார் இராவண யுத்தத்தின் பொழுது இராவணன் புத்திரனாம் இந்திரஜித் ஏவிய பிரம்மாஸ்திரத்தால் மயங்கி விழுந்த இலக்குமணனையும், வானர சேனைகளையும் காத்திட ஜம்பவான் ஆணையின் பிரகாரம் சிரஞ்சீவி மலையினைப் பெயர்ந்து வந்து அனைவரையும் மூச்சுத் தெளிய வைத்த பெருமைக்குரியவர். ஆஞ்சநேயப் பெருமான் இராமபிரானுக்கே இராமநாமத்தின் மகிமையை தெளியவைத்த இராமபக்தன் அனுமான் ஆவார். ஆஞ்சநேயர் மனம் புனிதம் நிறைந்தது. எவ்விதமான ஆசாபாசங்களுமின்றி ஐம்புலன்களையும் அடக்கி ஸ்ரீ ராமசந்திரமூர்த்திக்கு தொண்டு செய்வதிலேயே தனது முழுச் சரீரத்தையும் அர்ப்பணித்தபிரான் அனுமார் ஆவார். தன்னை வணங்கும் பக்தனையே கரம்கூப்பி வணங்கிடும் ஒரே தெய்வம் அனுமார். எமது உருக்கமான வேண்டுகோளினை ஏற்றுக்கொண்டு பலனைத் தருவதுடன் நாம் செய்த பாவச்செயல்களை மன்னித்து அருள்பாலித்திடுபவரும் இவரே ஆவார்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஒரே பகல் பொழுதினில் சூரிய பகவானிடம் கற்றுத்தேறிய புத்திமான் அனுமான் ஆவார்.

இத்துணை சிறப்பு வாய்ந்த ஆஞ்சநேயரை மெய்யன்புடன் துதித்து வழிபட்டால் இம்மைப் பயன்களையும், மறுமையின்பத்தினையும் பெற்றிடலாம். சனி பகவானின் தாக்கங்களினின்றும் தப்பிய பெருமைக்குரிய கடவுள்கள் இருவர். அவர்கள் விநாயகரும் அனுமானுமேயாகும். ஆஞ்சநேயர் தனது நீண்ட வாலினால் நவக்கிரகங்கள் அனைத்தையும் கட்டினுள் வைத்துள்ளார். அனைத்துக் கிரகங்களும் ஆஞ்சநேயப் பெருமானின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. மானிடர்கள் கிரகதோஷங்களினாலும் அவற்றின் தாக்கங்களினாலும் துன்பங்களை அனுபவிக்கும் வேளையில் ஆஞ்சநேயரை மனதார வழிபடுமிடத்தில் அந்தக் கிரகங்களின் தாக்கங்கள் அனைத்தையும் தானே தாங்கிக் கொண்டு அந்தப் பக்தனை கிரக தோஷங்களிலிருந்து மீட்டிடும் அருள்வள்ளல் ஆவார்.

ஆஞ்சநேயரை வணங்கி பூஜை வழிபாடு செய்துவர புத்தியும், சக்தியும் ஒருங்குசேரக் கிடைக்கப்பெறும். அவரை மனதில் எண்ணிய மாத்திரத்தினிலேயே எண்ணிய பலன் கிடைத்திடும். தூய அன்புடன் ஆசாபாசங்களைத் துறந்து மெய்யன்புடன் அவரை அனுதினமும் துதித்து வழிபட்டு வந்தால் இலகுவில் மனமிரங்கி அருள்நல்கிடும் தெய்வம். ஆஞ்சநேய சுவாமிகளின் உபாசகரான 'ஸ்ரீதுளசிதாஸர்' அருளிய ஹனுமான் சங்கட மோட்சன அஷ்டகம்' என்னும் பதிகத்தை பக்தியோடுபாடி வருதல் சிறப்பாகும். வெற்றிகளைத் தருகின்ற வெற்றிலை மாலையையும், துன்பங்கள் துடைக்கின்ற துளசியிலை மாலையையும் கொண்டு ஆஞ்சநேயரைப் பூசித்து வந்தால் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நல்ல பலனினைப் பெற்றிடலாம். ஆஞ்சநேயப் பெருமானுக்கு மிகவும் பிடித்தமானது நெய்விளக்கு ஆராதனையாகும். இவருக்கு வடைமாலை சாத்தி வணங்கும் வழக்கமும் உண்டு. இராம பக்தரான அனுமானுக்கு இஷ்டமானது இராம நாமமாகும். இராம நாமத்தினைப் பிரியமுடன் ஓதித் துதித்திடின் ஆஞ்சநேயரும் அகமகிழ்ந்து துதித்திடும் பக்தனுக்கு அருள்பாலித்திடுவார். ஆஞ்சநேயரை குருவாக துதித்திடின் தேகபலம், புத்திபலம், காரிய சாமார்த்தியம், பக்திபலம், பயமின்மை, சேவை மனப்பாங்கு, புலனடக்கம், கல்வி விநயம் என அருஞ் செல்வங்களை அள்ளி வழங்கிடுவார்.

ஆஞ்சநேயர் மகிழ்ச்சிமிக்க சூழ்நிலையில் காணப்படும் பொழுது அவரை பிசன்ன ஆஞ்சநேயர் என்றும், போர்க்காலங்களில் குரூரம் மிக்க சூழ்நிலையில் வீர ஆஞ்சநேயர் என்றும், தியானத்திலீடுபடும்போது தய ஆஞ்சநேயர் என்றும், பக்திப் பரவசத்தில் மூழ்கியுள்ள பொழுது பக்த ஆஞ்சநேயர் என்றும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப பலவிதமாகச் சிறப்பித்தழைக்கப்படுகின்றார். மார்கழி மாதம் மூல நட்சத்திரத்துடன் கூடிய அமாவாசைத் தினத்தன்று ஆஞ்சநேயர் அவதரித்தார். அன்றைய தினத்தில் ஆஞ்சநேயர் ஆலயங்களில் ஆஞ்சநேயர் ஜயந்தி தினம் சிறப்பாக விசேட அபிஷேக ஆராதனைகளுடன் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நமது நாட்டில் புகழ் பெற்ற ஆஞ்சநேயர் ஆலயங்களாக தெஹிவளை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம், இரம்பொடை ஆஞ்சநேயர் ஆலயம், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயங்களைப் பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.

எல்லாத் துன்பங்களையும் போக்கி சகல சௌபாக்கியங்களையும், ஐஸ்வர்யங்களையும் அள்ளிவழங்கிடும் ஆஞ்சநேயப் பெருமானை தினம் வியாழக்கிழமைகள் தோறும் வெற்றிலை மாலை சாத்தியும் நெய் விளக்கேற்றியும் மெய்யன்புடன் துதித்து வந்தால் வல்லவினைகள் அகன்று ஓடிடும். தேக பலமும் மனத்திடமும் புத்தி சாதுரியமும் பெருகிடும். ஆஞ்சநேயப் பெருமானை சரணாகதி அடைந்து வாழ்வில் உய்வு பெறுவோம்.

*''அனுமானைப் பணிவோம் அனைத்தும் பெறுவோம்''*
*''ஆஞ்சநேயனைப் பணிவோம் ஆற்றலைப் பெறுவோம்''*

❑❑

உ

சிவமயம்

# திருவிளக்கு வழிபாடு

ஆக்கம் : **செல்வி ஜெயந்தி ராமதாஸ்**
*க/பாரதி தமிழ் மகா வித்தியாலயம்,*
*வத்துகாமம்.*

**தி**ருவிளக்கு வழிபாடு இந்து சமயத்தில் உன்னதமான வழிபாடாகும். உலகெலாம் நிறைந்து விளங்கும் இறைவனை - இறைவியை நம் இல்லத்தில் எழுந்தருளச் செய்ய திருவிளக்கு வழிபாடு துணை புரியும்.

வேத ரிஷிகள் ஹோமத் தீ வளர்த்து இறைவனை வழிபட்ட மரபைத் தழுவி எழுந்ததே திருவிளக்கு வழிபாடு. வீடு என்று சொன்னால் அங்கு விளக்கு எரியவேண்டும்.

''உடம்பெனும் வீட்டில் உள்ளத்தை தகளியாக்கி, உணர்வாகிய நெய்யை ஊற்றி உயிரைத் திரியாகத் திரித்து, ஞானத்தீயால் தீபம் ஏற்றினால், கடப்பந்தாரை அணிந்த முருகப் பெருமான் தந்தையாகிய பரமேஸ்வரனின் திருவடியைக் காணலாம்'' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பாசுரம் விளக்கும்.

''அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடு திரியாய் நன்புருகி ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு ஞானத்தமிழ் புரிந்த நான்'' என்று பூதத்தாழ்வார் பாசுரம் பேசுகிறது.

நாம் வாழும் பிரபஞ்சம் பஞ்ச பூதங்களால் ஆனது. நம்முடைய உடற்கூடு ஐம்பொறிகளால் இயக்கம் பெறுவது. நமது கை, கால்களிலும் ஐந்தைந்து விரல்கள் அமையப் பெற்றிருக்கின்றன.

அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசிதம், சகிப்புத்தன்மை இவை ஐந்தும் தாய்மார்களுக்கு இருக்கவேண்டிய உன்னதமான பண்புகள் என்று நம் முன்னோர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

எனவே நம் முன்னோர் மானுட வாழ்வில் ஐம்பொறிகளையும் தம் வசப்படுத்த, ஒளிபெறச் செய்ய வேண்டும் என்ற கருத்தை விளக்கவே ஐந்து முகமுடைய குத்துவிளக்கை உருவகித்து உவந்திருக்கிறார்கள்.

இருளைப் போக்க ஒளியேற்றுவதோடு, மன இருளை அகற்ற உள் ஒளியையேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடே திருவிளக்கு ஏற்றுவது; பகலிலும் விளக்கேற்றி வழிபாடு செய்யும் பழக்கம் ஏற்பட்டது. இந்து சமயத்தில் விளக்கேற்றாத வழிபாடு இல்லை. நல்ல காரியமானாலும் அல்லாத காரியமானாலும் திருவிளக்கு ஏற்றியாக வேண்டும் என்ற நியதி ஏற்படுத்தப்பட்டது.

''இல்லக விளக்கது இருள் கெடுப்பது, சொல்லக விளக்கது சோதியுள்ளது'' என்று அப்பர் பெருமானும், ''சோதியே சுடரே சூழ் ஒளியே விளக்கே'' என்று மாணிக்கவாசகரும், ஒளிவளர் விளக்கே உவப்பில்லா ஒன்றே எனத் திருவிசைப்பாவும், விளக்கினை ஏற்றி

வெளியை அறமின், விளக்கினின் முன்னே வேதனை மாறும் என்று திருமந்திரமும் வையகம் தகளியாய் வார்கடலே நெய்யாக வெய்யக் கதிரோன் விளக்காக ஏற்றிச் செந்தமிழ் மாலை பாடி இடராழி நீங்குகவே என்று பொய்கையாழ்வாரும் ஞான விளக்கேற்றி போற்றி வழிபட்டு வழி காட்டியிருக்கிறார்கள்.

திருத்தொண்டர்களில் நம் நந்தியடிகளும், கணம் புல்லரும், கலிய நாயனாரும் திருக்கோயிலில் திருவிளக்கு ஏற்றியே முக்தி பெற்றிருக்கிறார்கள்.

வேதாரண்யம் வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் விளக்கு சற்று மங்கலாக எரிந்து கொண்டிருந்த பொழுது விளக்கில் இருக்கும் நெய்யை உண்ணுவதற்காக சென்ற எலி தனது மூக்கினால் திரியை அப்பால் நகர்த்தி விடதீபம் சுடர் விட்டு எரிந்ததாம், எலியின் செயல் எப்படியிருந்தபோதும் தீபம் சுடர் விட்டு எரியச் செய்த கைங் கரியத்திற்காக அந்த எலியை இறைவன் அடுத்த பிறவியில் மகாபலி சக்ரவர்த்தியாகப் பிறக்கச் செய்தார் என்று அப்பர் சுவாமிகள் திருக்குறுகை பதிகத்தில் எட்டாம் திருப்பாட்டில் தெரிவிக்கிறார்.

*''நிறை, மறைக் காடுதன்னில் நீண்டெலி*
*தீபந்தன்னை*
*கறை நிறத்து எலி தன்மூக்கு சுட்டிட*
*கணன்று தோன்ற*
*நிறைகடல் மண்ணும் விண்ணும்*
*நீண்டவான் உலகம்எல்லாம்*
*குறைவறக் கொடுப்பார் போலும்*
*குறுக்கை வீரட்டனாரே''*

கிராமங்களிலும், நகரங்களிலும், அன்றாடம் கோயிலுக்குச் சென்று திருவிளக்கு ஏற்றுவிப்பவர்களைக் காணலாம். கோயிலில் விளக்கேற்றி வைப்பதினால் கோடி புண்ணியம் கிடைக்கும் என்பது நம்மவர் நம்பிக்கை.

மாலை நேரங்களில் வாசல் தெளித்துக் கோலமிட்டு குத்துவிளக்கேற்றி மகாலட்சுமியை இல்லத்திற்கு எழுந்தருளச் செய்வதாகக் கருதி வீட்டிற்குள் குத்துவிளக்கை எடுத்துச் சென்று பாடித் துதித்து கற்பூரம் காட்டினால் லஷ்மி அந்த இல்லத்தில் நித்தியவாசம் செய்வாள். இது கிரக லஷ்மி பூஜை எனப்படுகிறது.

ஆலயங்களில் பலர் ஒன்றாகச் சேர்ந்து குத்து விளக்கு பூஜை செய்வது பிரசித்தி பெற்று வருகிறது.

குத்துவிளக்கு பூஜையில் ஸ்ரீலலிதா சகஸ்ரநாம அர்ச்சனை, ஸ்ரீ லஷ்மி அஷ்டோத்தரம், திருமுறைகளிலிருந்து தொகுக்கப்பெற்ற போற்றித் திருஅகவல் ஆகியவைகளால் துதிக்கப் பெற்று, குங்குமம், அட்ஷதைகளால் அர்ச்சிக்கப்பட்டு வருகிறது.

ஆலயங்களில் நடைபெறும் குத்துவிளக்கு பூஜை உன்னதமானது. பலர் கூடி ஒரே மனதுடன் பூஜை புரியும் போது தேவியின் இன்னருள் கிட்டுவது சுலபம்.

தாமே அர்ச்சித்துப் பழக குத்துவிளக்கு பூஜை நல்ல பயிற்சியைத் தருகிறது. ஆலயத்தில் வீற்றிருக்கும் அம்பிகையை அவரவர் இல்லத்திற்கு எழுந்தருளச் செய்ய இதைவிட வேறு உபாயம் இல்லை.

தாய்மார்கள் ஒன்று கூடி செய்யும் குத்து விளக்கு பூஜை ஒரு வேள்வி செய்வதற்கு ஒப்பாகும். உன்னதமானதும், உயர்வானதுமாகும்.

குத்துவிளக்கு பூஜை செய்யத் தொடங்கும் போது, விளக்கு வைக்கப்பட வேண்டிய நியதி, எண்ணெய், திரி, திசை இவைகளைத் தெரிந்து முறைப்படி செய்தால் விரும்பும் பலனைப் பெறலாம்.

## விளக்குப் பூஜை நியதிகள்

### வாழை இலை ஆசனம்

தலைவாழை இலை மீது குத்துவிளக்கை வைத்து பூசனை செய்யத் தொடங்க வேண்டும். இவ்வாறு வழிபடுவோர் குடும்பம் வாழையடிவாழையாக வையகத்தில் தழைத்தோங்கும், வழிபடுவோர் வாழ்வு பசுமையானதாகவும், பிறருக்கும் பயன் படுவதாகவும் அமையும்.

### பொட்டு இடுதல்

திருவிளக்கில் விபூதி, சந்தனம் அல்லது குங்குமம், உச்சியில் ஒரு பொட்டும் அதன் கீழ் மூன்றும் அதன் அடிகீழ் இரண்டும், அடியில் இரண்டுமாக எட்டு இடங்களில் பொட்டிட வேண்டும்.

உச்சியில் இடும் பொட்டு. நெற்றியில் இடுவதாகவும், அடுத்த மூன்று பொட்டும் முக்கண் முத்தீ (சூரியன் - சந்திரன் - அக்கினி) என்று கொள்ளவேண்டும். அடுத்த இரண்டு பொட்டுக்களும் கைகள். கீழே இடும் பொட்டு திருவடிகளாகக் கருதி இந்த எட்டு இடங்களில் பொட்டிடுவது தனிச் சிறப்புடையதாகும்.

***எவர் சில்வர் விளக்கு ஏற்றுவதற்கு உகந்தது அல்ல.***

எவர்சில்வர் விளக்கு, விளக்கு பூஜைக்கு உகந்தது அல்ல. வீடுகளில் கூட எவர் சில்வர் விளக்கு ஏற்றுவது நல்லதல்ல.

## விளக்கேற்றத்தக்க எண்ணெய்களும் அதன் பயன்களும்

விளக்கேற்றுவோர் இல்லத்தில் சகல செல்வங்களும் சுகமும் கிட்டும்.

**நல்லெண்ணெய்:**
சகல பீடைகளும் விலகும்.

**ஆமணக்கெண்ணெய்:**
பந்து சுகம், தாம்பத்திய சுகம் விருத்தியாகும்.

**கடலை எண்ணெய்:**
நாள்தோறும் கடன் தொல்லை தரும், துக்கம், பயம், பீடை முதலியவற்றை உண்டாக்கும், கடலை எண்ணெயில் விளக்கேற்றுவது வீட்டுக்கு நல்லதல்ல.

**குல தெய்வத்திற்கு:**
வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், பசுநெய் மூன்றும் கலந்து விளக்கேற்ற வேண்டும்.

**கணபதிக்கு:**
தேங்காயெண்ணெயால் விளக்கேற்ற வேண்டும்.

**மகாலஷ்மி:**
பசும் நெய்யால் விளக்கேற்ற வேண்டும்.

**நாராயணர்:**
நல்லெண்ணெய் விளக்கேற்ற வேண்டும்.

**ருத்திரர்:**
இலுப்பெண்ணெய் விளக்கேற்ற வேண்டும்.

**பராசக்தி:**
பசும்நெய்- விளக்கெண்ணெய் - வேப்பெண்ணெய் தேங்காயெண்ணெய் - இலுப்பெண்ணெய் ஆகிய ஐந்தும் கலந்து விளக்கேற்ற வேண்டும்.

**சர்வ தேவதைகளுக்கும்:**
நல்லெண்ணையால் விளக்கேற்ற வேண்டும்.

## விளக்கேற்றத்தக்க திரிகளும் அதன் பயன்களும்

**வாழைத் தண்டின் நாரினால் உருவாக்கப்பட்ட திரி.**
தெய்வக்குற்றம், பிதுர்சாபம் நீங்கி சாந்தி ஏற்படும்.

**பருத்தி பஞ்சினால் திரிக்கப்பட்ட திரி.**
நல்லவை அனைத்தும் செய்யும்.

**தாமரைத் தண்டின் நூலால் திரிக்கப்பட்ட திரி.**
முன்வினை பாபம் போக்கும். இருக்கும் செல்வம் நிலைத்து நிற்கச் செய்யும்.

**வெள்ளை எருக்கம் இலைப்பட்டையைத் திரித்த திரி.**
நிறை செல்வம் ஏற்படும். பேய் பிடித்தவர்களுக்கு அதன் தொல்லை தீரும்.

**புது மஞ்சள் சேலைத் துண்டால் செய்யப்பட்ட திரி.**
தேவியின் அருள்கிட்டும். வியாதிகள் குணமாகும். காற்றுச் சேட்டைகள் நீங்கும்.

**சிகப்புக் கலர் சேலைத் துண்டினால் திரிக்கப்பட்ட திரி.**
திருமணத் தடை நீங்கும், மலட்டுத் தன்மை போகும். செய்வினைத் தோஷங்கள் விலகும்.

**பன்னீர்விட்டு காயவைத்த வெள்ளை வஸ்திரத்துண்டால் திரிக்கப்பட்ட திரி.**
உத்தம பலன் அத்தனையும் உதயமாகும்.

## விளக்கேற்ற வேண்டிய திசைகளின் பலன்

**கிழக்குத் திசை :**
துன்பம் .நீங்கும், கிகர பீடை விலகும்.

**மேற்குத் திசை :**
கடன் தொல்லை, சனி பீடை கிரக தோஷம், பங்காளிகள் பகை நீங்கும்.

**வடக்குத் திசை :**
திருமணத் தடை, சுப காரியத்தடை, கல்வித்தடை, வேலை வாய்ப்புத் தடை நீங்கும். திரவியம் கிட்டும். சர்வ மங்களங்கள் உண்டாகும்.

**தெற்குத் திசை :**
இத்திசையில் விளக்கேற்றுவது பெரும் பாபம். அபசகுனம்.

## குத்துவிளக்கில் ஒளியேற்றுவதற்கு உரிய பலன்கள்

**ஒருமுகம் ஒளியேற்றுவதால் :**
மத்தியபலன்.

**இருமுகம் ஒளியேற்றுவதால் :**
குடும்ப ஒற்றுமை பெருகும்.

**மூன்றுமுகம் ஒளியேற்றுவதால் :**
புத்திர சுகம் கிட்டும்.

**நான்குமுகம் ஒளியேற்றுவதால் :**
பசு, பூமி, செல்வம் கிட்டும்.

**ஐந்துமுகம் ஒளியேற்றுவதால் :**
அனைத்து நலன்களும் கிட்டும்.

## பொது நியதிகள்

❋ ஒரு திரியிட்டு விளக்கு ஏற்றுவதானால் கிழக்கு முகமாக எரிய வேண்டும்.

❋ சாயங்கால வேளையில் விளக்கேற்றி மகாலட்சுமியை வழிபட்டால், வேலை கிடைக்கும். நல்ல கணவன் வேண்டுவோர் எண்ணம் நிறைவேறும். குடும்ப சுகம் புத்திர பாக்கியம் கிட்டும்.

❋ சிறப்பு நாட்களில் தோங்காய், பழம், பொங்கல், சுண்டல், அவல், கடலை முதலியவற்றை வைத்துப் படைக்க வேண்டும்.

❋ நாள்தோறும் நடத்தும் வழிபாட்டிற்கு நெற்பொரி, முந்திரிப்பழம், கலக்கண்டு, வெல்லம் இவைகளில் ஒன்றை நைவேத்தியமாகப் படைக்கலாம்.

❋ செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம், கார்த்திகை நட்சத்திரம் ஆகிய நாட்களில் திருக்கோயில்களில் குத்துவிளக்கு பூஜை செய்வது நல்ல பலன்கள் தரும்.

❋ நாள்தோறும் திருவிளக்கு வழிபாடு செய்து வரலாம். 108 நாட்களில் இல்லத்தில் மங்கள காரியங்கள் நடக்கும். இடது கையால் மங்கல காரியங்கள் செய்யக கூடாது.

❋ கையால் வீசியும், வாயால் ஊதியும் விளக்கை அணைக்கக் கூடாது. அன்புக் காணிக்கையாக ஒரு அரிசியை தீபத்தட்டில் வைத்து எப்பொழுதும் எம் உள்ளொளி பெருக வேண்டும் என்று பிரார்த்தனை செய்து திரியை மெதுவாக உள்ளே இழுத்து ஒளியை நெய்யில் மறையச் செய்ய வேண்டும். அல்லது புஷ்பத்தால் ஜோதியை ஒத்த வேண்டும்.

❏❏

*With Complements From :*

**West Coast Lanka (Pvt) Ltd.**

*No. 414/18, K. Cyril C. Perera Mawatha,*
*Colombo 13,*
*Sri Lanka.*
*Tel : +94-(0) - 11-2473786*
*+94-(0)-11-5342113*
*Web : www.westcoastlanka.net*

*Fax : +94-(0)-11-2345360*
*Mobile : +94-(0)-777-383314*
*E-mail : wete@sltnet.lk*
*westcoastlank@gmail.com*

உ
சிவமயம்

# நவக்கிரக வழிபாடு

ஆக்கம் : **செல்வி செல்லத்துரை பரமேஸ்வரி**
*ஆசிரியை, க.அபிராமி தமிழ் மகா வித்தியாலயம், கிளாபோக்க, மடுல்கலை.*

**ஒ**வ்வொருவரின் வாழ்விலும் இன்பமும், துன்பமும் உடலுக்கு நோயும், உள்ளத்திற்குக் கவலையும் மாறி மாறி வந்தவண்ணம் இருக்கின்றன. இதற்குக் காரணம் இறைவனின் ஒன்பது அம்சமான நவக்கிரஹங்களே ஆகும்! கிரஹதோஷம் என்பதன் பொருள் இதுவே ஆகும்! நவக்கிரஹ தோஷங்களிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு வாரத்தின் ஏழு நாட்களும் நவக்கிரஹங்களை காலை அல்லது மாலையில் ஒன்பது முறை சுற்றிவர வேண்டும். ஒவ்வொருமுறை சுற்றி வரும்பொழுதும் நவக்கிரஹகளின் ஸ்தோத்திரங்களைக் கூறிக்கொண்டு வழிபடுவதால் அனைத்து இன்னல்களும் நீங்கி நன்மை உண்டாகும்.

## நவக்கிரக வழிபாட்டு ஸ்தோத்திரம்

### சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்!

**பலன்: *வீட்டில் செல்வம் பெருகும்!***

### சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி!

**பலன்: *நோயற்ற வாழ்வு பெருகும்: எல்லா நலன்களும் பெருகும்.***

### செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு!

**பலன்: *எல்லோராலும் வேண்டப்பட்டு சந்தோஷம் பெருகும்!***

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந்த ருள்வாய் பண்ணொலி யானே
உதவியே யாளும் உத்தமா போற்றி!

**பலன்: *நல்லவற்றையே பேசி, நல்லறிவு பெருகும்!***

### குரு

குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன ருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றி கடாட்சித் தருள்வாய்!
***பலன்: செல்வம் பெருகும்: துன்பங்கள் மறையும்.***

### சுக்கிரன்

சுக்கிர மூர்த்தி சுபசுக மீவாய்
வக்கிர மின்றி வரமிகுத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே!
***பலன்: எல்லா நன்மைகளும் பெருகி, நவக்கிரஹங்களின் அருளைப் பெறலாம்.***

### சனி

சங்கடந் தீர்க்கும் சனி பகவானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்!
இச்செகம் வாழ இன்னருள் தாதா!
***பலன்: கடன்கள் நீங்கிச் செல்வம் செழிக்கும்!***

### ராகு

அரவெனும் இராகு ஐயனே போற்றி
இரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மிய போற்றி!
***பலன்: விரோதிகள் அழிந்து எல்லா காரியங்களிலும் வெற்றி கிட்டும்.***

### கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரஷி!
***பலன்: எல்லாத் துன்பங்களும் நீங்கி சுகவாழ்வு வாழலாம்.***

## நவக்கிரகத் தோத்திரம்

### காப்பு

மண்ணுள் உயிர்கட்கு அனைத்தும் மாறாது
நண்ணு நவக்கிரக நண்பு சொலத் - தண்ணுலவு
திங்கள் அணி தங்கும்உயர் செஞ்சடையார் உள்மகிழ்சேய்
கங்கை அருள் ஐயங்கரனார் காப்பு.

### சூரியன்

காசினி யிருளை நீக்கும்
கதிர்ஒளி வீசி எங்கும்
பூசனை உலகோர் போற்றப்
பூசிப்போடு சுகத்தை நல்கும்
வாசி ஏழுடைய தேர்மேல்
மகாகிரி வலமாய் வந்த
தேசிகா எனை ரட்சிப்பாய்
செங்கதி ரவனே போற்றி!

### சந்திரன்

அலைகடல் அதனில் நின்றும்
அன்று வந்து உதித்தபோது
கலைவளர் திங்களாகிக்
கடவுளர் எவரும் ஏத்தும்
சிலைமுதல் உமையாள் பங்கன்
செஞ்சடைப் பிறைவாய் மேரு
மலை வலமாய் வந்த
மதியமே போற்றி!

### செவ்வாய்

வசனநல் தைர்யத் தோடு
மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்ர மங்கள்
போர்தனில் வெற்றி ஆண்மை
நிசமுடன் அவர வர்க்கு
நீள் நிலம் தனில் அளிக்கும்
குசன் நிலமகனாம் செவ்வாய்
குரைகழல் போற்றி போற்றி!

### புதன்

மதன நூல் முதல் நான்கு
மறை புகல் கல்வி ஞானம்
விதமுடன் அவர வர்க்கு
விஞ்சைகள் அருள்வோன் திங்கள்
சுதன்பசு பாரி பாக்கியம்
சுகம்பல கொடுக்க வல்லான்
புதன்கவி புலவன் சீர்மால்
பொன்னடி போற்றி போற்றி!

## குரு

மறைமிகு கலைநூல் வல்லான்
வானவர்க்கு அரசன் மந்திரி
நறைசொரி கற்பகப் பொன்
நாட்டினுக்கு அதிப னாகி
நிறைதனம் சிவிகை மண்ணில்
நீடு போகத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன்
இருமலர்ப் பாதம் போற்றி!

## சுக்கிரன்

மூர்க்கவான் சூரன் வாணன்
முதலியோர் குருவாய் வையம்
காக்க வான்மழை பொய்விக்கும்
கவிமகன் கனகம் ஈவோன்
தீர்க்கவா னவர்கள் போற்றச்
செத்தவர் தமை எழுப்பும்
பார்க்கவன் சுக்கிரன் தன்
பாதபங் கயங்கள் போற்றி!

## சனி

முனிவர்கள் தேவ ரேரும்
மூர்த்திகள் முதலி னோர்கள்
மனிதர்கள் வாழ்வும் உன்றன்
மகிமையது அல்லால் உண்டா?
கனிவுள தெய்வம் நீயே
கதிர்சேயே காகம் ஏறுஞ்
சனியனே உனைத் துதிப்பேன்
தமியனேற்கு அருள்செய் வாயே!

## இராகு

வாகுசேர் நெடுமால் முன்னம்
வானவர்க்கு அமுதம் ஈயப்
போகும் அக்காலை உன்றன்
புணர்ப்பினால் சிரமே அற்றுப்
பாகுசேர் மொழியாள் பங்கன்
பரன் கையில் மீண்டு பெற்ற
ராகுவே உனைத் துதிப்பேன்
ரட்சிப்பாய் ரட்சிப்பாயே!

## கேது

பொன்னையின் னுரத்தில் கொண்டோன்
புதல்வர்தம் பொருட்டால் ஆழி
தன்னையே கடந்து முன்னம்
தண்அமுது அளிக்கல் உற்ற
பின்னைநின் கரவால் உண்ட
பெட்பினில் சிரம்பெற்று உய்ந்தாய்
என்னைஆள் கேதுவே இவ்
விருநிலம் போற்றத் தானே!

## சூரிய பகவான்

சீரருள் மிகச்சு ரந்து செகத்துயிர்
அனைத்துங் காக்கப்
பேரருள் பிதாவு மாகிப்
பெருந்துன்ப இருளையோட்டிக்
காரருள் சுகத்தை நல்கக்
கதிர்களா யிரம்ப ரப்பும்
பாரருள் பரிதிப் புத்தேள்
பதமலர் சென்னி வைப்பாம்.

## சந்திர பகவான்

செழித்திடச் செல்வம் நல்கிச்
செகத்துள உயிர்கட் கெல்லாம்
வழித்திடும் பிதாவுமாகி வல்லிருள்
தன்னை யோட்டித்
தழைத்திட அமுத மாகத்
தக்கதோர் கதிர்பரப்பிப்
பொழிந்திடுஞ் சோம நாதன்
பொற்பாம் தலைக்கொள்வோம்.

## அங்கார பகவான்

வெற்றியும் வீர ஆண்மை விதரணம்
பராக்கிர மக்கள்
சுற்றமாம் தீரம் நல்கிச் சோதரன் தானும் ஆகிப்
பற்றிய பூமி யின்பம் பரன்பிரு தான்னியம் ஓங்கி
எற்றிசைப் புகழும் சேயின்
இருபதம் தலைக்கொள்வோமே.

### புத பகவான்

இணக்கமாம் மகிழ்ச்சி இன்பம் இயலுறும்
புத்தி யுத்தி
வணக்கனாம் கல்வி மேன்மை
வருத்தனம் மகிழ்ச்சி புண்யம்
துணக்கமாம் பந்து வாகித் துலங்கிடச்
சுகங்கள் நல்கும்
கணக்கனாம் எந்தை பாதம் கழலடி
சென்னி வைப்பாம்.

### வியாழ பகவான்

பெருநிறை செல்வம் மேன்மை
பெற்றிடுஞ் சுகங்கல் யாணம்
வருநிரை மரபு நீடி வாய்க்குஞ்ச் ததித ழைக்கத்
தருநிறை ஆஜட ரத்னந் தான்பெற
அருளும் தேவ
குருநிறை வியாழன் பொற்றாள்
குரைகழல் தலைக்கொள்வோம்.

### சுக்கிர பகவான்

திரைகடல் சூழும் பூமி சேர்ந்திடும்
உயிர்கட் கெல்லாம்
நிறைதரும் யோக போகம் நீடிய
மனைவி இன்பம்
தரைபுகழ் வாக னங்கள் தக்கதோ்
சுகத்தை நல்கும்
மறைமொழி புகரின் பொற்றாள்
மலரடி தலைக்கொள்வோமே.

### சனி பகவான்

கோரிய உலகத் தின்கண் குலவிய
உயிர்கட் கெல்லாம்
மீறிடச் சுகம ளித்து மெய்த்தளர்
பிணியை நீக்கிச்
சீறிய துன்பந் தீர்ந்து சிறக்கத்தீர்க்
காயுள் நல்கும்
காரியின் கமல பாதக் கடிமலர்
தலைக்கொள் வோமே.

### இராகு பகவான்

பணியென உருவம் ஆகிப் பட்சமாய்
அமுதம் உண்டு
தணியென உயிர்கட் கெல்லாம்
தகும்படி யோகம் போகம்
துணிவுடன் அளித்து நாளும் துலங்கிட
இன்பம் நல்கும்
மணமுறும் இராகு பொற்றாள் மலரடி
சென்னி வைப்பாம்.

### கேது பகவான்

மாதுமை பாகன் சொற்ற வரத்தினால்
அமுத பானக்
கேதுவும் உடைய னாகி எவ்வுயிர்
களுந்த ழைக்கக்
கோதிலா ஞானம் மோட்சம் குருபக்தி
அருளும் நல்கும்
கேதுவாம் பகவன் பாதம்
கிளர்முடி மிசைக்கொள் வோமே.

❑ ❑

*With Compliments From :*

**HOTEL DE PILLAWOOS**

We Also Bombay Sweets Caters for private Functions
Bussiness Lunches, & Buffet Dinners Etc.

*No. 417, Galle Road, Colombo - 03.*
*Telephone : 2574795*

உ
சிவமயம்

# சைவப் பணியில் சைவமுன்னேற்றச் சங்கம்

கண்டி மாவட்டத்தில் வத்துகாமம் நகரில் 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சைவப் பணியாற்றிடும் உன்னத நோக்குடன் 'சைவ முன்னேற்றச் சங்கம்' என்னும் திருநாமத்துடன் உதயமாகி இரண்டு தசாப்த காலமாக நின்று நிலைபெற்று பணியாற்றி வரும் அமைப்பு சைவ முன்னேற்றச் சங்கமாகும்.

சைவ முன்னேற்றச் சங்கமானது,

- ★ இந்து சமய மேம்பாட்டுக்கு உதவுதல்.
- ★ இந்து சமய கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணுதலும் வளர்த்தலும்.
- ★ சைவச் சிறார்களின் சமய அறநெறிக் கல்வியை விருத்தி செய்தல்.
- ★ ஆலயத் திருப்பணிகளுக்கும், சமூகப் பொதுப் பணிகளுக்கும் உதவுதல்.
- ★ அறப் பணிகளை மேற்கொள்ளல்.

ஆகிய நோக்கங்களை மையமாகக் கொண்டு சைவ உலகுக்கு பணியாற்றி வருகின்றது. சைவசமய வளர்ச்சிக்கும், கல்வி, சமுதாய வளர்ச்சிகளுக்குமாகப் பல்வேறு வகையான செயற்திட்டங்களை உருவாக்கி செயற்பட்டு வரும் சமய நிறுவனமாகும். மலையக மாணவர்களின் கல்வி அறிவினை மேம்பாடு அடையச் செய்யும் வகையில் இலவசக் கல்விக் கருத்தரங்குகளையும், இலவச நூல் வெளியீடுகளையும் மேற்கொண்டு பணியாற்றி வருகின்றது. விசேடமாக க. பொ. த. (சாதாரண தரம்), க. பொ. த. (உயர்தரம்) வகுப்பு மாணவர்களின் கல்விப் பெறுபேற்றினை மலையகத்தில் அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் மேற்குறித்த கல்விப் பணிகளை வருடா வருடம் மேற்கொண்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். க.பொ.த. உயர்தரம் கலைப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக இந்துநாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடத்துறைகளுக்கான உசாத்துணை நூல்களையும், வினா விடைகளையும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் கல்விப் பகுதி ஆக்கம் செய்து பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி கல்விப் பணியாற்றி வருகின்றமை பலரதும் பாராட்டுக்குரிய விடயமாக அமைந்துள்ளது. சைவ முன்னேற்றச் சங்கப் பிரச்சாரப் பிரிவு சமய வளர்ச்சிக்காக அரிய பல சமய நூல்களை ஆக்கம் செய்து வருடாவருடம் வெளியீடு செய்து வருகின்றது. சிவமகிமை, சபரி தரிசனம், குகதரிசனம், சிவ அமுதம் போன்ற நூல்கள் சைவப் பெருமக்களினால் பெரிதும் வரவேற்புப் பெற்ற நூல்களாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. சமய அறநெறிக் கல்வியின் ஊடாக மலையக மாணவர்களின் சமயக் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் 1991 ஆம் ஆண்டு 'அமுத சுரபி அறநெறிப் பாடசாலை' யை ஸ்தாபித்து 2002ஆம் ஆண்டுவரை சிறந்த முறையில் அறநெறிக் கல்வியை வத்துகாம நகரில் புகட்டி வந்தமை

யாவரும் அறிந்த உண்மை. இந்து கலாசார அமைச்சின் கீழ் 'எச்ள/7/56/4/15' என்ற பதிவு இலக்கத்துடன் வத்தேகம கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடனும் 'க/வ/பாரதி' தமிழ் மகா வித்தியாலயத்தில் பிரதி ஞாயிறு தோறும் காலை 8.00 மணி தொடக்கம் 12.30 மணிவரை பதினொரு ஆண்டுகள் உன்னத நிலையில் அறநெறிப் பாடசாலை இயங்கி வந்தது. சில குறுகிய எண்ணம் கொண்ட சுயநலவாதிகளின் செயற்பாட்டின் காரணமாக பல ஆண்டுகளாக மலையகச் சிறார்களுக்கு சமய அறநெறிக் கல்வியை சிறந்த முறையில் போதித்து வந்த அறநெறிப் பாடசாலை தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டது வருந்தத்தக்க விடயமாகும். இக்குறையை போக்கும் நோக்குடன் மாணவரின் சமயக் கலவியைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்யும் பணிக்காக 'அமுதசுரபி அறிவொளி காலாண்டு சமய இதழ் நூல்' ஆக்க வெளியீடு அறிமுகப்படுத்தப்பட்டு இலவசமாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சைவ முன்னேற்றச் சங்கப் பிரச்சாரப் பிரிவினர் 1991ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இந்து சமய மேம்பாட்டுக்கும் அதன் கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஏற்றம் செய்யும் வகையில் அரிய சமய நூல்களை ஆக்கம் செய்தும் தொகுப்பாக்கம் செய்தும் வெளியீடு செய்தும் வருகின்றது. பாடசாலை மாணவர்கள் மத்தியில் சைவசமய விழுமியங்களையும், கலாசார பண்பாட்டு விடயங்களையும் வளர்க்கும் நோக்குடன் இதிகாச புராண சமய மரபுகளை அடியொற்றி நாடகங்களை மேடையேற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். 'மருள்நீக்கியார்', 'யார் பெரியவன்', 'ஞானகுரு'. 'சித்தமெல்லாம் சிவமயம்' போன்ற நாடகங்கள் பாடசாலை மாணவர்களின் சமயக்கல்வியை மேம்படுத்தும் நோக்குடனும் அவர்கள் மத்தியில் ஆன்மீக உணர்வை வளம்படுத்தும் நோக்குடனும் தயாரித்து மேடையேற்றப்பட்டன.

சைவ முன்னேற்றச் சங்கம் ஆலயத் திருப்பணிகளுக்கு தன்னாலான சேவைகளை வழங்கிவருகின்றது. 2000ஆம் ஆண்டு வத்துகாமம் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கும்பாபிஷேக நிகழ்வின் பொழுது கும்பாபிஷேக சிறப்பு மலரினை ஆக்கம் செய்து வெளியீடு செய்தமையைக் குறிப்பிட்டுக் கூறலாம். ஆலயங்களின் சரியைத் தொண்டுகளை மேற்கொள்ளல், சமய சொற்பொழிவுகளை நடாத்தல், அன்னதானம் வழங்கல் போன்ற திருத்தொண்டுகளை காலத்துக்குக் காலம் மேற்கொண்டு வருகின்றது. தானங்களில் சிறந்தது கல்வித்தானம் என்ற முதுமொழிக்கமைய மாணவர்களுக்கு இலவசமாக சமய நூல்களை வழங்கல், கற்றல் உபகரணங்களை வழங்கல், இலவசக் கல்விக் கருத்தரங்குகளை நடாத்தல் போன்ற அறப் பணிகளையும் சங்கம் காலத்துக்குக் காலம் மேற்கொண்டு வருகின்றது.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் சைவப் பணி எதிர்வரும் காலத்தில் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு சைவப் பெருமக்களுக்கு பயனுறுதி வாய்ந்ததாக அமைய உள்ளது என்பதனை மனமகிழ்வுடன் அறியத் தருவதுடன் அனைத்து சைவ நெஞ்சங்களினதும் ஆதரவினை பணிவுடன் வேண்டி நிற்கின்றோம். காலத்தின் தேவையறிந்தும், சைவசமயத்தின் வளர்ச்சி கருதியும் எமது சங்கத்தின் சேவைகளும், நற்பணிகளும் தொடர இறைச் சித்தத்தினை வேண்டிப் பணி தொடரும்......

***எஸ்.ராமதாஸ் ச. நி.***
*பிரச்சாரப் பொறுப்பாளர்,*
*சைவ முன்னேற்றச் சங்கம்,*
*வத்துகாமம்.*

உ
சிவமயம்


# மாண்புறும் பொதுப்பணிச் சேவையாளர் திரு. G. சிவராஜ் அவர்கள் (J.P.)

**வ**த்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலயங்களின் அறங்காவலராகவும் சைவ அபிமானிகள் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றி வரும் திரு. G. சிவராஜ் J.P. அவர்கள் மலையகத்தில் சமயப்பணி, பொதுப்பணி என்பனவற்றை உன்னத முறையில் மேற்கொண்டு வரும் பொதுநல சேவையாளர் ஆவார். பொதுப்பணி, சமயப்பணி என்பவற்றை மேற்கொள்ளுவதில் அதிக ஈடுபாடு உடைய இவர் வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வளர்ச்சிப் பாதையில் இறையருள் சித்தத்துடனும் பொது மக்களின் ஆதரவுடனும் நல்ல அரிய இறைப்பணிகளைப் புரிந்து வருகின்றார். 2000ஆம் ஆண்டில் பல ஆண்டுகளாகக் கும்பாபிஷேக நிகழ்வினையோ, திருப்பணிகளையோ கண்டிராத ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தினை சைவாபிமானிகள் சங்கத் தலைமைப் பொறுப்பினை ஏற்று திருப்பணி வேலைகளை மேற்கொண்டு உன்னத முறையில் கும்பாபிஷேகக் கிரியை நடாத்தி வைத்தார். ஆலயத்தினையும் தேவஸ்தான நிலைக்கு உயர்வுபெற வகை செய்தார். சைவாமபிமானிகள் சங்க நிர்வாக உறுப்பினர்களின் உதவியுடனும், சைவப் பொதுமக்களின் ஆதரவுடனும் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் உயர்வுக்கு தலைமை நிர்வாகியாகத் திகழ்ந்து இறைச் சேவையாற்றி வருகின்றார். ஆலயத்தின் மகோற்சவ நிகழ்வினை பதினைந்து நாட்களாக மாற்றியமைத்ததுடன் மகோற்சவத் திருவிழாக்க காலங்களில் சிறப்பான முறையில் மகேஸ்வரப் பூசையும் அன்னதான நிகழ்வும் உரிய முறையில் வருடாவருடம் நடைபெறுவதற்கான ஒழுங்கமைப்புக்களை மேற்கொண்டு வருகின்றார். G. சிவராஜ் அவர்களின் தலைமையின் கீழ் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்துக்கான சித்திரத்தேர் வடிவமைக்கப்பட்டு தேர்த் திருவிழாக் காலங்களில் பஞ்சரத பவனியாக அம்பாள் திருவீதியுலா பெரும் இறைச்செயல் ஆரம்பம் கண்டது. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகளும் விசேட பூசை நிகழ்வுகளும் உரிய முறையில் நடைபெற்று வருவதற்கு இவரது கடினமான உழைப்பும் ஓர் காரணமாக அமைந்துள்ளது. பல ஆண்டுகளாக பழமையான நிலையில் காணப்பட்ட ஸ்ரீ கதரேசன் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து புதிய கலைப்பொலிவுடனும் தெய்வீகச் சிறப்புடனும் மக்கள் வழிபாட்டுத் தலமாக மாற்றி குறுகிய கால இடைவெளிக்குள் கும்பாபிஷேக நிகழ்வினை நடாத்தி வைப்பதில் G. சிவராஜ் அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் கணனி வகுப்பு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நடைபெறுவதற்கும், சமயக் கல்வி வளர்ச்சி பெறுவதற்கும் இவர் தன்னலான பணிகளை ஆற்றி வருகின்றார். வத்துகாமத்தில் இயங்கி வந்த 'சன் கயின்' இளைஞர் அமைப்பின் தலைவராகப் பதவி வகித்து வந்த காலத்தில் இளைஞர்களில் தொழில் பயிற்சிகளுக்கும், வேலைவாய்ப்புக்களுக்கும் அரிய பல சேவைகளை ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கத்தின் பிரச்சார உத்தியோகத்தவராகவும், அமுதசுரபி அறநெறிப் பாடசாலை பொறுப்பாளராகவும் தலைவராகவும் கடமையாற்றிய காலங்களில் அச்சங்கத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் தன்னாலான சேவைகளை ஆற்றியவர். ஆசிரியத் தொழிலில் ஈடுப்பட்ட காலத்தில் மாணவர்களின் உடற்கல்வி, சமயக்கலிவ வளர்ச்சிகளில் தன் கல்விச் சேவையை வழங்கி பயனுள்ள சேவைகளைப் புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. G. சிவராஜ் அவர்களின் இறைப்பணி பொதுப்பணி தொடர்ந்தும் மலையகத்துக்கும் வத்துகாமத்துப் பிரதேசத்திற்கும் கிடைத்திட வாழ்த்துகின்றோம். ❑

உ

சிவமயம்

# மாண்புறும் பொதுச் சேவையாளர் திரு. V. வீரசிங்கம் அவர்கள் J.P.



மலையகத்தின் மாண்பினை வளம்பெறச் செய்யும் வகையில் சமய, சமூகப் பணிபுரிந்துவரும் பொதுச் சேவையாளர் திரு. V. வீரசிங்கம் அவர்கள் மக்கள் சேவையின் ஊடாக தனது பெயரினை நிலைப்பதித்துள்ளார். கண்டியில் சென்போல்ஸ் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் கணக்கியல் துறையில் தொழிற்தேர்ச்சி பெற்றவர். 1970 முதல் 1980 வரையான காலப்பகுதியில் வர்த்தகத்துறையில் தனது ஈடுபாட்டினை வெளிப்படுத்தி பிரபல்யம் அடைந்தார். 1997ஆம் ஆண்டு வத்துகாமம் சைவாபிமானிகள் சங்க உறுப்பினராக இணைந்து கொண்ட இவர் 1985ஆம் ஆண்டு தொடக்கம் 1992ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அச்சங்கத்தின் தலைமைப் பொறுப்பினையும் வகித்தார். இக்காலவேளையில் வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலயங்களின் பெருவளர்ச்சிக்காகத் தன்னாலான பணிகளை ஆற்றினார். ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் உட்பகுதி ஏற்ற இறக்கமாகச் சமச்சீர் அற்ற நிலையில் காணப்பட்ட வேளையில் அதனைச் சமப்படுத்தி மக்கள் உரிய முறையில் இறை வழிபாட்டினை மேற்கொள்ள வகைசெய்தார். ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் மகோற்சவப் பெருவிழா, நாளாந்தப் பூசைகள், விசேட பூசைகள் ஒழுங்காக உரியவகையில் நடைபெறுவதற்கு தன் அயராத உழைப்பினை வழங்கி இறைபணியாற்றி வந்தவர். ஸ்ரீ கதிரேசன் சுவாமி ஆலயத்தின் வளர்ச்சிக்கும் தன்னாலான சேவைகளை வழங்கி வருவதுடன் கல்விப் பணியிலும் தனது பங்களிப்பினை வழங்கியவர்.

வத்துகாமம் க/பாரதி த. ம. வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக டாக்டர் A. V. சுப்பிரமணியம் J.P அவர்களுடன் இணைந்து பணியாற்றி கல்லூரியின் உயர்வுக்கு வழிசெய்தவர். பாரதி த. ம. வித்தியாலயத்தின் 1992ஆம் ஆண்டுப் புதிய அமைவிட மாற்றத்தின் பொழுதும் புதிய கட்டிடத் திறப்பு விழாவின்போதும் இவரின் பங்களிப்பும் தன்னலமற்ற சேவையும் பாடசாலை வரலாற்றில் முக்கிய பதிவுகளாக அமைந்துள்ளது. இவர் பாரதி த. ம. வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுச் செயலாளராகக் கடமையாற்றிய வேளையில் பாடசாலையின் கல்வி, விளையாட்டு, கலைத்துறைகளின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு வழங்கியவர். பாடசாலை வளாகத்தில் அமைவு பெற்ற ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயத்தினை வளம்பெறச் செய்ய உதவிகள் நல்கியவர்.

தனது பொதுச் சேவையினை ரோட்டரிக் கழகத்தின் ஊடாக மேற்கொண்டார். ரோட்டரிக் கழகத்தின் பாத்தும்பரப் பிரதேசத்தின் செயலாளராக பணியாற்றிய காலத்தில் மக்களின் நலன்களுக்காக பல சேவைகளைச் சிறப்புற மேற்கொண்டவர். அகில

இலங்கை சமாதான நீதவானான இவர் பாத்தும்பர பிரதேசத்து சமாதான நீதவான் அமைப்பின் உப தலைவராகவும் வத்துகாமம் அரச பொது வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் முக்கிய உறுப்பினராகவும் கடமையாற்றியவர். தான் வகித்த பதவிகளின் ஊடாக தன்னாலான பொதுப் பணிகளையாற்றி உன்னத பொதுச் சேவையாளராகச் தன்னை உருமாற்றிக் கொண்டவர். ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் பஞ்சாயத்தாராகப் பதவி வகித்துவரும் இவர் அப்பதவியின் ஊடாக ஆலயம் சிறப்புற பணிபுரிந்து வந்தார். அண்மைக் காலத்தில் உடல் நலக்குறைவினால் பொதுப் பணிகளிலும் சமயப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியாத நிலையிலும் தனது சிந்தையில் சமயப் பொதுப் பணிகளைப் புரிந்திட வேண்டும் என்ற மனஉந்துதலுடன் காணப்படும் பொதுச் சேவையாளர். இவரினால் ஆற்றப்பட்ட கடந்தகால சமய, கல்வி, பொதுப்பணிகள் என்றும் நினைவுகூரக் கூடிய வரலாற்றுப் பதிப்புகள் என்பது வெள்ளிடைமலை.

❑ ❑ ❑


*With Compliments From :*

# A Well Wisher

*With Compliments From :*

# Island Cleaners

Dry Cleaners & washing clothes

No. P. A. 1, Mews Street, Colombo - 02

Mobile : 077-6140362

*With Compliments From :*

# K.T.C. GOLD HOUSE

No. 158, Main Street, Matale.

Mobile : 0777-253107

*With Compliments From :*

# Jeya Tailors

ST. JEMES
HALI-ELA

Mobile : 072-3383925

உ
சிவமயம்

# காலத்தின் காவிய நாயகன் அமரர் ஏ.வி.சுப்ரமணியம் J.P. (A. V. S.)



*''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை''*

என்ற தெய்வீகப் புலவரின் பொய்யா மொழிக் கமைய இலக்கணமாய் விளங்கித் தனது இவ்வுலக வாழ்வினை அர்த்தமுடையதாய் கழித்து இறைபதம் எய்தியவர் 'பிரம்மஸ்ரீ வைத்தியமணி' டாக்டர் A. V. சுப்பிரமணியம் அவர்கள். ஆயுள் வேத வைத்தியராகவும், சோதிட விற்பன்னராகவும், சமூக சேவையாளராகவும், சமாதான நீதவானாகவும், வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலயங்களைப் பரிபாலனம் புரியும் 'சைவாபிமானிகள்' சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், விஸ்வகுல பஞ்சாயத்தாராகவும், பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கப் பொதுச் செயலாளராகவும், வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கத்தின் போஷகராகவும் எனப் பல துறைகளில் பதவிகளை வகித்து அவற்றின் ஊடாக வாழ்நாள் பூராகவும் பொதுப் பணியாற்றிய பெருமகனார் இவர். பொதுச்சேவையில் என்றும் தளராத மனஉறுதியுடனும், பொதுநல நோக்குடனும் பணியாற்றிச் சவால்கள் பலவற்றை எதிர்கொண்டு அவற்றினையெல்லாம் தனது நேரிய சிந்தனையாற்றலாலும், நீண்டகாலப் பொது நலநோக்குப் பார்வையாலும் வெற்றிகொண்டு நிலையான தடயங்களை மலையகச் சமூகத்தவர்களின் முன்னேற்றத்துக்காக பதித்துச் சென்றுள்ளார்.

### மருத்துவத்துறைப் பங்களிப்பு:

ஆயுள்வேத வைத்தியத்துறையில் தன்னை இளமைக் காலத்திலேயே ஈடுபடுத்திக் கொண்ட இவர் அத்துறையில் வியக்கத்தக்க அரிய பல சாதனைகளை நிலைநாட்டி மலையகத்துக்கும் தேசத்திற்கும் புகழினை ஈட்டிக் கொடுத்த சாதனையாளராவர்.

தென்னிந்தியாவிலுள்ள திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி மருத்துவக் கல்லூரியில் ஆயுள்வேத மருத்துவக் கல்வியைக் கற்று 'எல். எம். எஸ்' (L.M.S.) என்னும் பட்டத்தினையும் இலங்கையிலுள்ள சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவக்கல்வி கற்று பட்டச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டவர். சென்னையிலுள்ள ஹனிமன் ஹோமியோபதி வைத்தியக் கல்லூரியில் கற்று ஹோமியோபதி வைத்திய முறையிலும் தேர்ச்சிபெற்றவராய் விளங்கியவர். மேலும் மதுரை தெற்கு வாசல் சித்தாயுர்வேத வித்தியாலயத்திலும், கேரள மலையாளப் பிரதேசத்தைச் சேர்ந்த 'கொல்லம் குரு குலத்திலும்' முறையான மருத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டவர். சித்த ஆயுள்வேத, ஹோமியோபதிக் கல்வியை முறையுடன் கற்றுத்தேறி 'சித்த ஆயுள்வேத ஹோமியோபதி' வைத்தியராகப் பரிணாமம் கண்டவர். தனது இல்லத்தில் 'சிதம்பர சித்தாயுள்வேத ஹோமியோபதி' என்ற பெயருடன் வைத்திய நிலையத்தினை உருவாக்கி தான் இறக்கும் காலம்வரை மருத்துவச் சேவையை மக்களுக்கு ஆற்றி வந்த சேவையாளர்.

கிரந்தி, எக்சிமா, பக்கவாதம், அஸ்மா, காமாலை, வலிப்பு, நரம்புக் கோளாறுகள், மகப்பேறு குழந்தைகளுக்கான மருத்துவம் என்பவற்றுக்கு வைத்தியம் புரிவதில் மிகுந்த சமர்த்தனர். விசேடமாகக் குழந்தைப் பிள்ளைகள் சம்பந்தமான நோய்களையும், வலிப்பு நோயையும் குணமாக்கும் கைராசிக்கார வைத்தியராகச் செயற்பட்டவர். தனது ஆயுள்வேத மருத்துவக் கல்விக் கற்கை நெறியின்பொழுது 'குழந்தை வைத்திய நிபுணராக' பட்டச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டவர் என்பது நோக்கத்தக்கது. தீராத வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டவர்களும், ஆங்கில மருத்துவர்களால் கைவிடப்பட்ட வலிப்பு நோயாளிகளும் இவரை நாடி வந்து மருத்துவச் சிகிச்சை பெற்று பூரண குணமாகிச் சென்றுள்ளனர். இவரின் வலிப்பு நோய் மருத்துவச் சிறப்புக் கண்டு மக்கள் இவரை 'வலிப்பு ராஜா' என்னும் பட்டம் சூட்டி அழைத்து அகம் மகிழ்வு கொண்டனர்.

1965ஆம் ஆண்டு ஜேர்மன் ஜனநாயக சோசலிசக் குடியரசு, ஐக்கிய சோவியச் சமவுடமைக் குடியரசு ஆகிய இருநாடுகளுக்கும் டாக்டர் A. V. சுப்பிரமணியம் அவர்கள் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தூதுக்குழுவுக்குத் தலைமைதாங்கி விஜயம் செய்தவர். அவ்வேளையில் அந்நாடுகளின் மருத்துவத்துறை விஞ்ஞானிகளைச் சந்தித்து மருத்துவம் சம்பந்தமான கலந்துரையாடல்களை மேற்கொண்டவர். தனது சொந்தாக்கங்களாக ஆயுள்வேத மருத்துவ ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து இருநாட்டு விஞ்ஞானிகளின் பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டவர். 1982, 83, 84ஆம் ஆண்டுகளில் இலங்கை பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 'சர்வதேச மாற்று மருத்துவ மகாநாடுகளில் கலந்து கொண்ட டாக்டர் A. V. சுப்பிரமணியம் அங்கு தனது வைத்தியத் துறையின் பாண்டித்துவத்தை வெளிப்படுத்தி பாராட்டுக்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டவர்.

1960, 1965, 1970, 1980 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் இவரால் எழுத்தாக்கம் செய்யப்பட்ட மருத்துவம் சம்பந்தமான கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், மருத்துவ மூலிகை சம்பந்தமான குறிப்புக்கள் வீரகேசரி, தினகரன் ஆகிய ஈழத்து முன்னனிப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வெளிவந்தன. A. V. S. அவர்களால் எழுத்தாக்கம் செய்யப்பட்ட பத்திரிகை ஆக்க வெளியீடுகள் சேகரிக்கப்பட்டு 'சிதம்பர சித்தாயுர்வேத ஹோமியோபதி' வைத்திய நிலையத்தில் பேணிப் பாதுகாத்து வரப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### சோதிடப் பங்களிப்பு:

மருத்துவத்துறைக்கு ஈடாகச் சோதிடக் கலையிலும் A. V. S. அவர்கள் ஈடுபாட்டினை ஏற்படுத்தி அத்துறையிலும் புலமையினையும், சாதனையையும் ஏற்படுத்திய விற்பன்னர். 'சிதம்பர சோதிட நிலையம்' என்ற நாமத்துடன் தனது இல்லத்தில் சோதிடத் தொழிலையும் மேற்கொண்டு வந்தவர். மருத்துவம், சோதிடம் என்பவற்றை தனது தந்தையாரிடம் கற்றறிந்து கொண்டவர். தெய்வ அனுக்கிரகத்துடன் தான் பயின்றறிந்த சோதிடக் கலையை மக்களுக்கு நம்பத்தகுந்த விதத்தில் கூறிச் சென்றவர். வாழ்வியலில் வேதனையாலும் துன்ப துயரங்களாலும் துவண்ட மக்களுக்கு வாழ்வில் பிடிப்பினையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் விதத்தில் சோதிடத்தின் மூலம் நிவாரணம் வழங்கிய நம்பகச் சோதிட விற்பன்னர் A. V. S. என்பது அறுதியிட்ட உண்மை யதார்த்தம் ஆகும். இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இவரது சோதிட நிலையம் நோக்கிச் சாதாரண பிரஜைகள் தொட்டு பிரபல்லியமான அரசியல்வாதிகள் வரை சோதிடம் பார்த்துச் செல்லவந்து சென்றமையைக் குறிப்பிடலாம். தெய்வ அனுக்கிரகக் குறைவு, கிரக அனுக்கிரகக் குறைவு என்பவற்றைத் துல்லியமாகக் கணித்தறிந்து அவற்றுக்கான சாந்தி நிவர்த்திகள், பரிகார முறைகளைத் தெளிவாக எடுத்துரைத்து மக்களுக்கு 'கிரக தோஷச நிவாரணங்களை' ஏற்படுத்திக் கொடுப்பதிலும் வல்லவராக விளங்கினார். கிரக நிலைகளால் ஏற்படும் கிரகபலன்களைச் சரிவர ஆதாரத்துடன் கணித்தறிந்து அவற்றினை மக்களுக்குப் பக்குவமாக எடுத்துரைத்து கிரக ஆராய்ச்சி பலன்களைக் கூறுவது அவரின் தனிப்பாணியாகும். கிரகங்களின் குணாதிசயங்களை வாகடமுறையில் பாடல் வடிவில் பாடி ராசிபலன் கூறும்பொழுது குருகுலக் கல்விக் காலத்தில் 'குரு சீடக் கல்விமுறைப் பாணியை ஞாபகம் ஊட்டும் செயற்பாடாகக் காணப்படும். திருமணப்

பொருத்தங்களையும், தொழில் வாழ்வு உயர்நிலைகளையும் கணித்தறிந்து சொல்ல இவரது இல்லத்தை நோக்கி நாள்தோறும் குழுமும் மக்கள் வெள்ளத்தில் தொலை தூரங்களிலிருந்து வருகை தந்தோரும் அநேகர் காணப்படுவர். வெளிநாடுகளில் வாழும் தமிழ் நெஞ்சங்கள் கூட A. V. S. இன் சோதிட மகத்துவத்தை நன்கறிந்து தமது ராசி பலன்களை இவரின் ஊடகக் கணித்தறிந்து பயன் பெற்றுச் சென்றனர். இவையெல்லாம் A. V. S. இன் சோதிட மகத்துவத்தை புலப்படுத்துவனவாக அமைந்துள்ளன். இவ் யதார்த்த நிதர்சனத்தை உறுதிப்படுத்தும் வகையில் A. V. S. இன் மறைவின் பின்பும் வத்துகாமத்தில் சிதம்பர சோதிட நிலையம் நின்று நிலைபெற்று தனயன் டாக்டர் A. V. S. துளசிராஜாவினால் நடாத்தப்பட்டு மக்களுக்கு சேவைபுரிந்து வரும் தன்மைநோக்கத்தக்கது. A. V. S. இவ்வுலகைவிட்டு நீங்கும் வரை சித்தாயுள்வேத ஹோமியோபதி வைத்தியராகவும், சோதிட விற்பன்னராகவும் சேவை புரிந்து மக்கள் மத்தியில் புகழுடன் வாழ்ந்து விண்ணகம் சென்ற அமரர் ஆவார்.

## தொழிலாளர்க்கான சேவையும் தொழிற்சங்கப் பணியும்:

**த**மது குருதியை தேயிலைச் செடிக்கு உரமாக்கி தமது வாழ்க்கையைத் தினம் கண்ணீரில் கழித்திடும் உண்மைத் தொழிலாளர்களின் துயரங்களைக் களைந்திடவேண்டும். அவர்களும் சமூகத்தில் இதர பிரஜைகள் அனுபவித்து வரும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெற்றிட வேண்டும் என்ற தனது சமூகச் சிந்தனையைப் பணியாக மாற்றியமைத்து மக்கள் சேவைத் தொண்டனாக தன்னை உருமாற்றிக் கொண்டவர். சோசலிச சிந்தனையாளனாகிய இவர் சோசலி சிந்தனைகளை ஏட்டளவில் கண்டறிந்தவராக மாத்திரம் விளங்காது அச்சிந்தனைகளைத் தன்வாழ்வில் செயல்வடிவமாகச் செய்து காட்டிய செயல்வீரன். 1945ஆம் ஆண்டில் தொழிற்சங்கப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டவர். காலத்தையும் பொருள் பணங்களையும் பொதுப் பணிக்காக விரையம் செய்து தனக்கெனவும், தன் குடும்பத்துக்காகவெனவும் சொத்துச் சுகங்களைத் தேடாது பாட்டாளி மக்களுக்காக தான் இறக்கும் காலம்வரை சேவையாற்றி வந்தவர். 1945ஆம் ஆண்டில் இலங்கை இந்திய காங்கிரஸ் அமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்து ''வெள்ளையனே வெளியேறு'' என்ற நோக்குக் கொண்டடு சுதந்திர அகிம்சைப் போராளியாகவும் தோட்டத் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்கும் ஒரு தொழிற்சங்கவாதியாகவும் செயற்பட்டு வந்தவர். இலங்கை இந்தியக் காங்கிரஸில் இணைந்து தொழிலாளர் துயர் துடைக்கவும் பாமர பாட்டாளி மக்கள் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்து சேவையாற்றத் தொடங்கிய A. V. S. அவ்வமைப்பின் தொண்டர் இயக்கத்தலைவராகவும், மாவட்டக் காரியதரிசியாகவும் பதவி வகித்தவர். வத்துகாமத்தில் 1945ஆம் ஆண்டு நடைபெற்ற லஷ்மணபுரி 11வது மகாநாட்டில் மாவட்டத் தலைவராகவும், மகாநாட்டுக் கமிட்டி பொக்கிஷதாரராகவும் பதவிவகித்து மகாநாடு சிறப்புற முன்னின்றுழைத்தவர். இம்மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்க்கமான தீர்மானங்களின் உந்துதல்களினாலேயே பிற்காலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமை வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டது. இம்மகாநாட்டில் நாலாயிரத்துக்கு மேற்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பங்கு கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1962ஆம் ஆண்டில் இலங்கை சமசமாஜக் கட்சியிலும், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திலும் தன்னை உறுப்பினராகவும் இணைத்துக் கொண்டு அவற்றின் ஊடாக மக்களுக்கும், மலையகச் சமூகத்தினருக்கும் சேவையாற்றியவர். ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அகில இலங்கைக்கான உபதலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

ஆரம்ப காலம் தொட்டு நீண்ட காலமாக பெருந்தோட்டத் தொழிலாளிகளின் நலனுக்காகவும் ஏனைய பாட்டாளி வர்க்கத்தினரின் நலனுக்காகவும் உழைத்துவந்த பழம்பெரும் தொழிற்சங்கவாதியும், சமூக சேவையாளருமாகிய A. V. S. 01.09.1965ம் ஆண்டில் இலங்கைத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத் தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கி ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு, ஐக்கிய சோவியச் சமவுடமைக் குடியரசு நாடுகளுக்கு விஜயத்தினை மேற்கொண்டு அங்கு நடைபெற்ற மகா நாடுகளில்

கலந்து சிறப்பித்துள்ளார். சமசமாஜக் கட்சியில் இணைந்து அக்கட்சியின் அங்கத்தவராக இறக்கும்வரை செயற்பட்டு வந்தார். சோசலிச சிந்தனைகளில் உறுதியான கொள்கைப் பிடிப்புக் கொண்ட இவர் தனது வாழ்க்கைக் காலம் வரை இன, மத, குல, மொழி பேதமின்றிப் பல்லின மக்களுக்காகவும் சேவையாற்றி வந்த சமூக சேவையாளர் ஆவார். தோட்டத் தொழிலாளர்களின் சமூக, பொருளாதார மாற்றங்களுக்காக இவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. உண்ணாஸ்கிரிய, எல்கடுவ, பன்வில், கல்பீலி, ராக்சாவை, மடுல்கல, மவுசா, கல்கீரிய, கலாபொக்க, நக்கீஸ், கோம்பரை ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்த A. V. S. அம்மக்களின் வாழ்க்கை நலனிலும் கல்வி, தொழில் முன்னேற்றங்களிலும் அதிதீவிர அக்கறை செலுத்தி அம் மக்களின் நலனுக்காக சேவையாற்றிய மக்கள் சேவகனார் A. V. S. அவர்கள்.

**கல்விப் பணி:**

**வ**த்துகாமம் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் நிலைப்பதிப்புக்கும் அதன் பெருவளர்ச்சிக்கும் டாக்டர் A. V. S. சின் பங்களிப்பும் உழைப்பும் தன்னிகரற்றது. வத்துகாமத்தில் தமிழ் மொழி பேசும் மாணவர் சமுதாயத்துக்காக தமிழ்ப் பாடசாலையொன்று இன்றுவரை நிலைத் திருப்பதற்கு டாக்டர் A. V. சுப்பிரமணியம் அவர்களின் உறுதியான உழைப்பின் வெற்றியே என்பது எவரும் மறுக்க, மறைக்க முடியாத யதார்த்த நிதர்சன வெளிப்பாடாகும். பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் வரலாற்றில் டாக்டர் A. V. S. ஓர் வரலாற்று நாயகன். பாரதி தமிழ் மகாவித்தியாலயத்தின் வரலாற்று வளர்ச்சிப் பாதையில் சரித்திரம் படைத்த வரலாற்று கல்விக் காவலன் A. V. S. பாரதி வளர்ச்சியில் சங்கமித்த ஜீவநதியாவார். வத்துகாமம் தமிழ்மொழிப் பாடசாலையின் வரலாற்றுக் காலப்பகுதியில் 1972ஆம் ஆண்டுக் காலம் மிக முக்கியமான காலமாகும். நெருக்கடி மிகுந்த இக்கால வேளையில் தமிழ்ப் பாடசாலை வத்துகாம நகரத்தில் தொடர்ந்து அமைவதா? அல்லது பன்விலைக்கு இடமாற்றம் செய்யப்படுவதா? என்ற சவால் அரசியல்வாதிகளினால் விடுக்கப்பட்ட பொழுது வத்துகாமத்திலேயேதான் தமிழ்ப் பாடசாலை நிரந்தரமாக அமைந்திட வேண்டும் என்ற அசையாத உறுதிப்பாட்டுடன் அரசினையும், அரசியல்வாதிகளையும் துணிந்து பெற்றோர்களின் முழு ஆதரவுடன் சாத்வீக அணுகு முறையில் எதிர்த்துப் போராடி வத்துகாமம் நகரில் மீண்டும் தமிழ்மொழி பேசும் மக்களுக்காக நிலையான பாடசாலை அமைத்திட வழிகோலிய கல்விக் காவலன் A. V. S. ஆவார். 07.04.1973 இல் x 8479 இலக்க வழக்கை பெற்றோர் சார்பாக தலைமைதாங்கி நீதி மன்றத்தில் தாக்கல் செய்து 28.02.1974 இல் பாடசாலை மீண்டும் வத்துகாமத்தில் தொடர்ந்து இயங்குவதற்கான சாதகமான தீர்ப்பினை பெற்றிட வகை செய்தமை சமூக சேவையாளார் A. V. S. க்கே உரித்தாகும். பெருந்தோட்டப் பிள்ளைகளுக்கு எதற்கு கல்வி அவர்கள் தோட்டங்களிலேயே பிறந்து அங்கே பணிபுரிந்து தேயிலைத் தோட்டங்களுக்கே உரமாக வேண்டும் என்ற சுயநலவாத குறுகிய எண்ணம் கொண்டோர் எண்ணங்களைத் தகர்த்தெறிந்து அவர்களும் கல்விகற்று உயர்ந்த வாழ்க்கை வாழவேண்டும் என்ற சிந்தனையைப் பெருந்தோட்ட மக்களுக்கு ஊட்டிய A. V. S. அதனைச் செயல்வடிவாகவும் மாற்றி அம்மக்களுக்கு வழிகாட்டியவர். நகரப்புற பாடசாலைகளில் குறிப்பாக வத்தேகம நகரப் பாடசாலையில் பெருந்தோட்டப் பகுதியில் வாழும் மக்களின் பிள்ளைகள் கல்விகற்க ஓர் இணைப்புப் பாலமாக விளங்கியவர் டாக்டர் A. V. S. பெருந்தோட்டப் பகுதியில் மக்களின் பிள்ளைகள் இடைவிலகலாக பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திக் கொண்டால் உரிய பெற்றோர்களை தமது இல்லத்துக்கு வரவழைத்து பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம், அதன் முக்கியத்துவங்களை அவர்களுக்கு எடுத்துரைத்தும் அறிவுரை வழங்கியும் அப்பிள்ளைகள் மீளவும் கல்வியைத் தொடர ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கியவர் A. V. S. என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். வத்துகாமம் பாரதி தமிழ் மகாவித்தியாலயத்தின் பெற்றோர் சங்கத் தலைவராகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் நீண்ட காலம் பதவி வகித்து அப்பதவிகளின் ஊடாக பாடசாலைக்கு வேண்டிய பௌதீக, மனித வளங்களை அரசிடமும், கல்வித் திணைக்களத்திடமும் இருந்து பெற்றிட வகை செய்த கல்விச் சேவையாளர் A. V. S. ஆவார். இவரின் மகத்தான கல்விச் சேவையை கௌரவித்து மதிப்பளிக்கும் வகையில் 1996ஆம்

ஆண்டு ''பொன் விழா'' நிகழ்வினை இவருக்காக பாரதி தமிழ் மகாவித்தியாலயம் சிறப்பாக நடாத்தி களிப்புற்றது. 1993 இல் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிய மண்டபக் கட்டிடத்தினையும் A. V. S. அவர்கள் திறந்து வைத்து தன் பாடசாலைக் கல்விச் சேவைக்கு மகுடம் சூட்டிக் கொண்டார். அம் மண்டபமே இன்று அவரின் கல்விச்சேவையின் நினைவாக டாக்டர் A. V. சுப்பிரமணியம் ஞாபகார்த்த மண்டபமாக பெயர் சூட்டப்பட்டு இயங்கி வருகின்றது.

**சமயப்பபணி:**

டாக்டர் A. V. S. அவர்கள் தெய்வ பக்தியுடையவர். தமது குருநாதர் மீதும், குல தெய்வமாகிய வைரவப் பெருமான் மீதும் மிகுந்த பக்தியுடையவர். வத்துகாமத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை அமைத்த யாழ்ப்பாணம் இணுவில் ஊரினைச் சேர்ந்த திரு. வைத்திலிங்கம் பிள்ளையுடனும், அவரின் வழித்தோன்றல் குடும்பத்தாருடனும் A. V. S. மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டவர். அத்தொடர்பினை தான் இறக்கும்வரை கௌரவத்துடன் பேணிவந்தவர். ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை அமைத்திட வகைசெய்த ஸ்தாபகர் வைத்திலிங்கம்பிள்ளை அவர்களின் உருவப் படத்தினை ஆலயத்தில் நிரந்தரமாக வைப்பதற்கும் ஆலயத்தில் யாழ்ப்பாணச் சமூகத்தவர்களுக்கு பஞ்சாயத்தார் பதவி கிடைத்திடவும் வழிகோலியவர் A. V. S. என்பது குறிப்பிடத்தக்கது. 1958 - 1959 ஆம் ஆண்டுக்காலப் பகுதிகளில் வத்துகாமம் சைவாபிமானிகள் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பதவிவகித்து அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலயங்களின் வளர்ச்சிக்காக சமயப் பணியாற்றியவர். 1996 - 1997ஆம் ஆண்டு காலத்தில் இவ்வாலயங்களில் சமூக பஞ்சாயத்தவராகவும் பதவி வகித்து இறக்கும்வரை ஆலயப் பணியாற்றியவர். 1991ஆம் ஆண்டு வத்துகாமம் சைவமுன்னேற்றச் சங்கத்தின் உறுப்பினராக இணைந்து கொண்ட இவர். அச் சங்கத்தின் வளர்ச்சிக்காக ஆக்க பூர்வமான செயல்களில் ஈடுபட்டு அவ்வமைப்பின் பணிதொடர வகைசெய்தார் இவரின் சேவையை மனத்தினில் நிலைநிறுத்தி வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கம் அமைப்பின் காப்பாளர்களில் ஒருவராக இணைத்து கௌரவிப்புச் செய்தது. பாரதி தமிழ் மகா வித்தியாலத்தில் வருடாந்தம் சிறப்பாக நடைபெற்றுவரும் நவராத்திரி விழாக்களில் A. V. S. அவர்கள் கலந்து சிறப்பித்தார். தனது இறப்புக் காலம் வரை பாடசாலையில் நவராத்திரி விரத விழா அனுட்டானங்கள் சிறப்பாக நடைபெறுவதற்கு பொருள் நிதியுதவிகள் வழங்கி விழாச் சிறப்புற உதவியவர். பாடசாலை சமய நிகழ்வுகளில் ஆன்மீக சொற்பொழிவுகள் ஆற்றி மாணவர் சமயக் கல்வி மேம்பட வகை செய்தவர் A. V. S.

A. V. S. இன் சமூகப் பணி, பொதுப் பணிகளைக் கௌரவித்து அரசு 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சமாதான நீதவானாகப் பதவி வழங்கியது. இப்பதவிக்கு முன்பதாகவே அரசு இவரின் சேவையை நீதித்துறையில் ஜுரிப்பதவி வழங்கி பயன்படுத்தியிருந்தமையும் நோக்கத்தக்கது.

A. V. S. வாழ்வுச் சரிதம் அர்த்தமுள்ளது. மலையக சமூகத்துக்கு பயனுறுதி வாய்ந்தது. வத்துகாமநகருக்கும், மலையகத்துக்கும் தேசத்துக்கும் இவரின் பணியால் பெருமையும் கீர்த்தியும் கிடைக்கப்பெற்றது. எவருக்கும் அரிதில் கிடைக்கபெறாத மகத்தான புகழ் A. V. S. க்கே உரித்தானது, தான் இறையடி சேரும் வரை சித்த ஆயுள்வேத ஹோமியோபதி வைத்தியராகவும், சோதிட விற்பன்னராகவும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகவும் பஞ்சாயத்தாராகவும், சமாதான நீதவானாகவும் சங்கப் போஷகராகவும் பதவி வகித்து பொதுச் சிந்தனையுடனும், சேவையுடனும் மரணித்த சேவையாளர் A. V. S.


A. V. S. சின் பூதவுடல் மறைந்தாலும் அவர் ஆற்றிய சேவைகளும், வரலாற்றுப் பதிப்புக்களும் காலத்தால் அழியாதவையாகச் சரித்திரம் படைத்திடும் நினைவுப் பொக்கிஷங்களாக என்று நிலைத்திடும். அதனை உறுதி செய்திடும் வகையில் அவரின் திருநாமத்தினைத் தாங்கி டாக்டர் A. V. சுப்பிரமணியம் அறக்கட்டளை நிதியம் என்ற அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டு அவரின் மறைவின் பின்னார் சமூக பொதுநலச் சேவைகளை ஆற்றி வருகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும்.

'மலையக வரலாற்றின் பொதுச் சேவையில் சரித்திரம் படைத்த A. V. S. என்றும் மக்கள் நினைவலைகளினின்றும் நீங்காத காலத்தின் காவிய நாயகன்.'' ஆவார்.

❑❑

உ
சிவமயம்

# இறை பணியாளர் அமரர் S. ரவீந்திரன் (J.P.)



*''மனதிலுறுதிவேண்டும் வாக்கினிலே இனிமைவேண்டும்*
*நினைவு நல்லது வேண்டும்''*

என்ற மகாகவி புரட்சிக் கவிஞன் பாரதியின் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுத்து வாழ்ந்து காட்டித் தெய்வத்தாழ் சென்றடைந்தவர் "S. R. R." என அன்புடன் அழைத்து மகிழ்வு கொள்ள வைத்த அமரர் S. ரவீந்திரன் அவர்கள்.

புன்னகை பூத்திட்ட முகமும், திடமான உடற்தோற்றமும், உறுதியான மனத்திடமும், வசீகரமான பேச்சாற்றலும், என்றும் இனிமையுடன் கலகலப்பாக எல்லோருடனும் பழகும் இயல்பும் கொண்ட பண்புக்குரியவர். ஆலயப் பணியிலும், சமயப் பொதுப் பணிகளிலும் தனது இளமைக் காலத்தினை முழுமையாகக் கழிந்த இவர்; இளவயதினிலேயே காலனால் கவரப்பட்ட துயர நிகழ்வானது வத்துகாம நகருக்கும் சைவத்திருவுலகுக்கும் பேரிழப்பான ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

வத்துகாமமும் சைவ உலகும் என்றும் நினைவு கொள்ளத்தக்க விதத்தில் ஆலய சமயப்பணியாற்றிய இறைத் தொண்டன் வத்துகாமம் சைவாபிமானிகள் சங்கத்தின் பொருளாளராகப் பதவி வகித்து அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், அருள்மிகு கதிரேசன் ஆலயங்களின் பெரு வளர்ச்சித் தன்மைக்கு உந்து சக்தியாக விளங்கி அரிய பல திருப்பணிகளை அவ்வாலயங்களில் மேற்கொண்டு அவற்றின் வளர்ச்சிக்கு உதவிய இறைச்செம்மல்.

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வரலாற்றின் பொற்காலம் எனச் சிறப்பித்து வர்ணிக்கப்படும் 1998ம் ஆண்டு தொடக்கம் 2005ம் ஆண்டுக் காலப் பகுதியினுள் S. R. R. ஆற்றிய ஆலயச் சமயப்பணி மகத்தானது. 2000ஆம் ஆண்டில் ஆலயம் மீள்புணருத்தாரணம் செய்யப்பட்டு 'திருக்குடமுழுக்கு' கண்டு கொண்டவேளையில் சைவாபிமானிகள் சங்கத்தின் பொருளாளராகப் பதவி வகித்த 'S. R. R.' கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புப்பெற தன்னலமற்ற தன்மையில் பொருள், பணநிதி வளங்களை வழங்கியும் உடல்ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்கியும் உதவி புரிந்தவர். தனது வசீகரமான பேச்சாற்றலாலும், முகமலர்ச்சியாலும், தனது தனிப்பட்ட செல்வாக்குத் தன்மையாலும் பெருந்தொகையான நிதி, பொருள் வளங்களை பொது மக்களிடமிருந்தும், குடும்ப அங்கத்தவர்களிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் வசூலித்து ஆலயப் புணரமைப்பு வேலைகள், கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்புடன் தெய்வத் திருவருளால் நிறைவுபெற பெரும் பங்களிப்பாற்றிய இறைத்தொண்டன்.

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திற்குச் 'சித்திரத்தேர்' இல்லாதகுறையினைப் போக்க வேண்டும் என்ற மனப்பூர்வமான இதய வேட்கையுடன் சிந்தித்து அதனைச்செயல் வடிவில் உருப்பெறச் செய்தவர் அமரர் S. ரவீந்திரன். பல இலட்ச ரூபாக்களைத் தனிப்பட்ட முறையில் தானும், தனது உடன் பிறந்த சகோதரர்களும் வழங்கிப் பொதுமக்களின் நிதி, பொருள் உதவியாதரவுடன் அம்மனுக்குச் சித்திரத்தேர் அமைத்து, ஆலய மகோற்சவ காலத் தேர்த்திருவிழாவின் பொழுது அம்மனை ரதபவனி உலாவர வகைசெய்த இறைப் பணியாளன்.

கட்டிய சித்திரத்தேரினைப் பாதுகாப்பாய்ப் பேணிக் காத்திட ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் முன்பிரகாரத்தில் தேர்க்கொட்டகை அமைத்து அதன் வாயிற் பாதுகாப்புக்காக இரும்புடன் கூடிய தகரக் கேற்றினை அமைத்துத் தந்ததுடன் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலயங்களுக்கான திருவிளக்குகள், பூசை உபகரணப் பொருட்கள், சுவாமிகளுக்கான பட்டு வஸ்திரங்கள் அபிஷேகப் பொருட்கள் மண்டபங்களினதும் பரிவார மூர்த்தங்களினதும் அமைவிடங்களின் முகப்புப் புறங்களுக்கான திரைச்சீலைகள் என்பவற்றினை காலத்துக்குக் காலம் மனமுவந்து வழங்கி இறையருள் இன்பத்தில் திளைத்த இறைபக்தன். மேலும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் மகோற்சவத் திருவிழாக்களில் ஓர் திருவிழா உபயத்தினைப் பொறுப்பேற்று மிகச் சிறப்புடன் வருடாவருடம் நடாத்தி வந்தவர். அவர் மறைவின் பின்னரும் அத்திருவிழா குடும்பத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலயங்களில் வருடா வருடம் நடைபெற்று வரும் பூசைகள், விழாக்கள், விரத அனுட்டான நிகழ்வுகள் அனைத்திலும் ஏதோ ஓர் வகையில் S. R. R. குடும்பத்தினரின் பங்களிப்புக் காணப்படும். அந்தளவு தூரத்துக்கு இறைபக்தியுடன் இறைச் செயலில் அர்ப்பணமாக ஈடுபட்ட இறைத் தொண்டன் இவர்.

ஐயப்ப பக்தனான S. R. R. வருடாவருடம் சபரி தரிசனம் கண்டு இன்புற்ற ஐயப்ப பக்தன். வத்துகாமத்தில் ஐயப்பசுவாமி வழிபாட்டினை மக்கள் மத்தியில் மேற்கொள்ள முன்னோடி வழிகாட்டியாக விளங்கியவர். ஐயப்ப பக்தி மேலீட்டினால் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானப் பிரகாரத்தில் ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கான ஆலயத்தினை அமைத்து மக்கள் வழிபாடு செய்ய வகை செய்த ஐயப்பபக்தன். சபரி மலைத்தரிசன காலங்களில் வருடா வருடம் தேவஸ்தானத்தில் அகில இலங்கை வாழ் சபரி தரிசன ஐயப்ப சுவாமிகளை வரவழைத்து "மகர ஜோதிப் பெருவிழாவினை" வெகு விமர்சையாக நடாத்திக் களிப்புற்ற ஐயப்ப பக்தன். ஐயப்பன் மகிமைகளையும் அவன் வழிபாட்டுச் சிறப்புத் தன்மைகளையும் மக்கள் மத்தியில் பரவச் செய்ய வேண்டும் என்ற இதய வேட்கை காரணமாக வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஊடாகச் 'சபரி தரிசனம்' என்ற பெயரினில் நூற் தொகுப்பினை வெளியீடு செய்த பெருமைக்குரிய பங்குதாரி S. ரவீந்திரன் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். 'சபரி தரிசனம்' நூல் தொகுப்பு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் பாராட்டுக்கும் உதவியளிப்புக்கும் உட்பட்டு சிறப்புக்குரிய நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நூலின் நூறு பிரதிகளை இந்து கலாசார அமைச்சுத் திணைக்களம் கொள்வனவு செய்து நூலினை வளம்காண வகை செய்தது. இப்பெருமைக்கு S. R. R. இன் மனப்பூர்வமான பங்களிப்பும் காரணமாக அமைந்திருந்தது. இவ்விடயம் நன்றியுணர்வுடன் சைவ முன்னேற்றச் சங்கத்தால் நினைவு கூரப்படுகின்றது.

சைவப் பெரு உலகுக்கு என இரண்டு தசாப்த காலமாக வத்துகாம மண்ணில் நின்று நிலைத்து சமய, கல்விப் பணியாற்றி வரும் சைவமுன்னேற்றச் சங்கத்தின் இலவச சமயக்கல்வி நூல் வெளியீட்டு வேலைத் திட்டங்களில் S. R. R. இன் பங்களிப்பு நினைவு கூரப்படுகின்ற ஓர் விடயமாக அமைந்துள்ளது. காலத்துக்கு காலம் நிதியுதவி வழங்கி கல்விக்கான நூலாக்கங்கள் வெளிவருவதற்கு உதவி புரிந்த பொதுநலச் சேவையாளர் S. R. R. என்பது எவரும் அறிந்திடர். காரணம் தனது பொதுச் சேவைகள் வெளியாகி புகழ் பெறுவதில் நாட்டம் கொள்ளாதவர் S. R. R. என்பதனையும் அவர் ஓர் நிதர்சன சேவையாளன் என்பதனையும் சைவமுன்னேற்றச் சங்கத்தினர் உறுதிபடக் கூறிநிற்கின்றனர்.

வத்துகாமத்திலும், அதன் அயற் பகுதிகளிலும் அமைந்துள்ள ஆலயங்களின் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய சமயப் பணியாளன். S. R. R. வத்துகாமம் தமிழ் மொழிப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளிலும், இந்து மன்றத்தின் வளர்ச்சியிலும் அக்கறையுடன் நிதி, பொருள் உதவிகள் வழங்கியும் உடல் ரீதியான ஒத்துழைப்புக்கள் வழங்கியும் பொதுப் பணியாற்றிய பொதுச்சேவையாளார்.

தனது குறுகிய இவ்வுலக வாழ்க்கையில் போற்றத்தக்க சமயப் பொதுப்பணிகளை ஆற்றிய S. ரவீந்திரனின் சமூகப் பணியை மதித்து இலங்கையரசு அவருக்கு கண்டி மாவட்டச் சமாதான நீதவான் பதவியை வழங்கிக் கௌரவித்தமை சிறப்புக்குரியது. வத்துகாமம் அருள்மிகு முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலயங்களின் பெருவளர்ச்சிக்கு அமரர் S. ரவீந்திரனின் பங்களிப்பு காத்திரமானது. ஆலய நிர்வாகக் குழுவினருக்குப் பக்கபலமான துணையாளனாக நின்று தெய்வத்திருவருளால் ஆலயப் பணியாற்றி இறையமரத்துவம் எய்திய திரு. S. ரவீந்திரன் என்றும் இறைதாழினில் இன்புற்று பெருவாழ்வு வாழ்ந்திடப் பிரார்த்தித்து அவர் சமயப் பணியை என்றும் மனதில் நிலைநிறுத்திடுவோம்.

❑ ❑ ❑

உ
சிவமயம்

# அறப்பணி புரிந்திட்ட அமரர் N.ஆனந்தராஜ்

*''நல்லன எண்ணிடல்வேண்டும்; எண்ணியவை செய்திடல்வேண்டும்''*

என்ற ஆன்றோர் கூற்றுக்கு அமைய நல்லனவற்றை மனதில் எண்ணி, எண்ணியவற்றைச் செய்திட்ட பொதுச்சேவைச் செயல் வீரன் அமரர் ஆனந்தராஜ் அவர்கள். வசீகரமான புன்முறுவல் பூத்த வதனமும், இனிமையான பேச்சும், இரக்க சிந்தனையும் கொண்டமைந்த ஆனந்தராஸ் அனைவரின் உள்ளங்களிலும் நல்லோன் என்ற பெயரினை நிலைப்படுத்திக் கொண்டவர். தனது குறுகிய புவி வாழ்க்கையில் பிறர் உயர்வு காணவும்; மலையகச் சமூகம் பயன்கொள்ளவும் வாழ்ந்த உத்தமர். தனது ஆரம்பக் கல்வியை க/ பாரதி தமிழ் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கண்டி சென் அன்ரனீஸ் கல்லூரியிலும் கற்றுக் கொண்ட இவர் இளம் வயதினிலேயே வர்த்தகத்துறையில் ஈடுபட்டு கீர்த்தியுடன் திகழ்ந்து பலர் வாழ்வில் உயர்வு காண வழிகாட்டிய பரோபகாரி. வத்துகாமத்தில் நிலைகொண்டு இருபது ஆண்டுகளாக மலையகத்தில் சைவ, கல்விக் பணி உயர்வுக்காகச் சேவையாற்றி வரும் சைவமுன்னேற்றச் சங்கத்தின் அங்கத்தவராகத் தன்னை இணைத்துக்கொண்ட ஆனந்தராஸ் தனது வாழ்வுக் காலம் வரை சங்கத்தின் உயர்வுக்காகவும், அதன் பொதுப் பணிகள் தொடர்வதற்கும் காத்திரமான பங்களிப்பினை வழங்கியவர். சைவ முன்னேற்றச் சங்கத்தின் கல்வி, சமயப் பணிகளில் அமரரின் தன்னலமற்ற சேவைகள், நிதி, பொருளுதவிகள் காலத்தால் மறக்க முடியாத பதிப்புக்களாக அமைந்துள்ளது. சைவ முன்னேற்றச் சங்கம் சைவச் சிறார்களின் சமயக் கல்வி மேம்பாட்டுக்காக இலவச சமய நூல்கள், உசாத்துணை நூல்கள் என்பவற்றை வெளியீட்டும், இலவசக் கல்விக் கருத்தரங்குகளை நடாத்தியும் வருகின்றது. இக் கல்விச் சேவையில் அமரர் ஆனந்தராஜ் காலத்திற்குக் காலம் உதவிகள் புரிந்து வந்ததுடன் வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காகவும் கல்வி கற்றலுக்கான உபகரணங்களையும் வழங்கிப் பொதுப் பணியாற்றியவர். தனது பிறந்த நாளினில் வருடாவருடம் பின் தங்கிய பிரதேசத்து வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும், பாதணிகளையும் வழங்கி அவர்களை கல்வி கற்க ஊக்குவித்துவந்த பொதுச் சேவையாளன்.

வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ கதிரேசன் ஆலயம், ஸ்ரீ கண்கண்ட விநாயகர் ஆலயம் என்பவற்றில் தனது இறைப் பணியை மனத்தூய்மையுடன் மேற்கொண்டு வந்த இறைச் சேவையாளன். வத்துகாம ஆலயங்களின் வளர்ச்சிக்காக தன்னாலான நிதி, பொருளுதவிகளை வழங்கித் தன் இறைப் பணியை மேற்கொண்டு வந்தவர். பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைவு பெற்ற ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயக் கட்டிடத் திருப்பணியில் இவரது குடும்பத்தாரின் பங்களிப்பும், அமரரின் பங்களிப்பும் முக்கியமான செயலாகக் காணப்பட்டமை அனைவரும் அறிந்த நிதர்சனமாகும். மேலும் அமரர் ஆனந்தராஜ் வத்துகாமம் பாரதி தமிழ் மகாவித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்கும் தன்னாலான பொருள் உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கி வந்த பழைய மாணவனும் ஆவார்.

தனது பொதுப்பணி, இறைப் பணி என்பவற்றை விளம்பரமின்றி மிக அடக்கத்துடன் மலையகச் சமூகம் பயன் கொள்ளத்தக்க வகையில் மேற்கொண்டு வந்த ஆனந்தராஜ் அவர்கள் அண்மையில் யாரும் எதிர்பாராத நிலையில் இறைவனடி எய்தினார். உண்மையான சேவையாளனின் திடீர் மறைவு பேரிழப்பாகும். குறிப்பாக வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். புவி தன்னில் பிறந்தோர் விண்ணகம் எய்துவது இயற்கையின் நியதி என்ற வாழ்வியல் தத்துவத்தை மனதினில் நிலை நிறுத்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப் போமாக! அமரர் ஆனந்தராஜ் அவர்களின் இறைப்பணி, பொதுப்பணி என்பன சைவ முன்னேற்றச் சங்கத்தின் வரலாற்றுப் பாதையில் உறுதியான பதிப்புக்களாக என்றும் நிலைத்து நிற்கும். ❑

உ

# பஞ்ச புராணங்கள்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

உருவமு முயிருமாகி யோதிய வுலகுக்கெல்லாம்
பெருவினை பிறப்புவீடாய் நின்றவெம் பெருமான்மிக்க
அருவிபொன் சொரியுமண்ணா மலையுளா யண்டர்கோவே
மருவிநின பாதமல்லான் மற்றொரு மாடிலேனே.

## திருவாசகம்

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே பொல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாம் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே.

## திருவிசைப்பா

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம் அள்ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம் பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்னை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மார்பாரப் பொழி கண்ணீர் மழைவாருந் திருவடியும் மதுரவாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழ திருவீதிப் பணி செய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

*திருச்சிற்றம்பலம்*



மகா கும்ப ஊர்வலம்



பால்குட பவனி



2004 இல் சித்தித்தேர் வெள்ளோட்டம்



உற்சவ மூர்த்திகள் உள்வீதி உலா



2004 இல் சித்திரத்தேர் கலச ஊர்வலம்



1901 முதல் 2000 ஆம் ஆண்டுவரை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத் தோற்றம்



2000 ஆம் ஆண்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா

*With Best Compliments from*

## HIFAZ INTERNATIONAL (PVT) LTD.

*Importers & Export of*
*Textiles, Garment & Accsessories*
*Wholesale Dealers*

No. 127, 2/7, A.L.S. Supper Market
Colombo 11,
Tel: 5371607, 5371605, 2435668
Fax: 5371605
E-mail: hifaz@eol.lk

## TURBO CITY

*For all kinds of Turbo Chargers*

M.M. CAR SALES (PVT) LTD
185, Kandy Road, Mahara, Kadawatha
Tel: 2928828, 2925525
Fax: 2926660
E-mail: turbo_city@dialogsl.net

## 505 MOTORS (PVT) LTD.

Head Office:
885 Dr. Danister De Silva Mw
P. O. Box. 1862
Colombo 14
Tel: 2423552 Fax: 4406016

Branch:
307 Jayanthi Mw,
Anuradhapura
Tel: 025-2223828

## EDIRISINGHE BROTHERS LTD

567 Prince of Wales Ave.
Colombo -14.
Tel: 2431808, 2434012
Fax: 2336223
E-mail: service@autocourt.net
Web: aubcourt.net

## Wickramaratne Group

Printed by Sri Ganesha Printers Hotline: 0773051171